


## என்னுரை

நான் சுமார் பத்து வருடங்களை முழுமையாக ஒதுக்கித்தான் இலக்கியப்பணி செய்தேன். இது வரை உரைகளாக இருந்த செய்யுள்களுக்கெல்லாம் பாத்திர வடிவம் கொடுத்துப் பாமர மக்களை அவற்றை அறியச் செய்தேன். பொதுவாக உரைகள் விளங்கிய போதும் அதன் உண்மையான அர்த்தம் விளங்குவதில்லை. அதனால் தான் அவற்றைக் கதைகளாக்கினேன்.

பிரசங்கங்கள், கூட்டங்கள், விவாத மேடைகள் என்பனவற்றுக்கு மக்கள் வருவது மிகமிகக் குறைவு. ஏனெனில் மக்கள் அறிந்த விடயங்களே அங்கு பேசப்படுகின்றன. அதனால் நேரத்தை வீணாக்க மக்கள் விரும்புவதில்லை. சுமார் 2000 வருடங்களாக உரை நடையில் இருந்த செய்யுள்கள் யாவற்றையும் கதைகளாக்கினேன். இது இதுவரை நடக்காத ஒரு நிகழ்வு. பயனுள்ள நிகழ்வு என நான் கருதுகின்றேன். அதனால் தான் நான்

யாருக்கும் பயனில்லாத நிகழ்வுகளில் கலந்து கொள்வதில்லை. அதனால் யாரும் நிகழ்த்தாத சாதனைகளை நிகழ்த்த முடிந்தது. இன்று பிரமுகர்கள் பல நிகழ்வுகளுக்குத் தேவைப்படுகின்றார்கள். கோவில்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் நடைபெறும் விழாக்களுக்கு விருந்தினர் தேவைப்படுகின்றனர். மேற்படி நிகழ்வுகள் முடிந்த பின் அவை காணாமல் போய்விடும். அதனால் தான் நான் என்னையும் வளர்த்து, தமிழ் மக்களையும் வளர்க்கும் நிலையை உருவாக்கினேன். பேச்சுக்கள், பிரசங்கங்கள், உதவிகள் யாவும் மேடையை விட்டு இறங்கியதும் மறக்கப்பட்டு விடும். அதற்குச் சாட்சியாகக் கொள்ளலாம். கடந்த 2000 வருடச் சரித்திரத்தைச் சாட்சியாகக் கொள்ளலாம். கடந்த 2000 வருடங்களில் அரசரால் புகழப்பட்டுப் பரிசுகள் கொடுத்த நூல்கள் எவையும் வழக்கில் இல்லை.

அரசர் தமது வால்பிடிப்பவர்களுக்கும், எடுபடிகளுக்குமே பரிசுகள், கௌரவப்பட்டங்கள் கொடுத்தனர் என்று வரலாறு கூறுகிறது. அதனால் தான் நான் போலியான நடைமுறைகளை விளக்கி மக்களுக்குத் தேவையானவற்றைக் கொடுத்து விடுகிறேன். பதினெண் கீழ்க் கணக்கு நூல்களின் உரைகளை வாசித்து விட்டு விளங்காமல் இருந்த பலர் இப்போது கதைகளுடாக விளக்கிக் கொண்டுள்ளனர். அது சரித்திரச் சாதனையாகும். இந்தச் சாதனையை யாராலும் முறியடிக்க முடியாது என்று எண்ணிப் பெருமைப்படுகிறேன். 1330 குறள்களுக்கும் கதை எழுதியுள்ளேன். திருக்குறளுக்குப் புதிய உரை எழுதியுள்ளேன். முழுக் குறள்களையும் நாவலாக்கியுள்ளேன். இவை யாவற்றையும் உலகம் முழுவதும் வாழும் தமிழறிஞர்கள் ஆராயவேண்டும். பின் கருத்துச் சொல்ல வேண்டும். இது தான் எனது விருப்பம்.

எனது நூல்களை பல அறிஞர்களுக்குக் கொடுப்பேன். பலர் வாசிப்பதில்லை. அவர்களுக்கு நேரம் இல்லை என்று கூறுவார்கள். பல முறை சென்றாலும் பயன் ஏற்படாது. அதனால் எனது நூல்களைப் படித்து விட்டு அபிப்பிராயம் கூறியவர்களின் உரைகளைத் தொகுத்து கே.வி.குணசேகரத்தின் சிந்தனைகள் என்ற நூலாக வெளியிடவுள்ளேன். இந்த நூல்களுக்கெல்லாம் அழகான அட்டைப்படங்களை வடிவமைத்துத் தந்த செல்வி. ப.யாழினிக்கு நன்றி.

எனது நூல்கள் அனைத்தையும் சர்வதேச நூலாக இணையத்திலும் வாசிக்கலாம்.

www.gunasegaram.co



அருள் வாழ்த்துரை நமச்சிவாயவே ஞானமும் கல்வியும் நமச்சிவாயவே நானறி விச்சையும் நமச்சிவாயவே நாநவின் றேத்துமே நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே. -அப்பர் தேவாரம் - இலங்கைத் தமிழறிஞராகிய திருவாளர் கே. வி. குணசேகரம் அவர்கள் திருவருட்பயன் சாத்திரம் குறித்தும், மாயை குறித்தும் கதைகளுடன் கூடிய விளக்கங்கள் தந்து நூல்கள் வெளியிட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம். அரிய தத்துவக் கருத்துக்களை கதைகள் மூலமாக விளக்கி எளிதாக்குவதும் மனதில் நிலையாகத் தங்கிட வழிவகுப்பதும் பாராட்டுக்குரிய முயற்சி. பல இடங்களில் கதைகளும், கருத்துக்களும் பொருத்தமுற அமைந்துள்ளன. நுட்பமான, தத்துவங்களைப் படிப்பாயாக விளக்கித் தெளிவாக்குவதில் நூலாசிரியர் திறமை மிக்கவராக விளங்குகிறார். மேலும் ஆராய்ந்து துணிய வேண்டிய செய்திகளும் உள்ளன. இலங்கைத் தமிழறிஞர் திருவாளர் கே.வி. குணசேகரம் அவர்களின் சைவத் தமிழ்ப்பணிகளி மேன்மேலும் சிறந்து தழைக்க வேண்டுமென நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களை சிந்தித்து வாழ்த்துகிறோம்.

திருவாவடுதுறை ஆதீனம்.

திருக்குறள் கதைகள் இன்பத்துப்பால் 1080 – 1330
பதிப்புரை

அன்று புராணபுருடர் ஸ்ரீ மகா விஸ்ணு, வாமனர் அவதாரம் எடுத்து மாபலிச் சக்கரவர்த்தியின் செருக்கையடக்கி அருளினர். மூன்றடி நிலம் யாசித்து முதலிரு அடிகளால் மண்ணையும், விண்ணையும் அளந்தெடுத்தப் பிரகு, மூன்றாவது அடிக்கு இடமில்லாது போகவே மாபலி மா மன்னன் தன் சிரம் தாழ்த்தி அதன் பின் அவதார புருடரின் அடியைத் தாங்கி விஷ்ணுவைப் பணிந்தான். அதன் மூலம் அவனது செருக்கு அழிந்தது.
இன்று உலகெங்கும் அராயகம் தலைவிரித்தாடும் வேளையில் மேற்படி புராணக் கதையின் பெருமையை நாம் நினைவு கூறுவதே போன்றதொரு அதிசயத்தை யாழ்ப்பாண வலய நல்லூர் கல்விக் கோட்க் கல்விப் பணிப்பாளர் திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் நிகழ்த்திக் காட்டியுள்ளார்கள். இதுவரை வள்ளுவனின் திருக்குறளுக்குப் பல தமிழ் மூதறிஞர்கள் உரைகள் எழுதியுள்ளனர். இவற்றையும் மிஞ்சி குறட்பா ஒவ்வொன்றின் பொருளையும், நயத்தையும் தமிழ் மக்கள் நன்கு உணர்ந்தறியும் பொருட்டு, அனைத்துக் குறட்பாக்களின் அடியொற்றிப் பொருள் நயம் சிதைவுறாமல், கதாபாத்திரங்கள் வாயிலாக மக்கள் நலன் கருதி, மூன்று பக்கங்களுக்கு மிகாமல் கதைகளை அமைத்து வரலாறு படைத்துள்ளார் திரு.கே.வி.கணசேகரம் அவர்கள். ஒவ்வொரு குறளுக்கும் ஒரு கதை. இவை யாவும் ஒரே தொடராக அமைந்து வருவதென்றால் அதன் சிறப்பை உணர்த்திக் காட்ட யாம் சொற்களைத் தேடவேண்டியுள்ளது. இரண்டே அடிகளை ஆதாரமாகக் கொண்டு மூன்று பக்க அளவில் ஒரு கதை. அடுத்தடுத்து வரும் குறட்பாக்களுடன் ஒவ்வொரு கதையும் பின்னிப்பிணையும் நேர்த்தியை திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் எவ்வளவு எளிதாக வெளிப்படுத்துகிறார் என்பதை அவர் மட்டுமே அறிந்த புதிர்.
“வள்ளுவன் தன்னை உலகிற்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு” என்று மகாகவி பாரதி செந்தமிழ் நாட்டின் சிறப்பையும், அது சிறப்படைய காரணமாக விளங்கிய வள்ளுவனையும் ஏற்றித் தொழுதுள்ளார். வள்ளுவன் புகழ் எல்லையில்லா வானம் போல் நிலைத்து நீடிக்க அப்பெருந்தகையாத்தருளிய குறட்பாக்களின் வரைவிலக்கணமாய்த் திகழும் வாழ்விலக்கணங்களை அடித்தளமாகக் கொண்டு கதைகள், கட்டுரைகள், இசைக் கீதைகள், நாடகங்கள், நாட்டியங்கள் எனப் பல துறைகளிலும் நூல் ஆக்கங்கள் தோன்றிய வண்ணம் இருக்க வேண்டும். இந்த நற்பணியை நயம்பெறச் செய்து முடிக்கும் நற்றமிழ் இதயங்கள் வரிசையில் தற்பொழுது குணசேகரம் அவர்களும் சேர்ந்திருப்பது செந்தமிழ் நாட்டின் சிறப்பிற்கு மேலுமொரு மயிலிறகணி மாமகுடமாக அமைகிறது எனலாம்.

மணிமேகலைப்

பிரசுரம்,

தமிழ்நாடு,
சென்னை.

திரு.கே.வி குணசேகரம் அவர்களின் பழமொழி 400 என்னும் கதை நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இவரது கதைகள் பலவற்றை நானும் எனது கனடாவில் வாழும் நண்பர்களும் படித்துள்ளோம். மிகவும்

இலகுவானமொழியில் இனிமையாகவும், வாசிக்கும் அனைவருக்கும் விளங்கும்படியும் எழுதுவது இவரது சிறப்பான தன்மை. வேதங்கள், உபநிடதங்கள், இந்து தத்துவங்கள் பலவும் பல முறை வாசித்தாலும் புரிந்து கொள்ள முடியாது. அதனால் பலர் வாசிப்பதில்லை. இவரது நூல்கள் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்கிறது. இவரது நூல்களை கதைகள் மூலம் விளங்கிக் கொண்டமையால் மற்றவர்களுக்கு இந்து தத்துவங்களை விளக்கக் கூடிய அறிவைப் பெற்றுள்ளேன். இவர் எழுதிய இன்பத்தை அள்ளித் தரும் இந்துமதம் என்ற பத்து நூல்களும் கதைநூல்கள். வேத உபநிடத தத்துவக் கருத்துக்கள் சுவையான கதைகளாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சைவ சமயம் பெருமை பெறுகிறது. நான் பாடசாலையில் 60 வருடங்களுக்கு முன் பழமொழிகளை ஆங்கிலத்தில் கற்றேன். அப்போது பாடங்கள் ஆங்கிலமொழி மூலம் போதிக்கப்பட்டமையால் பழமொழிகளையும், இந்து தத்துவங்களையும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. பாடசாலை விட்ட பின்பு ஊரவர்கள் பல்வேறு விதமான பழமொழிகளைக் கூறுவார்கள். அறிஞர்கள் தமது சொற் பொழிவு - களில் பழமொழிகளைத் தாராளமாகச் சபைக்குக் கூறுவர். அவர்கள் பேசும் போது விளங்கும் பழமொழிகள் வீட்டுக்கு வந்த பின் மறந்து விடும். ஆனால் குணசேகரம் அவர்கள் பழமொழிகளை வாழும் - 4 - சமூகப் பிரச்சினைகளுடன் கூறுவதால் வாசித்த பின் மறக்கப்படவில்லை. பழமொழிகள் மனித வாழ்வைச் செம்மைப்படுத்துகின்றன. அதனால் அவை பற்றி மிகவும் தெளிவாக விளக்குவதோடு அதைப் புரியவைக்கப் பொருத்தமான கதைகளும் கூறப்பட்டுள்ளது. கதைகள் யாவும் எழுத்தாளரால் உருவாக்கப்பட்டுள்ளது. எளிமை - யாகவும், தெளிவாகவும், எடுத்துக்கொண்ட பழமொழிகளை விளங்கிக் கொள்ளவும் கே.வி. குணசேகரம் அவதானமாகச் செயற்பட்டிருக்கிறார். அவர் எழுதிய பல கதைகளை நான் வாசித்திருக்கிறேன். தான் எடுத்துக் கொண்ட விடயத்தை மிகவும் எளிமைப்படுத்தி வாசகர்களை உற்சாகப்படுத்தி ஒரு வரியைக் கூடத் தவற விடாது வாசிக்க வைக்கும் திறமை அவரிடம் நிறைந்து காணப்படுகிறது. 3000 மேற்பட்ட ஆக்கங்களைத் தந்த திரு. குணசேகரம் அவர்கள் இன்னும் பல ஆக்கங்களைத் தந்து இந்து சமயத்தை வளம்படுத்தி வளர்த்தல் வேண்டும். பயன்மிக்க அரிய சேவையைச் செய்து இந்துசமயத்தை வளர்க்கும் அவருக்கு எமது குலதெய்வமான வெள்ளெருவைப் பிள்ளையார் என்றும் உதவி செய்கிறார். வாழ்க அவரது நாமம் ’ வளர்க அவரது சேவை.

அன்புடன்,
து.தனபாலசிங்கம். சமாதானநீதவான்.
அகில இலங்கை, கோப்பாய்மத்தி,
கனடா.

## அணிந்துரை

சமணசமயத் துறவியான அரையனார் சங்க காலத்தில் எழுதிய பழமொழிக் கவிதைகளுக்கு இது வரை யாரும் கதைகள் எழுதவில்லை. அவ்வப்போது உரைகளே வெளிவந்தன. அதைவிடப் பழமொழிகளைச் சுவையான கவிதைகளாக அரையனாரைத்

தவிர வேறு யாரும் எழுதவில்லை. பழமொழிக் கவிதைகளைச் சிலர் ஆய்வு செய்துள்ளனர். இவை தவிர ஏராளமான பழமொழிகள் மக்களின் அன்றாட வாழ்வில் வாய்மொழிமூலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. அதுவும் தற்போது அருகிவிட்டதென்றே கூறுதல் வேண்டும். இந்நிலையில் எனது நண்பர் பழமொழி நானூறு என் ற நூலில் உள்ள கவிதைகள் அனைத்திற்கும் அருமையான கதைகளை எழுதி வெளியிட்டுள்ளார். பழமொழிகளை விளங்கிக் கொள்ள நிறைந்த அறிவு தேவை. அதுவும் கவிதை வடிவில் உள்ள பழமொழிகளை விளங்கிக் கொள்வது கடினம். கடினமான பெரியதொரு இலக்கியத்தைப் பாமரர்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் கதைகளாக எழுதியமை பெரியதொருது சாதனையாகும். இரண்டாயிரம் வருடங்களாக எழுதப்படாத நூல்கள் பலவற்றிற்கு உரை, விளக்கம் கதை என்பன எழுதி இரண்டாயிரம் வருடங்களாகப் புரியாதிருந்த பலவற்றை கே.வி. குணசேகரம் புரிய வைத்துள்ளார். அத்துடன் புராண இதிகாசக் கதைகள் பல பழமொழிக் கவிதைகளில் இடம்பெற்றுள்ளன. அவற்றையும் அறியக் கூடியதாக உள்ளது. 4 இவரது நூல்கள் தமிழ் நாட்டில் பெற்ற மதிப்பை இலங்கையில் பெறவில்லை என்று ஒரு பெரியவர் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். முக்கியமாகத் திருவாவடுதுறை ஆதீனம் இவரது சைவ சமய தத்துவ நூல்களின் கதைகள் தத்துவங்களுக்குப் பொருத்தமான மிகச்சிறந்த கதைகளெனப் பாராட்டிக் கௌரவித்துள்ளது. இவரது நோக்கம் சைவ சமயத் தத்துவங்களும், ஒழுக்கக் கருத்துக்களும் மாணவர்களுக்குச் சென்றடைய வேண்டுமென்பதே. அதற்காக மிகவும் எளிமையான சுவையான கதைகளாகத் தத்துவங்களை வெளியிடுகிறார். அதற்கு உதாரணமாகப் பலவற்றைக் கூறலாம். இவற்றுள் மிகப் பெரிய சாதனை பகவத்கீதைக் கதைகளும் திருவருட்பயன் கதைகளும் ஆகும். கதைகளுக்கான விளக்கம் பிரமாதம். அதைவிடக் கதைகள் பிரமாதம். ஒவ்வொரு கதையும் தத்துவங்களை அள்ளிக் கொட்டுகின்றன. “நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி தனது அங்குஷத்தை எனக்குத் தந்துள்ளார். அதனால் தான் அவர் சொல்லச் சொல்ல நான் எழுதுகிறேன்” என்று அவர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். அது உண்மையான வாக்கியம். தெய்வ அருளில்லாமல் பல ஆயிரக் கணக்கான கதைகளை எழுத முடியாது. நடமாடும் பல்கலைக்கழகமாகத் திகழும் திரு. கே. வி. குணசேகரம் அவர்கள் தற்பொழுது திருமந்திரப் பாடல்களுக்குக் கதை எழுதி வருகிறார். இன்னும் பல சமயநூல்களை இலகுபடுத்திக் கதைகள் எழுத நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி உதவ வேண்டும் என்று பிரார்த்தித்து விடைபெறுகிறேன்.

அ. சிவகுருநாதன்.

## அணிந்துரை

காலத்தால் அழியாமல் என்றும் நிலைத்திருக்கும் பழமொழி நானூறு என்னும் நூலில் உள்ள ஒவ்வொரு பழமொழிக்கும் அதன் கருத்துக்கள் சிறிதும் வேறுபடாமல் எல்லோருக்கும் புரியும் வண்ணம் அர்த்தமுள்ள கதைகளாக எழுதி விளக்கியுள்ள எழுத்தாளரின் ஆளுமையைப் பாராட்டுதல் வேண்டும். திரு.கே.வி. குணசேகரம் அவர்கள் சங்ககால நூல்கள் பலவற்றைக் கதைகளாக எழுதி வெளியிட்டு வருகிறார். அவற்றில் சமயம் சம்பந்தமான நூல்களே அதிகமாகக் காணப்படுகின்றன. எமது நாட்டின் தமிழரின் பண்பாடு , காலாசாரம் சீரழிந்து போகும் இக்கால கட்டத்தில் இவ்வகையான நூல்கள் வெளியிடப்படுவது ஆக்கபூர்வமான பணி. இவ்வாறான நூல்கள் இளம் சந்ததியினரிடம் செல்ல வேண்டுமென்ற நோக்கிலேயே இலகு தமிழில் எளிய வடிவில் ஆசிரியர் எழுதி வெளியிட்டு வருகிறார் என எண்ணுகிறேன். பழமொழி நானூறில் ஒவ்வொரு பழமொழிக்கும் ஒவ்வொரு கதை எழுதியுள்ளார். இக்கதைகளை வாசிப்பதன் மூலம் பழமொழி கூறும் வாழ்க்கைத் தத்துவங்களை இலகுவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. சில பழமொழிகளுக்கு நாம் தவறான அர்த்தத்தைப் புரிந்து வைத்துள்ளோம். இவரது

இக்கதைகளை வாசிப்பதன் மூலம் சரியான கருத்துக்களை உணரக்கூடியதாக உள்ளது. எதிர்காலச் சந்ததியினர் நல்ல வழியில் தமது வாழ்க்கைப் பயணத்தைக் கொண்டு செல்வதற்கு சிறந்த வழிகாட்டியாக இந்நூல் அமைந்துள்ளது. இப்பழமொழிக் கதைகளின் ஊடாக ஒரு மனிதன் பிறந்த நாள் முதல் இறக்கும் வரை அவனது வாழ்வில் நடைபெறும் சம்பவங்களைத் தொகுத்து எழுதியுள்ள விதம் பாராட்டப்பட வேண்டியது. இக்கதைகளை வாசிப்பவர்களுக்குத் துன்பம் உண்டாக மாட்டாது. அவர்களது வாழ்வு இன்பமாகவும் சிறப்பாகவும் எதிர்காலத்தில் இருக்கும். - 4 - மக்கள் தமது வாழ்வின் அர்தத்தைப் புரிந்து வாழ வேண்டுமென்பதற்காகப் பல்வேறு நூல்களில் உள்ள நல்ல கருத்துக்களையும் தொகுத்து இந்நூலில் தந்துள்ளார். பல்வேறு விதமான சமயநூல்களின் கருத்துக்கள் நூலில் இடம்பெறுவதால் நாம் அந்நூல்களைப் படித்த தன்மையைப் பெற்று விடுகிறோம். இவரது அனைத்து நூல்களும் பெறுமதியானவை. சைவத்தையும், தமிழையும் வளர்ப்பவை, நாம் அறியாத கருத்துக்கள் பலவும் இவரது நூல்களில் உள்ளன. உதாரணமாகச் சொல்வதானாலும் ‘பிரமமாய் நின்ற சோதியில் உள்ள கருத்துக்களைக் கூறலாம். திருக்குறள் , திருமந்திரம், பகவத்கீதை, ஆசாரக்கோவை, ஆத்தி சூடி, திருவருட்பயன் ஆகிய நூல்கள் இருக்கும் வரை இவரது நாமமும் இருக்கும். ஏனெனில் இவர்தான் இந்நூல்களுக்குக் கதை எழுதியவர். இனியாரும் எழுதுவார்களோ தெரியாது. மிகவும் நெருக்கடியான யுத்த சூழ்நிலையில் அறுபதிற்கு மேற்பட்ட தரமான நூல்களை எழுதி வெளியிட்ட ஆசிரியரது சேவையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இதன் மூலம் மாணவர்களின் மொழி அறிவும், சமய அறிவும் மேம்படுத்தப்பட்டது. இவரது வெளியீடுகளைப் பார்த்தால் இங்கு யுத்தம் நடந்ததா என்று ஐயுற வேண்டியுள்ளது. ஓயாது, சலிப்படையாது எழுதி வரும் திரு.கே.வி. குணசேகரம் இன்னும் பல நூல்களைத் தந்துதவ முருகன் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

செல்வி. ப. இறைமகள், (ஆசிரியர்) B.F.A. Dip.in. Edu

## அணிந்துரை

திரு.கே.வி. குணசேகரம் ஒரு சிறந்த எழுத்தாளர் மட்டுமல்ல, பழந்தமிழ் நூல்களில் உள்ள அருமையான தத்துவக் கருத்துக்களை இன்றைய சமூக நடைமுறைக்கேற்ற படி சுவையாக எழுதி அவற்றைப் பதிவு செய்யும் பதிவாளராகவும் இருக்கிறார். திருக்குறள் பாக்களுக்கும், அண்மையில் எழுதிய இலக்கிய நயம் என்ற பகுதிக்கும் அவர் எழுதிய கதைகள் இதை நிரூபிக்கின்றன. எனது நண்பரான லயன் எஸ். சிவானந்தன் ஆ.து.கு. அவர்கள் எனது வேண்டு கோளுக்காகக் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு 400 அடிமதில் கட்டிக்கொடுத்தார். அதைப் பற்றியும் அவரது ஏனைய சேவைகள் பற்றியும், அம்மதிலால் என்னென்ன பயன்கள் உண்டானதென்றும் மிகவும் சுவையாக எழுதியுள்ளார். அத்துடன் என்னைப் பற்றியும் எனது அரிமாக்கழக நண்பர்களைப் பற்றியும் அவர்கள் செய்து வரும் சேவைகளைப் பற்றியும் எழுதியுள்ளார். அவரது எழுத்துக்கள் சமூகம் சார்ந்தனவாகவே இருக்கும். அத்துடன் அவர் 65 நூல்களை வெளியிட்டுள்ளார். அவை தமிழர்கள் வாழும் நாடுகள் அனைத்திலும் உள்ளன. அத்துடன் றறற.மஎமரயெ.உழஅ இணையத்தளத்திலும் உள்ளன. இதன் மூலம் உலகில் வாழும் தமிழர்கள் இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகளை அறிந்து கொள்கின்றனர். 4 கல்வியைப் பற்றியே அவர் அடிக்கடி எழுதுவார். கல்விப்புலத்தில் நடைபெறும் ஊழல்கள் பற்றியும் அவற்றைத் திருத்தும் வழிமுறைகளைப் பற்றியும் எழுதும் அவர் பெரும் கல்வியியலாளர். கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் உதவியோடும் , நல்லூர் அதிபர் சங்கத்தின் உதவியோடும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு 4 வருடங்களாக மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களை இலவசமாகக் கொடுத்து நல்லூர்க் கோட்டத்தை அகில இலங்கை ரீதியாக முதலிடம் பெறச் செய்தார். அத்துடன் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் 1989-2005 வரை அதிபராகக் கடமையாற்றி அதை வளர்ச்சியின் உச்சிக்குக் கொண்டு சென்றவர். அவரது காலத்தில் நாவலர் தமிழ்

வித்தியாலயம் கல்வியிலும், இணைப்பாடவிதானத்திலும் சிறந்து விளங்கியது. எடுத்த கருமத்தைச் சிறந்த முறையில் செய்து முடிப்பதில் வல்லவர். அவர் எழுதி வெளியிடும் பழமொழிக் கதைகள் சிறுவர்களுக்கும் பெரியோர்களுக்கும் நல்ல பயனைக் கொடுக்கும். 400 கதைகளும் பஞ்ச தந்திரக் கதைகளைப் போல வாழ்க்கைத் தத்துவத்தை உபதேசிக்கின்றன. அவர் இன்னும் ஏராளமான கதைகளை எழுதிக் கோப்பாயின் புகழை வானுயர உயர்த்த வேண்டும்.

லயன். டாக்டர். வை. தியாகராசா M.J.F. கோப்பாய்.

## அணிந்துரை

கவிதைகளாக இருந்த நூல்கள் பலவற்றை சகல மக்களும் புரிந்து சைவசமயத்தை ஒழுக்கமான முறையில் பின்பற்ற வேண்டும் என்பதற்காக அவற்றை ஆறுமுகநாவலர் வசனமாக்கினார். அதனால் சைவசமய மக்கள் அனைவரும் அதைப் பின்பற்றி வாழ்ந்தனர். அதுபோலக் கவிதைகளாக இருக்கும் தத்துவங்களைக் கே.வி. குணசேகரம் கதைகளாக்கி வெளியிடுகிறார். இது இதுவரை இலக்கிய உலகில் நடைபெறாத புரட்சியென்றே கூறலாம். வேதங்கள், உபநிடதங்கள், திருக்குறள், பகவத்கீதை, திருவருட்பயன் என இருந்த தத்துவங்கள் யாவும் கதைகளாக்கப்பட்டுள்ளன. இதனால் எழுத வாசிக்கத் தெரிந்த அனைவரும் அவற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. இது ஒரு சைவ சமயப்புரட்சி என்றே கூறலாம். “இவரது தத்துவக் கதைகள் யாவும் தத்துவங்களுக்குப் பொருத்தமானவை யென்றும், நுட்பமான தத்துவங்கைளப் படிப்படியாக விளக்கித் தெளிவாக்கிப் பொருத்தமான கதைகளைப் புனைவதில் நூலாசிரியர் திறமை மிக்கவராக விளங்குகிறார்” என்றும் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் 23 ஆவது குருமகா சன்னிதானச் சுவாமி சீர்வளர் சீர் சிவப்பிரகாசதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் 07.07.2010 அன்று எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்த திரு.க. மகேசன் அவர்கள் ’ “நீங்கள் 4 ஒரு ஞானி. எதிர்காலத்தில் சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் போல ஒரு “நாயன்மார் பட்டம் பெறுவீர்கள்” என்று கூறியுள்ளார். இவை உண்மையான கூற்றுக்கள். பகவத்கீதை, திருவருட்பயன், மாயை பற்றிய கதைகள், திருமந்திரம் போன்ற பல நூல்கள் இன்று கதை வடிவம் பெற்றுள்ளதால் சைவ சமய தத்துவங்கள் இதுவரை காலமும் இல்லாதவாறு எளிமைப்படுத்தப்பட்டு மக்களை அடைந்துள்ளது. இவர் வெளியிட்ட 65 நூல்களில் பெரும்பான்மையான நூல்கள் பாடசாலைகளிலும், நூலகங்களிலும் உள்ளன. அவற்றைப் பலரும் விரும்பி வாசிப்பதை நான் கண்டுள்ளேன். நான் கிருஸ்ணனின் பக்தன், ‘பகவத்கீதைக் கதைகள்’ என்னை மிகவும் கவர்ந்தது. வடமொழியில் உள்ள சுலோகங்கள் மொழிபெயர்க்கப்பட்டு, விளக்கப்பட்டு, அவைக்குக் கதைகள் எழுதப்பட்டுள்ளன. மிகவும் பயனுள்ள சேவை இது. இப்பொழுது வெளிவந்திருக்கும் பழமொழி நானூறு என்ற சமண சமயப்பழமொழி நூலை ஆசிரியர் சைவசமய கதை நூலாக்கியுள்ளார். அருமையான 400 கதைகளைக் கொண்ட பத்து நூல்களும் இலக்கிய உலகால் வரவேற்கப்படுமென நான் நினைக்கிறேன். அவர் இன்னும் பல அரிய சமய நூல்களைக் கதைகளாக்க வேண்டுமென எனது குலதெய்வமான வெள்ளெருவை விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

க.வேலாயுதபிள்ளை,
முன்னாள்த் தலைவர்

வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலையம், முன்பள்ளி, கூட்டுறவுப் பண்டக சாலை.
நலன்காக்கும் பிரிவு,
கோப்பாய்.

அணிந்துரை

திரு.கே.வி. குணசேகரம் அவர்கள் நான்காயிரத்திற்கு மேற்பட்ட தத்துவங்களுக்குக் கதைகள் எழுதியுள்ளார். அவர் முதலில் தான் எடுத்துக் கொண்ட தத்துவங்களுக்கான விளக்கத்தை எழுதுவார். அதன்பின் அதற்கான கதையை எழுதுவார். அதன் பின் கவிதை வடிவாக இருக்கும் தத்துவக் கவிதையை எழுதுவார். அதற்குப் பின் அதன் உரையை எழுதுவார். மிகவும் இலகுவான தமிழில் எழுதப்படுவதால் எழுதியவை யாவும் எல்லோருக்கும் இலகுவில் புரிந்து கொள்ளும். உயிர்த்துடிப்புள்ள இனிமையான மொழிநடையைக் கடவுள் அவருக்கு அருளியுள்ளதால், வசீகரமான ஆவலைத் தூண்டும் மொழி எவரையும் சலிப்படைய வைக்காது வாசிக்க வைக்கும். கடினமான தத்துவங்கள் யாவும் இலகுவான தமிழில் எழுதப் பெறுவதால் எல்லோராலும் புரிந்து கொள்ள முடிகிறது. தான் எடுத்துக் கொண்ட ஒரு தத்துவத்தை விளக்க அவர் பல்வேறுபட்ட நூல்களின் கருத்துக்களைக் கூறுவார். சிவஞானபோதம், திருவருட்பயன், பகவத்கீதை, திருமந்திரம், திருக்குறள், புராணங்கள், வேதங்கள், உபநிடதங்கள் போன்றவற்றின் தத்துவங்கள் யாவும் மிக மிக இலகுவான தமிழில் எழுதப்பெற்றிருக்கின்றன. திருமந்திரம், திருவருட்பயன், பகவத்கீதை என்பனவற்றின் உயர்ந்த தத்துவங்கள் கதைகளாக எழுதப்பெற்றுள்ளன. இத் தத்துவங்களுக்குக் கதைகள் எழுதமுடியாதென்பதால் இது வரை யரும் கதை எழுதவில்லை. குணசேகரம் அவர்கள் இவற்றிற்குக்கதை எழுதிய 4 போது பலரும் ஆச்சரியப்பட்டனர். எனது நண்பர் ஒருவர் பேராசிரியராக இருக்கிறார். அவர் சொன்னார் ’ “ திருவருட்பயனுக்கு எப்படிக்கதை எழுதுவது? குணசேகரம் எழுதத் தொடங்கியுள்ளார். வாசித்தல் வேண்டும்” என்றார். பின் அதை வாசித்து விட்டு, “உண்மையில் குணசேகரம் கெட்டிக்காரன் தான். 2000 வருடங்களாகத் தத்துவங்களாக இருந்த திருவருட்பயனைக் கதைகளாக்கியதன் மூலம் அது சமூக மயப்பட்டுள்ளது. அதனால் அது நாவலாகித் தமிழ் இலக்கியத்துள்ப் புகுந்து விட்டது” என்று கூறினார். அந்நூலைத் திருவாவடுதுறை ஆதீனம் சிறந்த நூலாக ஏற்றுள்ளது. திருவருட்பயன் போலப் பழமொழி நானூறு என்ற நூலும் இப்போது கதைகளாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பழமொழிகளுக்கும் விளக்கமும், கதையும், உரையும் மிகப் பொருத்தமாக உள்ளன. கதைகள் யாவும் ஒழுக்கத்தைப் போதிப்பனவாக இருப்பதால் அதைச் சிறுவர்கள் வாசித்தல் வேண்டும். திரு. குணசேகரம் அவர்கள் சிறுவர்களைக் கருத்திற்கொண்டே எழுதிவருபவர். பழமொழி நானூறு என்ற கதை நூலில் நூற்றுக்கு மேற்பட்ட கதைகள் பஞ்சதந்திரக் கதைகள் போலமிருகங்களைக் கதாபாத்திரமாக்கி எழுதப்பெற்றுள்ளன. சிறுவர்கள் வாழ்க்கையில் உயரவும், பெரியவர்கள் உலகைப் புரிந்து வாழ்வாங்கு வாழவுமென எழுதப்பெற்ற கதைகள் சிறப்பாக உள்ளளன. இலங்கையின் ஒரு பிரசித்தமில்லாத கிராமத்தில் பிறந்த குணசேகரம் தனது எழுத்துக்கள் மூலம் அதை இமயமாக உயர்த்தி வைத்திருக்கிறார். அவர் இன்னும் பல நூல்களைத் தரல் வேண்டும்.

த. சிவலிங்கம்.

அணிந்துரை

பழந்தமிழ் நூல்களில் உள்ள தகவல்களை மிகவும் இலகுவானதாகவும், புதுமையானதாகவும், கதைகளாகவும் தருபவர் எனது நண்பரான திரு. கே.வி. குணசேகரம் அவர்கள். விளங்கிக் கொள்ள முடியாத தத்துவங்களை மிகவும் இலகுபடுத்திப் படிப்படியாக விளக்கி வாசிப்பவர்களுக்குப் புரிய வைப்பவர் திரு.கே.வி. குணசேகரம். பழந்தமிழ் நூல்களில் உள்ள தத்துவங்களைப் பலர் எழுதுகிறார்கள். அதை விடப் பழந்தமிழ் பாடல்களுக்கு உரை எழுதுகிறார்கள். அவர்கள் எழுதும் உரை பேராசிரியர்களுக்கும் பண்டிதர்களுக்குமே விளங்கும். பேராசிரியர்களும் பண்டிதர்களும் அவற்றை நன்கு கற்றமையால் அவர்கள் அதிலுள்ள குறை நிறைகளைப் பற்றியே பேசி வருகின்றனர். எதுவும் விளங்காதவனுக்குக் குறைநிறைகளைச் சொல்லி என்ன பயன். அதனால் அவர்கள் எழுதும் எழுத்துக்கள் எவையும் பாமரர்களைச் சென்றடைவதில்லை. ஒழுக்கக் கருத்துக்களும், சமய தத்துவங்களும் பாமரர்களைச் சென்றடைந்தால் தான் அவர்கள் அதைப் பின்பற்றுவார்கள். பலரின் எழுத்துக்கள் கற்றவர்களுக்கே விளங்குவதில்லை. அத்துடன் பழந்தமிழ் நூல்களை ஆசிரியர்கள் கற்பிக்கும் போது விளங்கும். வகுப்பை விட்டு வெளியே வந்தால் அவை மறக்கப்பட்டு விடும். ஆனால் குணசேகரத்தின் எழுத்து அப்படியானதல்ல. ஒரு முறை வாசித்தால் விளங்கும். விளங்கவில்லையென்று ஆசிரியரைத் தேடிச் செல்ல வேண்டிய தேவை இல்லை. திரும்பவும் வாசித்தால் விளங்கும். அதை விட வாசித்த விடயங்கள் எதையும் மறக்க முடியாது. அவர் கதை தான் 4 எழுதுவார். அதனுள் பழந்தமிழ் நூல்களின் கருத்துக்களும் தத்துவங்களும் நிறைந்து இருக்கும். அதனால் அவை கதையெனக் கருதி யாவரும் வாசிப்பர். தத்துவங்களைக் கூட விருப்புடன் திரும்பத் திரும்ப வாசகனை வாசிக்க வைக்கும் தன்மை குணசேகரத்தின் எழுத்திற்கு உண்டு. பழமொழி நானூறு அருமையான தத்துவ நூல். அதில் உள்ள நானூறு பழமொழிகளும் வாழ்க்கைக்கு உதவுபவை. அப்படிப்பட்ட உயர்ந்த தத்துவங்கள் சிறுவர்கள் கூட இரசித்து வாசிக்கும் கதைகளாக எழுதப்பட்டுள்ளன. பழமொழி நானூறு என்னும் நூல் பழமொழி களைக் கவிதைகளாகக் கூறுவது. அதற்குப் பலர் உரை எழுதியுள்ளனர் . அவ்வுரைகள் கவிதைகளை விடக் கடினமானவையாக உள்ளன. எழுத்தை ஆளும் அரசனான எழுத்தாளன் தான் எழுதுபவை அனைவர்க்கும் புரியும்படி எழுதுதல் வேண்டும். புரியாமல் எழுதுவதால் பயன்இல்லை. கவிதையை விளங்கிக் கொள்ள முடியாதவர்களுக்காகத் தான் உரைகள் எழுதப்படுகின்றன. ஆனால் எழுதப்படும் உரைகள் கவிதைகளை விடக் கடினமானவையாக இருக்கின்றன. அந்தக் குறையைத் திரு. கே.வி. குணசேகரம் நீக்கியுள்ளார். அவரது உரையும் கதையும் விளக்கமும் இனிமையான விளங்கும் மொழியில் உள்ளதால் சிறுவர்கள் கூட விளங்கிப் படிக்கிறார்கள். இது கடவுளால் குணசேகரத்திற்கு அருளப்பட்ட கொடை. இந்தக் கொடையை அவர் மேன்மேலும் விருத்தி செய்து இன்னும் பல நூல்களை இலகுபடுத்திக் கதைகளாக்கித் தரவேண்டுமென்று விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

எஸ். உதயபாலன் எம்.ஏ
சைவசித்தாந்தம் இந்துசமய கலாசார உத்தியோகத்தர் கச்சேரி,
யாழ்ப்பாணம்.

## அணிந்துரை

எடுத்தகருமத்தை மிகவும் சிறப்பாகச் செய்து முடிக்கும் வல்லமை உள்ளவர் திரு. கே.வி. குணசேகரம் அவர்கள். யாராலும் செய்ய முடியாத பல அரிய செயல்களை இலக்கியத்திலும் கல்வியிலும் செய்து சாதனைகள் புரிந்தவர் குணசேகரம். அவர் ஆசிரியராக இருந்து அதிபராகப் பதவி உயர்வு பெற்று நாவலர் பெருமான் நிறுவிய கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தைப் பொறுப்பேற்ற போது அப் பாடசாலை பெயரளவிலேயே ஒரு பாடசாலையாக இருந்தது. அதன் கல்வித்தரத்தை இலங்கையில்

உள்ள பிரபல பாடசாலைகளின் தரத்திற்கு உயர்த்திப் பிள்ளைகளின் அனுமதியில் கல்வித் திணைக்களத்தைத் தலையிட வைத்தவர். அத்துடன் எதுவுமில்லாதிருந்த அப்பாடசாலைக்கு எல்லாம் பெற்றுக் கொடுத்தவர். அதன்பின் நல்லூர்க்கோட்டக் கல்விப் பணிப்பாளராக நல்லூர்க் கல்விக் கோட்டத்தைப் பொறுப்பேற்றுத் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இலங்கையிலேயே அதிகூடிய மாணவர்கள் சித்தியடைந்த கோட்டமாக மாற்றியவர். பெரும் போர் நடைபெற்ற காலத்தில் இவை நிகழ்த்தப் பெற்றன. எந்தவிதமான கற்றல் உபகரணங்களோ, வசதிகளோ, உணவோ இல்லாதிருந்த நிலையில் நாவலர் தமிழ் வித்தியாலயமும், நல்லூர்க் கல்விக்கோட்டமும் கல்வியில் அகில இலங்கை ரீதியாக முதலிடம் பெற்றன. அத்துடன் 65 இற்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுப் பெரும் சாதனை படைத்தவர். இவற்றுள்ப் பத்து நூல்கள். ஐந்நூறு ரூபாவுக்கு மேற்பட்டன. அந்நூல்கள் இதுவரை யாராலும் எழுதப் பெறாதவை. தத்துவங்களாக இருந்த திருக்குறள், 4 திருமந்திரம், ஆசாரக்கோவை, பகவத்கீதை, திருவருட்பயன் போன்றன நூல்கள் கதைகளாக்கப்பட்டன. இது ஒரு பெரும் சாதனை. அதை விட இந்நூல்கள் இதுவரை கதையாக எழுதப்பெறாதவை. யாரும் செய்யாத சாதனைகள் பல புரிந்த குணசேகரம் இப்பொழுது சாதனையாகப் பழமொழி நானூறு என்ற கவிதை நூலுக்கு உரை விளக்கம், கதைகள் எழுதியுள்ளார். இதுவும் யாரும் இதுவரை நினைத்துக்கூடப் பாராத ஒன்று. இப்போது வாழும் அறிஞர்கள் குணசேகரம் அவர்கள் தொடக்கி வைத்த புதிய பணியைச் செய்தல் வேண்டும். அதை விடுத்து நமது முன்னோர் இரண்டாயிரம் வருடங்களாக எழுதி வரும் உரை நடையையும் ஆய்வையும் கைவிடல் வேுண்டும். உரை நடைகூடப் பலருக்கு விளங்குவதில்லை. விளங்காத உரைநடையை விட்டுத் தத்துவங்களை விளங்கிக் கொள்ளப் புதுப்புது கதைகள் எழுதுங்கள். திரு. குணசேகரம் அவர்கள் இப்பொழுது தான் எழுதிய தத்துவங்களுக்குத் திரும்பவும் கதைகள் எழுதத் தொடங்கியுள்ளார். இந்த வகையில் நூற்றுக்கு மேற்பட்ட திருக்குறள் பாக்களுக்கு மீண்டும் கதைகளை எழுதிப் பத்திரிகையில் வெளியிடுகிறார். குணசேகரத்தைப் போலப் பழந்தமிழ்த் தத்துவங்களுக்குப் புதிது புதிதாகக் கதையெழுதுவோம். குணசேகரம் அவர்களும் இன்னும் இன்னும் எழுது வேண்டுமென நான் அவரது குலதெய்வமான நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியைப் பிரார்த்திக்கிறேன்.

ஆ. தில்லை நடராசா.

## அணிந்துரை

உயிர்கள் தோன்று முன்பே கடவுள் தோன்றி உலகையும், உயிர்களையும் படைத்ததாகச் சமயங்கள் கூறுகின்றன. சைவ சமயத்தை வளர்ப்பதற்காகவும், அதன் மூலம் மக்கள் நல்வாழ்வு பெற வேண்டும் என்று நினைத்தும் பண்டைய அறிஞர்கள் பல்வேறு விதமான தத்துவங்களைக் கூறும் அரிய நூல்களைப் படைத்துள்ளனர். இவை பெரும்பாலும் வடமொழியிலேயே உள்ளன. தமிழ் அறிஞர்கள், மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக அரிய பல நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். இந்த வகையில் இராமாயணம், கந்தபுராணம், மகாபாரதம் போன்ற ஒழுக்கத்தைக் கூறும் கதை வடிவிலான நூல்களும், தத்துவங்களைக் கூறுமு் வேத, உபநிடதங்களும், சமய சாத்திரத்தைக் கூறும் சிவஞான போதம் முதலிய நூல்களும் அடங்கும். கதை வடிவான நூல்கள் பெரியவர்களால் பிரசங்கம் செய்யும் போது இலகுவாக விளங்கின. அத்துடன் இவ்வகையான நூல்கள் வசன நடையில் எழுதப்பெற்ற தால் மக்கள் இரசித்தும் சுவைத்தும் வாசித்தனர். இவை நாடகங்களாக்கப்பட்டு மேடையேற்றப்பட்டன. அதனால் மக்களின் அன்றாட வாழ்வோடு அவை ஒன்றித்து விட்டன. ஆனால் சமய தத்துவ நூல்களும், சாத்திர நூல்களும் தத்துவ வடிவாகவே இன்றும் இருப்பதால் அதைப் பெருங்கல்விமான்களே உணர்ந்து பயன் பெற்றனர். அத்துடன் அவர்கள் எழுதுவதும்,

பேசுவதும் கூடச் சாதாரண மக்களால் புரிந்து கொள்ளப்படவில்லை. அந்தக் குறையைத் திரு. கே.வி. குணசேகரம் அவர்கள் தீர்த்து வைத்துள்ளார் என்றே எண்ணத் தோன்றுகிறது. வேத உபநிடதங்கள், திருக்குறள், திருமந்திரம், பகவத்கீதை, ஆத்திசூடி, ஆசாரக்கோவை, திருவருட்பயன், சிவஞான போதம் போன்ற தத்துவ சாத்திர நூல்களிற் கூறப்பட்ட தத்துவங்கள் யாவும் சிறுவர்களும் உணர்ந்து படிக்கக்கூடிய கதைகளாகக் குணசேகரம் அவர்கள் எழுதியுள்ளார். தத்துவக் கவிதை, அதற்கான உரை, விளக்கம், அதை விளக்கும் கதையென சுமார் நாலாயிரத்திற்கு மேற்பட்ட தத்துவங்களுக்குக் கதை எழுதியுள்ளார். இந்த வகையில் பழமொழி நானூறு என்ற பழமொழியிலான தத்துவக் கவிதைகளின் உரையும், விளக்கமும், கதையும் இலகுவானதாகவும், பொருத்தமான -தாகவும், வாசிக்கத் 4 தூண்டுவனவாகவும் உள்ளன.கதைகளில் மனிதப் பாத்திரங்களும், மிருகப் பாத்திரங்களும், உருவகிக்கப்பட்டுள்ளன. நீதிக்கதைகளாக எழுதப்பட்ட இக்கதைகள் மாணவர்களை மையமாக வைத்தே எழுதப்பட்டுள்ளன. குணசேகரம் அவர்கள் ஆசிரியராக, அதிபராக, கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்தமையால் பெரும்பாலான கதைகள் கல்வி சார் ஒழுக்கத்தைப் பற்றியே கூறுகின்றன. இன்றைய மாணவர்களினது தேவையை உணர்ந்து எழுதப்பட்ட இக் கதைகள் மிகவும் சிறப்பானவை. மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும் அறிந்து கொள்ள வேண்டியவை. நல்லதொரு எதிர்காலச் சமூகம் உருவாக வேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட 400 கதைகளும் பொற்காசுகள் என்றே கூறுதல் வேண்டும். இப்படியான பல்லாயிரம் கதைகளைக் குணசேகரத்திடமிருந்து சமூகம் எதிர்பார்க்கிறது.

சி. கனகராசா ஆசிரியர் ஓய்வு

அணிந்துரை

மதிப்பீட்டுரை மகா சங்கார முடிவின் பின் உலகத்தை மீண்டும் படைத்தற் பொருட்டு பரமாத்மாவாகிய சிவன் நாத வடிவாயும், அதன் பின் விந்து வடிவாயும், அதன் பின் அக்கர வடிவாயும் தோன்றினார். பின் பரமசிவன் சதாசிவ மூர்த்தியாக நின்று தனது நான்கு திருமுகங்களில் இருந்து வேதங்களைத் தோற்றுவித்தார். பின் அதைப் பிரமனுக்கு உபதேசித்தார். இந்த வகையில் தேவா்களுக்கும் முனிவா்களுக்கும் உபதேசிக்கும்படி கூறி நந்திதேவருக்கு உபதேசித்தார். நந்திதேவா் அதைக் கேட்டு மகிழ்ந்து, தனது சிறந்த மாணவரான சனத்குமார முனிவருக்கு அருள, அவா் பூவுலகம் வந்து மெய்கண்ட தேவருக்கு உபதேசித்து, "இந்தச் சிவஞானபோதத்தை உலகோர் உய்யும் வண்ணம் தமிழில் உபதேசிப்பாயாக? என்று கூறினார். அதன்படி மெய்கண்ட தேவா் சிவஞானபோதத்தை உலகோர்க்கு உபதேசிக்கும் வண்ணம் தமிழில் ஆக்கினார் என்பது வரலாறு. அப்படியான வரலாற்றைக் கொண்ட சிவஞானபோதத்திற்குப் பல ஞானிகளும், ரிசிகளும், மகான்களும் உரை எழுதினா். பெரும்பாலான உரை சாதாரண மக்களுக்கு விளங்குவதில்லை. வேதங்கள், உபநிடதங்கள், சைவசித்தாந்த தத்துவங்கள், பகவத்கீதை, திருவருட்பயன் போன்ற கடினமான நூல்களுக்கெல்லாம் கதைகளை எழுதிப் பாமர மக்களும் விளங்கிக் கொள்ள வழியமைத்தவா் குணசேகரம். அந்த வகையில் மிகவும் கடினமான சிவஞானபோதத்திற ்கு உரை எழுதியுள்ளார். உரை இலகுவான தமிழில் 5 உள்ளது. இலகுவான மொழியைத் தேர்ந்தெடுத்து ஆவலைத் தூண்டும் வகையில் தத்துவங்களைக் கதைகளாக்கும் குணசேகரம் சிவஞானபோதத்திலும் அந்த முறையைக் கையாண்டிருக்கிறார். சிவஞானபோதம் சைவசமயத்தின் மூல நூல். இதற்கு முன் சைவத்தின் இன்னொரு மூல நூலான திருவருட்பயன் என்ற நூலில் உள்ள நூறு பாடல்களுக்கும் கதையெழுதியவா். அதில் உள்ள தத்துவங்கள் அனைத்துக்கும் கதைகள் பொருத்தமானவை என்று திருவாவடுதுறை ஆதினம் கூறியுள்ளது. இதற்காகக் கதைகள் எழுதப்படவில்லை. ஆனால் இதற ்குத் திருவருட்பயன் கதைகள் பொருந்தும்

என்று ஆசிரியர் கூறியுள்ளார். சைவ சித்தாந்தத் தத்துவங்கள் முழுவதற்கும் கதைகள் எழுதியமையால் அக்கதைகளை வாசித்து விட்டுச் சிவஞானபோகத்தை வாசிப்பது நல்லது. தமிழறிஞர் கே.வி.குணசேகரம் அவர்கள் சமயம், சமூகம், தமிழ் என்பவற்றிற்கு அளப்பரிய சேவை செய்து வருகிறார்.நாயன்மார்களும், முனிவர்களும், புலவர்களும் பாடிய செய்யுள்கள் பலவற்றைக் கதைகளாக்கி வாசகர்களுக்குக் கொடுத்தால் அவை புத்துயிர்பெற்றுள்ளன. அருமையான செய்யுள்கள் பலவும் புதிய வடிவம் பெற்றமையால் அதை அறியாதிருந்த மக்கள் இப்போது ஆவலுடன் படிக்கின்றனர். தமிழ்ப்புலவர்களின் திறமைகளை இரண்டாயிரம் வருடங்களுக்குப் பின் திரு.குணசேகரம் வெளிப்படுத்தியுள்ளமை ஓர் இலக்கியப் புரட்சியாகும். அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கும் சைவத்திற்கும் பெருந்தொண்டாற்ற வேண்டும் என்று சிவனைப் பிரார்த்திக்கிறேன்.

பொ.பத்மநாதன் ஓய்வுபெற்ற அதிபர் யா.நாமகள் வித்தியாலயம்,
கொக்குவில்.

“இலக்கிய நயம்” என்ற இந்நூலின் ஆசிரியர் தமிழரிஞர் கே.வி. குணசேகரம் அவர்கள் தற்கால சமூகத்தைச் சீர்திருத்தும் எண்ணத்துடனேயே இந்நூலை ஆக்கியுள்ளார். அதற்குக் காரணம் சங்க காலத்தில் காணப்பட்ட ஒழுக்கப் பிறழ்வுகள் தற்காலத்திலும் காணப்படுதலே ஆகும். இன்றைய கால கட்டத்தில் பழம் பெரும் நூல்களை கற்போர் அரிதாகி விட்டனர். அதற ்குக் காரணம் அவை யாவும் உரை நடையில் இருப்பதனால் அதை வாசித்து பொருள் அறியக் கடினமாக உள்ளமையே. இந் நூலின் ஆசிரியர் தற்போதைய மக்களின் குறித்த பிரச்சனைக்குத் தீர்வு காணும் முகமாகவே நூல்களை இலகு நடை மொழியில் ஆக்கி எழுதி வருகின்றார். இந்நூலை வாசிப்பதன் மூலம் தற்போது பெருகி வரும் விடையில்லாத வினாவாக இருக்கும், இருந்து வரும் ஒழுக்கப் பிறழ்வுகள், குற்றச் செயல்கள் யாவற்றுக்கும் ஒரு விடை கிடைக்கும் என ஆசிரியர் எதிர்பார்த்து இந்நூலை எழுதியுள்ள ஆசிரியரது விருப்பு இந்நூலை வாசிப்பவர்கள் மூலம் நிறைவேறும் என நம்புகிறேன். இந்நூலானது பெரியவர்கள் மட்டுமன்றி சிறுவர்கள் கூட கற்றுணரக் கூடிய வகையில் இலகுவாக அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை.இத்தகைய இலகு நடை மொழியில் அமைந்த நூல்களை தொடர்ச்சியாக எமக்களித்து வரும் ஆசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

திருமதி.தபஷ்வினி சந்திரகாந்தன்

அணிந்துரை

திரு கே. வி. குணசேகரம் அவர்கள் திருக்குறள் இலக்கிய நூலினை மக்களுக்குப் பல்வேறு வகையிலே வழங்கி வருகிறார். திருக்குறளைச் சிறிய கதைகளுடாக மனத்திலே பதிய வைக்கிறார். 1330 குறள்களுக்கும் இக்காலத்துக்கேற்ற இலகுவான தமிழில் உரை எழுதியுள்ளார். மற்ற உலகம் பற்றி எண்ணாமல் இந்த உலகத்திலேயே எல்லாம் நடைபெறுவதாக வள்ளுவன் எண்ணியது போல புதிய உரை வகுக்கின்றார். இரண்டு எடுத்துக் காட்டுக்கள் காட்டலாம். “கற்றதனாலாய பயனென்கொள் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்” என்னும் குறளில் “வால் அறிவன்” என்பதற்கு மெய்யறிவுடைய கடவுள் என்று பொருள் கூறுவர் பரிமேலழகர். ஆனால் திரு. குணசேகரம், “பேரறிவு மிக்க நல்ல பண்புடையவர்களை மதிக்காத கல்வியாளனால் எந்தப் பயனும் ஏற்படாது” என்று உரை கூறுகிறார். இங்கு „கடவுள்‟ என்று பொதுவாகக் கூறாமல் எங்கள் கண்ணுக்கு முன்னாலே உள்ள கடவுள் போன்ற பேரறிவு மிக்க நல்ல பண்புடையவர்களைக் குறிப்பிடுகிறார். இதே போன்று “வையத்துள் வாழ ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்” என்னும் திருக்குறளுக்குப் பொருள் எழுதும் போது

பின்வருமாறு கூறுகிறார். “அறநெறிக்குட்பட்டு இவ்வுலகில் வாழும் இல்வாழ்வான், வானுலகில் வாழும ் தெய்வங்களைப் போலப் போற்றப்படுவான்” இக்குறளில் “வானுறையும் தெய்வம்” என்பதற்கு “வானின்கண் உறையும் தேவர்கள்” என்று பரிமேலழகர் 3 பொருட்கூறுகிறார். ஆனால் திரு குணசேகரம் அந்தத் தெய்வத்தை மண்ணுலகிலேயே வைத்துவிடுகிறார். இது எங்களால் உடனடியாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக உள்ளது. திருக்குறளுக்குப் பல நூற்றாண்டுக்கு முன்னரே உரைகள் எழுதப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் சுயமரியாதைக் கழகங்களுக்கும் தமிழ் மேம்பாட்டுக் கழகங்களுக்கும் வழிகாட்டியாக அமைந்தது. குறட்பாக்களை எல ்லோரும் இலகுவாக விளங ்கிக் கொள்ளுதற்காக எளிமையான உரைகள் எழுதப்பட்டன. டாக்டர் மு. வரதராசன் எழுதிய தெளிவுரை நூல் பல நூறு ஆயிரங்களாக அச்சிடப்பட்டன. இன்று எம ்முடைய பண்டைய இலக்கியங ்கள் மீள்பார்வைக்குள்ளாகின்றன. மறு வாசிப்புக்களுக்கு உள்ளாகின்றன. திரு. குணசேகரத்தினுடைய திருக்குறள் உரை இத்தகையதே. ஓர் எடுத்துக்காட்டினைத ் தருகிறேன். “தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் 2 பெய்எனப் பெய்யும் மழை” என்னும் திருக்குறள் இப்பொழுது மறு வாசிப்புக்கு உட்பட்டுள்ளது. பரிமேலழகர் இக்குறளுக்கு “வேறு தெய்வத்தை வணங்காது கணவனைத் தொழுது எழுபவள் பெய் என்று சொல்ல மழை பெய்யும்” என்று உரை கூறினார். இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், “ அவள் எத்தெய்வத்தை தொழுவதில்லை. தன்னுடைய கணவன் தன்னைத் தொழ எழுவாள். அவள் பெய் என்று சொல்ல மழை பெய்யும்” என்று புத்துரை சொல்லப்பட்டது. திரு. குணசேகரம் இவையிரண்டினின்றும் வேறுபட்டு, “தெய்வத்தைப் போல தன் கணவனை மதித்து நடக்கும் பெண் பெய் என்று சொல்லும் போது பெய்யும் மழைக்கு ஒப்பானவள் ஆவான்” என்று புதிய உரை கூறுகிறார். திரு. குணசேகரத்தின் திருக்குறள் உரைமுழுவதும் தூய்மையான தமிழிலேயே எழுதப்பட்டுள்ளது. இதற்காக அவர் புதிய தமிழ்ச் சொற்களை ஆக்கவில்லை.எம்முடைய மொழியின் இயல்பான தமிழ் வழக்கையே கையாண்டுள்ளார். இப்பண்பினை எல்லா உரைகளிலுமே காணக்கூடியதாயுள்ளது. எம்மையும் எம் மொழியையும் உலகுக்குத் தந்துள்ள திருக்குறளை மக்கள் மயப்படுத்த எண்ணுபவர்களுள் திரு. குணசேகரமும் ஒருவர். அவர் பணிக்கு நாம் தலை வணங்குகிறோம். வாழ்த்துகிறோம். இந்நூலை வெளியிடுபவர்கள் தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்பவர்கள். அவர்களுக்கு நாம் நன்றி கூறுகிறோம்.

பேராசிரியர் கலாநிதி
அ. சண்முகதாஸ்
பணிப்பாளர் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

சிகரங்களைத் தொட வேண்டும் எண்பதுகளிலே தனது எழுத்துக்களால் சிறுகதை ,குழந்தை இலக்கியம் ஆகிய துறைகளில் தனது அடையாளத்தைக் குறிப்பிடும் விதத்திலே பதிய வைத்து, இவர் இத் துறைகளிலே பல பரிசுகளையும் விருதுகளையும் பெற ்றவர். தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களை மானிட நேயத்துடனும், நுட்பத்துடனும் அவரது பேனா சொற்சித்திரமாக்கிறது. அவர்களை அவர்களினது இயல்போடு, பலத்தோடும், பலவீனத்தோடும் பதிவு செய்ய வேண்டுமென்ற அவரது ஆர்வத்தையும், முயற்சியையும் இத் தொகுதியிலே உள்ள கதைகள் பிரகடனப்படுத்துகின்றன. யாழ்ப்பாணமும், அது சார்ந்த கிராமங்களும் உயிர் கமழ நம் முன்னே வருகின்றன. இந்த மக்களின் மணமும், அவர்களின் மொழியும் நமக்கு வெகு அருகாகவே பழகி விடுகின்றன. சொற் சிலம ்பமோ, வார்த்தை மினுக்கங்களோ, பாசாங்கோ அற்ற நடை

கே.வி குணசேகரத்தினுடையது. இதன் நடையை அவரது கவனிப்பினது வெளிப்பாடு என்று கூடச் சொல்லலாம். 2 ஆசிரிய, மாணவ உலகம் பற்றி தமிழில் படைப்புக்கள் குறையவே உள்ளன. இத்தொகுதியின் பல கதைகள் இந்த உலகினை நமக்கு வெகு அழகுடனும், யதார்த்தமாகவும் கூறுகின்றன. கே.வி குணசேகரம் கல்வித்துறை சார்ந்தவர். அதிபர், நல்லாசிரியன், இளந்தலைமுறையோடு பழகி, அவர்களை உணர்ந்து உள்ளபடியே அவர்களைப் பற்றி கலைத்தோடு அவர் படைக்கின்ற உலகமும், மனிதரும் தமிழ்ப் படைப்புலகில வளமான சித்திரமெனத் தெரிவிக்கின்றனர். கிராமிய மணங் கமழ்கிற எழுத்து அவரிடம் மேலோங்கி நிற்கிறது. கே.வி குணசேகரம் சிறுகதையாளராகவும், நாவலாசிரியராகவும் இருக்கிறாரென்பதற்கும் மேலாக சொல்லும், செயலும் ஒன்றான நல்ல மனிதராகவும் இருக்கிறாரென்பது மிக முக்கியமானது இதற்காக அவரை நான் மிகவும் நேசிக்கிறேன். கே.வி குணசேகரம் என்ற மனிதன், தமிழ்ப்படைப்பிலக்கியத்தில் சிகரங்கள் பல தொட்டிட எனது மனப் பூர்வமான வாழ்த்துக்கள்.

அன்பின்
செ.யோகநாதன்

**அணிந்துரை**

திரு. கே.வி.குணசேகரம் அவர்கள் மாணவர்களையும் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களையும் நினைத்தே தனது ஆக்கங்களை வெளியிட்டு வருகிறார். நான் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றவன். அத்துடன் சைவப்பாரம்பரியங்கள் அனைத்தையும் பேணுபவன். அவற்றில் நம்பிக்கை கொண்டவன். சைவசித்தாந்தத்தைப் பற்றியும் வேதங்கள் உபநிடதங்கள் திருக்குறள் போன்றவற்றையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலில் பல வகையான நூல்களைத் தேடிக் கற்றேன். எதுவும் விளங்கவில்லை. உரை நூல்களை எடுத்துப் பல முறை வாசித்தேன். ஆனால் விளங்காது.

கே.வி.குணசேகரம் அவர்கள் எனது நண்பர். அவர் எழுதும் நூல்களில் ஒவ்வொரு பிரதி எனக்குத் தருவார். அவற்றை ஒரு முறை வாசித்தாலே போதும். எல்லாம் விளங்கிவிடும். அவ்வளவு இலகுவான மொழி நடை. கதைகள் மூலம் தத்துவங்கள் விளக்கப்படுகின்றன.

“அரிய தத்துவக் கருத்துக்களைக் கதைகள் மூலமாக விளக்கி எளிதாக்குவதும், மனதில் நிலையாகத் தங்கிட வழிவகுப்பதும் பராட்டுக்குரிய முயற்சி. பல இடங்களில் கதைகளும் கருத்துக்களும் பொருத்தமுற அமைந்துள்ளன, நுட்பமான, விளங்கிக் கொள்ள முடியாத தத்துவங்களைப் படிப்படியாக விளங்கித் தெளிவாக்குவதில் நூலாசிரியர் மிகவும் திறமை மிக்கவராக விளங்குகிறார்” என்று திருவாவடுதுறை ஆதீன கர்த்தா சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் கூறியுள்ளார். அது உண்மையான கூற்ற. இப்போது எனக்குத் திருக்குறள், சைவசித்தாந்தம், வேதங்கள், உபநிடதங்கள், திருவருட்பயன், மாயை, பகவத்கீதை என்பன தெளிவாகப் புரிகின்றன. அதற்குக் காரணம் அவற்றிற்கு அவர் கூறிய கதைகள் தான்.

வேதகாலம் முதல் கதைகள் மூலம் வாழ்க்கைத் தத்துவங்கள் விளக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால் அவை முழுமை பெறவில்லை. இப்போது சமயத் தத்துவங்கள் சுமார் பத்தாயிரம் வரை கதைகளாக்கப்பட்டு வரலாறு அமைக்கப்பட்டுள்ளது. திருவருட்பயன் நான் கல்வி கற்கும் காலத்தில் சமய பாடத்திற்குரிய பாடநூலாக இருந்தது. அப்போதைய மாணவர்கள் பொருள் விளங்காது மனனம் செய்து ஒப்புவித்துச் சித்தியடைந்தனர். இப்பொழுதும் திருவருட்பயன் பாடநூலாகவுள்ள போதும் அதை யாரும் கற்பதில்லை. அதை விட ஆசிரியர்கள் கற்பிப்பதில்லை. அதை விட்டு விட்டு வேறு வினாவைத் தெரிவு செய்வர். இப்போ திருவருட்பயன் அருமையான நாவலாகியுள்ளது. சமூகத்தில் நடைபெறும் பிரச்சினைகளைச் சைவசித்தாந்தத்துடன் இணைத்துத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதனால் அது முழுமையாக விளக்கப்படுகிறது.

இதை விட மாயை பற்றிய தத்துவக் கதைகள், மாயையை அலசி ஆராய்ந்து தெளிவுபடுத்தப்பட்டதால் மாயையின் உண்மை நிலை தெளிவாக விளங்குகின்றது. இப்பொழுது அவர் சைவசித்தாந்த நூலான திருமந்திரத்திலுள்ள மூவாயிரம் பாடல்களுக்கும் கதையெழுதி அதன் முதலாம் பாகத்தை வெளியிடுகிறார். அதை நான் படித்தேன். அன்பு செய்வாரை அறிவான் சிவன், அன்புடைமை, இளமை, உயிர் நிலையாமை, கல்லாமை, கல்வி, கள்ளுண்ணாமை, கொல்லாமை, செல்வம் நிலையாமை, நடுவு நிலைமை, நல்குரவு, பிறன் மனை

நாடாமை, புலால் மறுத்தல், மகளிர் இழிவு, யாக்கை நிலையாமை, இவற்றோடு அந்தணர் ஒழுக்கம், அரசாட்சி முறை, அறன் செயான் திறம், அறன் செய்வான் திறம், ஆகமச் சிறப்பு, வேதச் சிறப்பு, குரு பரம்பரை, திருமூலர் தன் வரலாறு கூறல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு விளங்கக் கூடியதாக இனிமையான இலகு தமிழில் கதைகளாக எழுதப்பட்டுள்ளன. கே.வி.குணசேகரம் குறைந்தது பத்தாயிரம் கதைகளாவது எழுதியிருப்பார். ஒரு கதை திரும்பவும் வந்ததில்லை. பகவான் கிருஷ்ணர், திருவள்ளுவர், உமாபதிசிவாச்சாரியார், மெய்கண்டதேவர், வேதவியாசர், பதிணென்கீழ்க் கணக்கு நூல்களை இயற்றிய பெரும் புலவர்கள், திருமூலர் எல்லோருமாகச் சேர்ந்து குணசேகரமாகப் படைக்கப்பட்டுள்ளாரோ என்றே எண்ணத் தோன்றுகிறது. திருமூலர் எதைச் சொல்ல வேண்டும் என்று நினைத்தாரோ அதைக் குணசேகரம் இலகு மொழியில் சொல்லியுள்ளார். இப்படி இதுவரை யாரும் விளக்கமாகச் சொன்னதில்லை. இதைச் சைவஉலகம் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதே எனது விருப்பம். தான் எடுத்துக் கொண்ட பாடலை அது எந்த நூலில் இருந்தாலென்ன அதைப் பல்வேறு சாத்திர நூல்களில் உள்ள பாடல்களோடு ஒப்பிட்டு விளக்கமளித்து வாசகர்களுக்குப் புரியவைப்பதில் கைதேர்ந்தவராகவுள்ளார். இது இறைவன் அவருக்களித்த வரம். திருமந்திரத்தோடு திருக்குறள் பகவத்கீதை பழமொழி நானூறு வேதங்கள் உபநிடதங்கள் மெய்கண்ட சாத்திர நூல்கள் எனப்பல நூல்களை ஒப்பிட்டுக் கட்டுரைகள் கதைகள் எழுதியுள்ளார். அவரது எழுத்துக்களைப் படிப்பதன் மூலம் பல்வேற வகையான பழந்தமிழ் நூல்களைப் படித்த ஓர் உன்னத நிலை உருவாகும்.

கடைசியாக அவர் வெளியிட்ட நூல், “உங்கள் வாழ் நாள் பலனை நீங்களே அறிந்து கொள்ளுங்கள்” என்ற சோதிட நூல். அதில் புராண இதிகாச நாயகன்களின் வாழ்வில் நடைபெற்ற சம்பவங்களைச் சோதிடத்துடன் தொடர்படுத்தியதோடு அவற்றைத் தற்காலத்திற்கு ஏற்றவகையில் இலகுவான மொழிநடையில் எழுதியுள்ளார். சோதிடத்தைப் பற்றி எதுவும் தெரியாத நான் அந்நூலை வாசித்த பின் முழுமையான சோதிட அறிவைப் பெற்றுள்ளேன். திரு.குணசேகரம் அவர்கள் எந்தச் சிக்கலான தத்துவங்களையும் படிப்படியாக விளக்கிப் புரியவைப்பதில் நிபுனத்துவம் பெற்றவர். அந்த வகையில் ஒரு மாமேதையின் சரித்திரப்

புகழ் பெற்ற இலக்கியமான திருமந்திரத்திற்கு அணிந்துரை வழங்குவதில் பெருமைப்படுகிறேன். திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் நான் கல்வி கற்ற நாவலர் தமிழ் வித்தியாலத்தில் அதிபராகப் பதினைந்து ஆண்டுகள் கடமை புரிந்து அப்பாடசாலையை இமயம் அளவிற்கு உயர்த்தியவர். கல்விப் பெறுபேறுகளில் பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. விளையாட்டுத் துறையும் உயர்வடைந்தது. அதன் பின் நான் பணியாற்றிய நல்லூர் கல்விக் கோட்டப் பணிப்பாளராகப் பொறுப்பேற்று போரால் சீர்வழிந்திருந்த யாழ்வலயக் கல்வியை இலங்கையின் ஏனைய மாவட்டங்களைவிட உயர்த்தியவர். அத்துடன் அவர் மிகுதியாகவுள்ள பிரசித்தி பெற்ற நூல்களுக்கும் கதைகள் எழுத வேண்டும் எனப்பிராத்திக்கிறேன்.

து.தனபாலசிங்கம்
சமாதான நீதிவான் (அகில இலங்கை)
கோப்பாய், கனடா

**அணிந்துரை**

சைவசித்தாந்த நூல்கள் உரை வடிவிலேயே இது வரை இருந்தன. பாடலை விட உரையை விளங்கிக் கொள்வது சிரமமானது. உரையை விளங்கிக் கொள்ளக் குருவின் உதவி வேண்டப்பட்டது. கோவில்களில் உபன்நியாசங்கள் நடைபெறும் போது சைவசித்தாந்த நூல்களில் உள்ள தத்துவங்களைப் பற்றிப் பேசப்படுவதில்லை. அது பெரும்பான்மையான மக்களுக்கு விளங்காததால் பிரசங்கிகள் கதை மூலமான தத்துவங்களையே திரும்பத் திரும்பச் சொல்கின்றனர். உதாரணமாகப் பெரிய புராணக் கதைகள். இவை பெரும்பாலும் பாடநூல்களில் இருப்பதால் எல்லோரும் அவற்றை அறிந்துள்ளனர். அதனால் கோவில்களில் இவற்றைக் கேட்போர் அருகி வருகின்றனர். இந்த நிலையில் கே.வி.குணசேகரம் அவர்கள் வேதங்கள், உபநிடதங்கள், சைவசித்தாந்த நூல்களுக்கும் பழந்தமிழ் நூல்களுக்கும் கதைகள் மூலம் விளக்கமளிப்பது மெச்சத்தக்கது. ஒரு விளங்கிக் கொள்ள முடியாத தத்துவத்தைச் சிறுசிறு கூறுகளாகப் பிரித்து இலகுவான விளங்கத்தக்க மொழியில் அதை விளக்குவதோடு அதை உள்ளடக்கிய கதையையும் கூறுவது அத்தத்துவத்தைத் தெளிவாகப் புரியவைக்கிறது. நாம் கற்கும் காலத்தில் தேடிக்கற்கும் நிலை இருந்தது. சமூகத்தில் உள்ள பலர் நுட்பமான தத்துவங்களைக் கற்றிருந்தனர். ஆனால் அவை

கற்றறிந்தவர்களுக்கே விளங்கின. பாமரமக்களுக்கு விளங்குவதில்லை. முன்பு வாழ்ந்த பெரியவர்கள் சிவஞானபோதம், திருவருட்பயன் போன்ற நூல்களிலுள்ள பாடல்களை அனைத்தையும் மனனம் செய்வர். அதன் கருத்தையும் மனப்பாடம் செய்வர். அது போலத் திருக்குறளின் பெரும்பான்மையான குறள்களையும் மனப்பாடஞ்செய்தவார்கள். அவர்கள் பேசத் தொடங்கினால் பல மணி நேரம் பேசுவார்கள். ஆனால் கேட்பதற்கு யாரும் இரார். அதற்குக் காரணம் பேசுவது விளங்காமை தான். ஆனால் திரு.கே.வி.குணசேகரம் திருவருட்பயன், சிவஞானபோதம், திருமந்திரம், திருக்குறள், பகவத்கீதை போன்ற நூல்களிலுள்ள பாடல்கள் அனைத்திற்கும் கதைகளை எழுதியுள்ளார். அவை பெரும்பாலும் கதை வடிவினிலே இருக்கும். அதன் பாத்திரங்கள் சமூகத்தில் வாழும் மனிதர்களாகவே இருப்பார்கள். சமூகத்தில் நடைபெறும் அன்றாட நிகழ்வுகள் மூலம் சமயத்தத்துவங்கள் விளங்கப்படுத்தப்படும். சிவஞானபோதம், திருவருட்பயன், பகவத்கீதை என்பவற்றிலுள்ள மிகமிகக் கடினமான தத்துவங்கள் கூட மிகமிக எளிதாகப் புரியக் கூடியவகையில் கதைகளாக இருக்கும். ஆணவம், கன்மம், மாயை என்பன புரியாத புதிராகவே இன்று வரை இருக்கின்றன. ஆனால் திருவருட்பயன் கதைகள் நூறும், மாயை பற்றிய தத்துவக் கதைகள் ஐம்பதும் மிகவும் எளிமையாக இவற்றைப் புரியவைக்கின்றன. கதைகளைப் போல புரியவைப்பவை உலகில் எவையும் இல்லை. “புத்தி மான் பலவான், புத்திமான் பலவான் ” என்று ஆயிரம் தடவைகள் கூறினாலும் மாணவர்களுக்கு அது புரியாது. புத்திமான் பலவான் என்ற பஞ்சதந்திரக் கதையான சிங்கமும் முயலும் கதையைச் சொன்னால் ஐந்து வயதுப் பாலகனும் புரிந்து கொள்வான். பஞ்ச தந்திரக் கதைகளைப் போலவே திருமந்திரக் கதைகளும் உள்ளன. அதனால் திருமந்திரம் கூறும் தத்துவங்கள் அனைத்தும் மிகவும் இலகுவாக விளங்குகின்றன. திருமந்திரம் மிகவும் கடினமான கடைப்பிடிக்க முடியாத தத்துவங்களைக் கொண்ட உயர்ந்த நூல் என்ற எண்ணத்தை மாற்றி அது ஓர் அரிய இலகுவாகக் கற்கக் கூடிய தத்துவங்களைக் கொண்ட உயர்ந்த நூல் என்பதைப் பொருத்தமான கதைகள் மூலம் திரு.கே.வி.குணசேகரம் உணர்த்துகிறார்.

சிவன் எளிமையானவன், எங்கும் இருப்பவன், பாகுபாடு காட்டாதவன், பற்றற்றவன் என்றும், உலகம் மாறுபாடு உடையது. மாற்றங்களைக்

கொண்டது. நிரந்தரமில்லாதது என்றும் தத்துவங்கள் கூறியவற்றை கே.வி.குணசேகரம் கதைகளாகக் கூறும் போது ஒவ்வொருவரும் அக்கதைகள் தத்தமது குடும்பங்களுக்குள்ளே நடைபெறுவதாக நினைக்கிறார்கள். அந்த நினைவு பாடல்களையும் அதிலுள்ள உண்மைகளையும், தத்துவங்களையும் உணரச் செய்து மனதில் நிலையாகத் தங்கி இருக்க வழி செய்கிறது.

திருவருட்பயன், சிவஞானபோதம், திருமந்திரம், பகவத்கீதை போன்ற அரிய நூல்களை வாசிப்போர் குறைந்து கொண்டு வரும் இவ்வேளையில் அருமையான கதைகள் மூலம் இவற்றிற்கு புதுப் பிறவியளித்த திரு.கே.வி.குணசேகரத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

கலாபூசணம் து.மாணிக்கவாசகர்

மறவன்புலவு.

அணிந்துரை

திரு. கே.வி. குணசேகரம் அவர்களின் "திருவருட்பயன் கதைகள்" என்ற நூலை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. நான் கல்வி கற்றபோது பாடநூலாக இருந்த திருவருட்பயனை நான் மனனம் செய்து கேள்விக்கு ஏற்றபடி பதில் எழுதினேன். அதன் அர்த்தம் அப்போது எனக்குப் புரியவில்லை. திரு. கே.வி. குணசேகரம் அவர்கள் இந்து தத்துவநூல்களைக் கதைகளாக்கி அவற்றிற்கு ஒரு புதிய கே. வி. குணசேகரம்.இலக்கிய வடிவம் கொடுத்து வருகிறார். இந்த வகையில் அவர் ஆத்திசூடி, பகவத்கீதை, திருக்குறள் போன்றவற்றின் சூத்திரங்கள் அனைத்திற்கும் உரையும், விளக்கமும் கதையும் எழுதியுள்ளார். அவற்றையெல்லாம் முழுமையாக வாசிக்காவிட்டாலும் ஒரு சில பகுதிகளை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. திருவருட்பயன் என்ற கதை நூலில், திருவருட்பயனில் உள்ள நூறு குறள்களும் உள்ளன. அதற்கு உரையுள்ளது. நீண்ட விளக்கமும் உள்ளது. பொருத்தமான கதைகளும் உள்ளன. இக்கதைகளை தனித்தனியாகவும் வாசிக்கலாம். தொடர்கதையாகவும் வாசிக்கலாம். விறுவிறுப்பான சைவசித்தாந்தக் கருத்துக்களைக் கூறும் ஒரு நாவலாகவே இதை நான் கருதுகிறேன். ஒரு மனிதனின் ஆசாபாசங்கள், இன்பதுன்பங்கள், காதல் லீலைகள், போட்டி பொறாமை என்று சொல்லப்படுகின்ற அத்தகையும் மிகவும் சுவையாகச் சொல்லப்பட்டுள்ளது. சைவசித்தாந்தம் என்றதும் கடவுளைப் பற்றிய தத்துவம் என்ற மாயையை நீக்கி அது வாழ்க்கைத் தத்துவம் என எடுத்துக் கூறப்பட்ட விதம் மிகமிகப் புதுமையானது. இது போலத்தான் இவரது திருக்குறள் கதைகளும், பகவத்கீதைக் கதைகளும் எழுதப்பட்டுள்ளன. சைவசித்தாந்தத்தைப் படிக்க விரும்புவோருக்கும், அறிய விரும்புவோருக்கும் அது இலகு தமிழில் கூறப்பட்டுள்ளது. கதைகளை வாசிக்க விரும்புவோருக்கும் கே. வி. குணசேகரம். சுவைபடக் கூறப்பட்டுள்ளது. சைவமக்கள் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய

அரிய நூல் இது. திரு. கே.வி குணசேகரம் அவர்கள் இந்து தத்துவ நூல்கள் அனைத்தையும் கதைகளாக்க வேண்டும். அவை கதைகளானால் எல்லோரும் இலகுவில் விளங்கிக் கொள்வார்கள்.

வீ. கணேசராசா S.L.E.A.S III அதிபர்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

**அணிந்துரை**

கந்தனே கலியுகத் தெய்வம் என்ற ஆய்வுக்கட்டுரை சந்நிதியான் ஆச்சிரமம் வெளியிடும் ஞானச்சுடர் என்ற சஞ்சிகையில் தொடராக வெளிவந்தது. சந்நிதியான் ஆச்சிரமம் சைவப்பண்பாட்டு விழுமியங்கள் அத்தனையையும் நிறைவு செய்யும். அபூர்வமான ஆச்சிரமம். அடியவர்களின் வயிற்றுப்பசியை அறுசுவை உணவு மூலம் பூர்த்தி செய்கிறது. அடியார்களின் அறிவுப் பசியை ஞானச் சுடர் என்ற சஞ்சிகை மூலம் பூர்த்தி செய்கிறது. அத்துடன் சைவஏழை மக்களுக்குத் தன்னாலான சேவைகளைச் செய்கிறது.

சந்நிதிக்கந்தன் வலிமைமிக்கவன், அடியவர்க்கு எளியவன். நம்பி வணங்கும் அடியவர்களை ஏமாற்றாது அள்ளிக் கொடுப்பவன். அதனால் தான் அவனது சந்நிதிக்குத் தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் செல்கிறார்கள். கந்தன் தான் கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் என்பது சைவ மக்களது ஏகோபித்த கருத்து. அதை உறுதி செய்திருக்கிறார் திரு கே.வி குணசேகரம் அவர்கள் தான் எழுத எடுத்துக் கொண்ட விடயத்தைப் பல்வேறு நூல்களை வாசித்து அதை உறுதி செய்த பின்பே எழுதுவார். அவர் எழுதும் விடயங்களைப் பலர் அறிந்திருக்க மாட்டார்கள். கந்தனே கலியுகத் தெய்வம் என்பதை நிறுவ அவர் ஏராளமான நூல்களை உதாரணங்கள் காட்டியுள்ளார். அத்துடன் சிந்து வெளியிலிருந்து அண்மைக்காலம் வரை முருகவழிபாடு நடைபெற்ற வரலாற்றையும் மிகவும், விரிவாகவும் விளங்கக் கூடியதாகவும் எழுதியுள்ளார். முருகனுடைய படைக்கலமான வேல் அவனது வாகனமான மயில், கொடியிலமர்ந்த சேவல் ஆகியவற்றின் வரலாறும் பெருமைகளும் பல்வேறு நூல்களில் இருந்து எடுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூல் முருகனது பெருமைகள் அனைத்தையும் இலகு மொழியில் கூறுவதால் எழுதவாசிக்கத் தெரிந்த அனைவருக்கும் விருந்தாக அமைந்துள்ளது. அத்துடன் முருகனது பெருமைகளை அறிந்து

கொள்ளக்கூடியதாகவும் அமைந்துள்ளது. இன்று உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் முருகனையே தமது குலதெய்வமாக எண்ணி வழிபடுகின்றனர். அத்துடன் கந்தசஷ்டி விரதகாலத்தில் மட்டுமன்றித் தினமும் கந்தசஷ்டிக் கவசத்தை ஓதிப்பயன் பெறுகின்றனர். அவர்களெள்ளோரும் முருகனது பெருமைகளை அறியவைத்த ஆசிரியர் பெருமைக்குரியவர். இவர் சைவசமய நூல்களான வேதங்கள், உபநிடதங்கள், திருவருட்பயன், சிவஞானபோதம் போன்ற நூல்களில் உள்ள தத்துவங்களுக்குக் கதைகள் எழுதியவர் திருவாவடுதுறை ஆதீனத்தால் பாராட்டப்பட்டவர். இவரது மாயை பற்றிய தத்துவக் கதைகள் திருவருட்பயன் கதைகள் என்பன திருவாவடுதுறை ஆதீனத்தால் பாராட்டுப்பெற்றவை. அதைவிட பகவத்கீதைக் கதைகள், திருக்குறள் கதைகள், திருமந்திரங்கதைகள், என்பன பல அறிஞர்களின் பாராட்டைப் பெற்றவை. முருகனை வணங்கும் ஒவ்வொரு அடியவர்களும் கட்டாயமாக வாசிக்கவேண்டிய நூல் இது. இதில் சிவனைப்பற்றியும், உமையைப்பற்றியும், மஹாவிஷ்ணுவைப் பற்றியும், விநாயகரைப்பற்றியும் பல அரிய தகவல்கள் கூறப்பட்டுள்ளன. இவையெல்லாம் மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளவேண்டிய கருத்துக்களாகும். இதுபோல இன்னும் பல நூல்களை எழுதி வெளியிட முருகன் அருள்புரிதல் வேண்டும்.

சு.உதயபாலன். M.A. சைவசித்தாந்தம்,
இந்துசமய கலாச்சார உத்தியோகத்தர்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

## அணிந்துரை

தமிழறிஞர் கே.வி. குணசேகரம் அவர்கள் சிறுவர்களை மையப்படுத்தியே தனது ஆக்கங்களை வெளியிடுபவர். சிறுவர்கள் தான் எதிர்காலப் பெரியவர்களென்பதால் அவர்கள் சிறுவயதிலிருந்தே ஒழுக்கமுள்ளவர்களாக வளரவேண்டும் என்பது அவரது கொள்கை, இதனால் தான் அவர் வேதங்களையும் உபநிடதங்களையும், எளிதில் விளங்கிக் கொள்ள முடியாத திருவருட்பயன், சிவஞானபோதம்,

பகவத்கீதை, திருக்குறள், பதினெண்கீழ்கணக்கு நூல்கள் என்பவற்றைக் கதைகளாக எழுதினார். சிறு சிறு கதைகள். அவை சிறுவர்களைச் சூழ்ந்துள்ள சமூக மாந்தரின் கதைகள். மிருகங்களின் கதைகள். அதனால் அவை சிறுவர்களுக்கு விருந்தாகியன. அதே வேளை பெரியவர்களுக்கு மருந்தாகின. ஒவ்வொரு கதையும் படிப்பினையைக் கொடுத்தன. விளங்க முடியாதிருந்த உரை நூல்கள் யாவும் கதை நூல்களாயின.

அந்தவரிசையில் இப்போது அவர் சிறுவர்களுக்கான மகாபாரதத்தை மிகவும் எளிமையான தமிழில் மிகமிகச் சுருக்கமாக எழுதியுள்ளார். இருந்த போதும் அதன் சுவை குறையவில்லை. பொதுவாகக் கே.வி. குணசேகரத்தின் நூல்களைக் கையில் எடுத்தால் அதை வாசித்து முடிக்காது கீழே வைக்கமுடியாது. அந்த வகையில் இந்த நூலும் உள்ளது.

மகாபாரதம் ஒழுக்கத்தை வற்புறுத்தும் ஒரு அரிய நூல். தர்மப்படி நடக்காவிட்டால் தர்மமே அழிந்துவிடும் என்பதை விளக்கும் அரியநூல் இது. அத்தகைய அரிய நூலைச் சுவை குன்றாது எமக்களித்திருக்கும் ஆசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இன்றைய சமூகம் மகாபாரதத்தைக் தொலைக்காட்சியில் பார்த்து அறிந்துள்ளது. அறிந்தவற்றை மீட்டுப் பார்க்கும் சந்தர்ப்பத்தை ஆசிரியர் நமக்குத் தந்துள்ளார்.

இன்று பழம்பெரும் நூல்களைப் படிப்பாரில்லை. அதற்குக் காரணம் அதன் பொருள் விளங்காமையே ஆகும். அதை உணர்ந்த ஆசிரியர் பழம் தமிழ் உரை நூல்களையெல்லாம் கதை நூல்களாக மாற்றி வருகிறார். அடுத்துச் சைவசித்தாந்த நூலான திருமந்திரத்திற்குக் கதை எழுதி வெளியிடவுள்ளார். கதைகள் வயது வேறுபாடின்றி அனைவரையும் கவரும் என்பதால் தான் ஆசிரியர் கடுமையான செய்யுள்களாளான நூல்களையெல்லாம் கதை நூல்களாக மாற்றியுள்ளார். இதற்குமுன் எந்த உரை நூலும் கதை நூலானதில்லை. முதன்முறையாக உரை நூல்களைக் கதை நூல்களாக மாற்றிப் பெரு வெற்றியும் கண்டுள்ளார். அவர் இன்னும் நிறைய எழுதவேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி எஸ்.எம். புவனேந்திரன்.
சமாதானநீதவான், (அகில இலங்கை)

கௌரவ மாவட்ட சாரண ஆணையாளர்,
கிளிநொச்சி.
செயலாளர்,
பகிரங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம்,
வலிகாமம் கிழக்கு,
கோப்பாய்.

அணிந்துரை

எந்தவொரு மதத்தவரிடேயும் காலந்தோரும் சாத்திர நூல்களும், தோத்திர நூல்களும் தோற்றம் பெறுவது, அவை அம் மததத்தினைப் பேணுவோரது வாழ்க்கையைச் செம்பைப்படுத்தக் கூடிய செய்நெறிகளை ஒழுங்கமைத்து வழிகாட்டிச் செல்வதும் இயல்பானதே ஆகும். இறைநம்பிக்கையும், இறைபக்தியும், சமயநெறியின் அடித்தளமாக இருப்பதால் சாத்திர நூல்களும், தோத்திர நூல்களும் இல்லாத சமயங்கள் உலகில் இல்லையெனலாம். இன்று உலகெங்கிலும் 800 மில்லியனுக்கு மேற்பட்ட இந்து சமயத்தவர்கள் வாழ்கின்றனா். பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த சனாதன தா்மத்திற்கு சொந்தக்காரா் அவா்கள். எத்தனையோ சமய சாத்திர நூல்கள் இந்து மதத்தினரிடையே காணப்பட்டாலும் தொன்மை காலம் தொட்டு ''பிருஸ்தானத்திரயம்'' ஆகிய உபநிடதங்கள், பகவத் கீதை, பிரமசூத்திரம் ஆகிய நூல்களே இந்து சமய நூல்களாகவே பேணப்பட்டு வருகின்றது. வேதப்பொருட்களுக்கு விளக்கம் கூட எழுந்த உபநிடதங்களில் கூறப்பட்ட கருத்துக்கள் சிதைந்தும், தொடர்புகள் இடை விலகியும், முழுமையின்றியும் காணப்பட்டன. எனவே வேதஉபநிடதப் பொருள்களை தெளிவுபடுத்தும் நோக்கத்துடன் பாதராயனரால் வேதாந்த சூத்திரம் எனப்படும் பிரமசூத்திரம் செய்யப்பட்டது. பிரமம், உலகம், ஆத்மா ஆகியன பற்றிய தத்துவ சிந்தனைகளை உள்ளடக்கிய இந்நூலின் கருத்துக்களும் தெளிவுபெற வேண்டி இருந்தமையால் மூவகை வேதாந்தங்களும் எழுந்தன. அதன் பின் பல்வேறு இந்து தத்துவ தரிசன, சிந்தனை வசப்பட்ட நூல்கள் பலவும் வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன.

பகவத் கீதையானது சமய நூலாக, பக்தி நூலாக, ஞான நூலாக, தத்துவ நூலாக, சமரச சன்மாா்க்க நூலாக போற்றப்படுகின்றது. எல்லாச் செயல்களிலும் பற்றையும் பலனையும் விட்டு விடுவது தியாகம் என்றும், யாகமும், யோகமும் நிறைவு காணும் உச்ச நிலையும் உண்டாவது என்று உணா்த்துகிறது. எல்லாக் கருமங்களையும் விலக்கிவிடச் செல்வது கீதையின் கருத்தாகாது. செயலில் துறவையும், செயலின்மையில் செயலையும் காண்பவனையே யோகியாவான் என்கிறது கீதை.

பகவத் கீதை வடமொழியில் செய்யப்பட்டு இருப்பினும், காலம் காலமாக அதன் தமிழ் மொழிபெயா்ப்புக்களும், விளக்கவுரைகளும் வெளிவந்து

கொண்டேயிருக்கின்றன. சுவாமி சித்பவானந்தர், சுவாமி பிரபுபாதா போன்ற பலரது தமிழிலான பகவத் கீதை உரைகள் சிறப்பான முறையில் வெளிவந்துள்ளன. மகாகவி சுப்பிரமணிய பாராதியாரின் பகவத் கீதை மொழிபெயர்ப்பும் பலராலும் போற்றப்படுவதாகும். இந்த வழியை மீறி திரு. கே.வி.குணசேகரம் அவர்கள் கீதையின் சுலோகம் அனைத்திற்கும் கதை வடிவம் கொடுத்துள்ளார். இவர் நாடறிந்த நல்ல எழுத்தாளர், சிறந்த கல்வியாளர், கலை இலக்கிய படைப்பாளி. இக்கதைகள் திரு. கே.வி.குணசேகரம் அவர்களின் அறிவிற்கும், ஆற்றலுக்கும், ஆளுமைக்கும், சமயத் தொண்டிற்கும், தமிழ் பணிக்கும் சான்றாக என்றும் நிலை பெற்று விளங்கும் என உறுதியாக நம்பமுடியும். அவரது பல வருட கால கடின உழைப்பின் அறுவடை இதுவாகும். பகவத் கீதைப் பண்பாட்டில் கட்டுண்ட இந்துசமூகத்தவரிடையே கீதை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியாக இப்பணி அமைகிறது. காலம் காலமாக எழுந்த உரைக்கு மாறுபடாத, புதுமை நோக்கில் எழிமையான சொல்லாட்சியுடன் எவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய கதைகளினூடாக கீதையை புரியவைக்கும் முயற்சி இதுவெனலாம். அத்துடன் கீதையின் சுலோகங்களுக்கு பொருந்தும் விதத்தில் கதாபாத்திரத்தின் குணநலன்களும் படைக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் திரு. கே.வி.குணசேகரம் அவர்களின் பணி சீரியது, பாரியது, பயன்மிக்கது, இந்துமதத்தவர்களுக்கு பெருமை சேர்ப்பது, மானிட புலத்தவர்களக்கு வழிகாட்டுவது. இத்தகைய முயற்சிகளில் திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் தொடர்ந்தும் ஈடுபட வேண்டும். சமூகத்திற்கு பயனுடைய நூல்களை அவர் படைக்க வேண்டும். அவரது எழுத்துக்களால் வையகம் வாழ்வு பெற வேண்டும். அதுவே கீதாசாரியனின் கூற்றாகவும், விருப்பமாகவும் அமையும்.

கலாநிதி செ.திருநாவுக்கரசு M.A.Phd

விரிவுரையாளர்,

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை,

யாழ்ப்பாணம். ஸ்ரீலங்கா.

அணிந்துரை

தமிழறிஞரும், எனது மாணவருமாகிய திரு.கே.வி.குணசேகரம் என்பவர் எழுதிய எழுதிய பகவத் கீதை என்னும் நூலுக்கு அணிந்துரை

வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இந்துசமய சாத்திரங்களில் ஒன்றாக விளங்கும் பகவத் கீதை இந்து மெய்யியலுக்கும், வைணவ பக்தி நெறிக்கும் ஓர் அடிப்படையான மூலமாகப் புகழ் பெற்றுள்ளது. இந்து சமயத்தில் உபநிடதங்கள், பிரமசூத்திரம் (வேதாந்திர சூத்திரம்) பகவத்கீதை என்னம் மூன்று நூல்களும் பிரஜ்தான நூல் எனப் பெயர் பெறுகின்றது. உபநிடதமும், பிரமசூத்திரமும் தாம் பேசும் பரம்பொருளாகிய பிரமத்தை தத்துவ ஆராய்ச்சிக்கு மட்டுமே உரிய பொருளாகக் கொள்ள பகவத் கீதை மட்டுமே அதனைப் பக்திக்கும், வழிபாட்டிற்கும் உரிய பொருளாக்கி அதன் மூலம் தத்துவ ஞானத்தையும், சமயத்தையும் இணைத்த தனிப்பெரும் சிறப்புடைய நூலாகத் திகழ்கிறது. அத்துடன் இந்துசமயத்தின் யோகசாத்திரமாக இந்நூல் மிளிர்கின்றது.

பகவத் கீதைப் புலப்படுத்தும் பண்பாட்டுச் சிந்தனைகள், பகவத புராணம் முதலிய சைவபுராணங்களில் கூடிய விளக்கம் பெற்றுள்ளது. பகவத் கீதை புலப்படுத்தும் சமய, பண்பாட்டுக் கருத்துக்களை அனைவரும் அறியும் படி பரப்புரை செய்ய வேண்டும் என்ற நோக்கில் அவற்றின் சுலோகங்களுக்குத் தனித்தனி கதைகள் எழுதிய பெருமை இந்நூலாசிரியருக்கே உடையது. இக்கதைகள் மிகவும் எளிமையாக அமைந்து இந்துசமயத்தை வளமுறச் செய்கிறது. கீதையின் சுலோகங்களுக்கு கதை எழுதுவது மிகவும் கடினமான பணியாகும். இருந்தும் நூலாசிரியர் அதில் வெற்றி பெற்றுள்ளார். இந்து சமயத்தின் ஓர் உன்னதமான தர்ம நூலுக்கு கதைகள் எழுதத் துணிந்த நூலாசிரியர் பாராட்டுதலுக்கும், போற்றுவதற்கும் உரியதாகின்றார். இவர் எழுதிய கதைகள் முழுவதையும் ஆரஅமர்ந்து இருந்து படிக்கும் போது மனதிற்கு ஓர் ஆன்மீக அனுபவமும், ஆறுதலும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. இந்துசமயம் உணர்த்தும் சமய தத்துவ கருத்துக்களை கதைகள் வாயிலாக பரப்புரை செய்யும் நூலாசிரியரை மீண்டும் மீண்டும் பாராட்டுவதோடு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டாக்டர் மா.வேதநாதன் B.A. (Hons) M.A. Ph.D.
தலைவர் - இந்துநாகரிகத்துறை
இணைப்பாளர் - சைவசித்தாந்த முதுகலைமானி கற்கைநெறி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

## அணிந்துரை

இன்று 800 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் இந்து சமயத்தைப் பின்பற்றுகின்றனர். அவர்கள் எல்லோரும் இந்து சமயத் தத்துவங்கள் அனைத்திலும் பெருநம்பிக்கை வைத்துள்ளனர். இந்த வகையில் உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத் கீதை என்னும் மூன்று நூல்களும் பிரஸ்தானத்திரயம் என்னும் பெயருடன் இந்துக்களின் மூலநூல்களாக விளங்குகின்றன. உபநிடதங்களும் பிரமசூத்திரமும்

பரம்பொருளாகிய பிரமத்தைத் தத்துவ ஆராச்சிக்குரிய பொருளாகக் கொள்ள பகவத்கீதை அதனைப் பக்திக்கும் வழிபாட்டிற்கும் உரிய பொருளாகக் கருதித் தத்துவ ஞானத்தையும் சமயத்தையும் இணைத்து மனிதமேம்பாட்டிற்கான வழிவகைகள் பலவற்றையும் எடுத்துக் கூறிச் சிறப்புக்கள் பலவும் கொண்ட நூலாகத் திகழ்கிறது. இது பதினெட்டு அதிகாரங்களைக் கொண்ட நூல். அப் பதினெட்டு அதிகாரங்களில் எழுநூறு சுலோகங்கள் உள்ளன.

பகவத் கீதை வடமொழியில் எழுதப் பெற்ற போதும் அதன் தமிழ் மொழிப் பெயர்ப்புக்கள், அது வெளிவந்த காலம் முதல் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பகவத்கீதை என்று நினைப்பதே புண்ணியம். அதைப் படிப்பது பெரும் புண்ணியம். கீதையைப் படிப்பவர்களைப் பாவங்கள் எவையும் தீண்டாது. கீதையைத் தியானம் செய்கின்றவர்கள் பிராத்த கருமத்தில் கட்டுண்டு கிடந்தாலும் அவர்கள் முத்தர்கள். இவ்வுலகில் சுகத்தை அனுபவிப்பவர்களும் அவர்களேயென்று மகாவிஷ்ணு சொல்கின்றார். அத்தகைய பெருமை மிக்க கீதையின் சுலோகங்களை வடமொழியில் தந்து, அதற்குரிய உரையை மிகமிக இலகுவான மொழியில் எல்லோருக்கும் விளங்கும் வகையில் தந்த திரு.கே.வி.குணசேகரம் அவர்களைப் பாராட்டுகிறேன். திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் ஆசிரியர், அதிபர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்ற பதவிகளை வகித்தவர். அதிபராக பதினாறு ஆண்டுகள் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலத்தில் கடமை புரிந்து அதன் வளர்ச்சிக்கு வித்திட்டவர். அதனால் பாடசாலையின் வளர்ச்சி பல வழிகளாலும் முன்னேறியது. யாழ் மாவட்டத்தில் மட்டுமன்றி முழுஇலங்கையிலும் அதன் வளர்ச்சி பற்றிப் பேசப்பட்டது. நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளராக அவர் கடமையாற்றும் போது நல்லூர் பாடசாலைகள் பெரும் எழுற்சியுற்றன. தற்பொழுது ஓய்வு பெற்ற போதும் சமயத்திற்கும் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றி வருகிறார். "கண்ணன் அருளிய கீதையின் சுலோகங்கள். தமிழறிஞர் கே.வி.குணசேகரம் எழுதிய உரை." என்ற புனித நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் பெருமையடைகிறேன். ஆசிரியர் இது போன்ற இன்னும் பல நூல்களை வெளியிட வேண்டுமென எமது வித்தியாலத்தில் குடிகொண்டிருக்கும் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியைப் பிராத்திக்கிறேன். நன்றி

திருமதி.சாந்தினி வாகீசன்

அதிபர்.

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்,

கோப்பாய்.

## அணிந்துரை

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் திருக்குறள் தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் கிடைக்கப்பெற்ற அரும் பொருளாகும். திருக்குறள் உலகப்பொதுமறை. தனிமனித வாழ்வியலையும், உலகப் பொது வாழ்வியலையும் பற்றி இயம்புகின்றது. இதன் காரணமாக உலகின் பல நாட்டவரும் விரும்பிப் படிக்கின்றனர்.

மனித வாழ்வியலுக்கு வேண்டிய கருத்துக்கள் அனைத்தையும் இரண்டு அடிகள் கொண்ட கவிதைகளாக அமைத்துத் தந்தவர் வள்ளுவர். இரண்டு அடிக் கவிதையானாலும் செறிவும் ஆழமும் அமைந்த நுண்ணிய கருத்துக்களைக் கொண்டது.

திருக்குறளுக்குக் காலத்துக்குக் காலம் பலர் உரை எழுதியுள்ளனர். பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்துள்ளனர். திருக்குறளுக்குக் கவிதைகளும் கதைகளும் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் வெளிவந்துள்ளன. இந்த வரிசையில் திரு. கே. வி. குணசேகரம் அவர்களின் பணி குறிப்பிடத்தக்கது. திருக்குறள் கருத்துக்களைச் சிறிய கதைகளினூடாக பதிவு செய்துள்ளார். இதுவரை 1030 குறள் பாக்களுக்குக் கதைகள் எழுதியுள்ளனர்.

இன்றைய உலகம் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சிப் பாதையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் திருக்குறள் பாக்களைக் கற்பதற்கும் அவற்றின் நுட்பமான கருத்துக்களை அறிவதற்கும் போதிய அவகாசம் கிடைப்பதில்லை. வேகமான வாழ்வியலுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும் நுட்பமான கருத்துக்களை அனைவரும் அறிந்து உணர வகை செய்தல் காலத்தின் தேவை. திரு.கே.வி. குணசேகரம் அவர்கள் காலத்தின் தேவையை உணர்ந்து திருக்குறளை சிறிய கதைகளாக்கித் தந்துள்ளார். கதைகளின் இறுதியில் குறட்பாக்களும் அவற்றிற்குரிய விளக்கங்களும் தரப்பட்டுள்ளன.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை குறள் பாக்களின் நுண்ணிய கருத்துக்களைக் கதை மூலம் விளங்கிக் கொள்வது இலகுவானதாகின்றது. கதைகளைப் படித்துச் சுவைப்பதன் மூலம் இறுதியில் வழங்கப்பட்டுள்ள குறள் பாக்களையும் மனதிலே பதிய வைப்பர்.

தன்னுடைய வாழ்வியல் அனுபவங்களையும், சமூக யாதார்த்தங்களையும் கதைக் கருவாக்கி கண் முன் நடமாடும் பாத்திரங்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். குறள்பாவின் பொருளும் நயமும் சிதைவுறாமல் மூன்று பக்கங்களுக்குள்ளேயே நின்று கதையை அமைத்துச் செல்லும் பாங்கு தனித்துவமானது. ஒவ்வொரு கதைகளும் தனித்தனியானவை. ஆனாலும் அவற்றிடையே ஒரு தொடர்ச்சியை மிகநுட்பமாக அமைத்துள்ளார். குறள் பாக்களின் அடியொற்றி கதைகளுக்குரிய தலைப்புக்களை வழங்கியுள்ளமை இன்னுமொரு சிறப்பு. இதற்கு ஒரு எடுத்துக்காட்டு தரலாம்.

"நுண்மான் நுழைபுலம் இல்லான் எழில் நலம்

மண்மான் புனைபாவை யற்று"

என்ற குறள் கதைக்கு 'மண் பொம்மை' எனத் தலைப்பிட்டுள்ளார். இவ்வாறே மற்றவையும் அமைகின்றன.

தமிழையும் தமிழரையும் உலகளவில் நிலைநிறுத்திய நூல்களில் ஒன்றாகத் திருக்குறள் அமைகின்றது. அதனாலே தான் பாரதி "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று பாடினான். தமிழ் இலக்கியக் கருவூலமான திருக்குறள் மக்களுக்குச் சென்றடையும் வகையில் பணி செய்பவர்களுள் திரு. குணசேகரமும் ஒருவர். தமிழ் கூறும் நல்லுலகம் இவரின் தமிழ்ப் பணியைப் போற்றி நிற்கின்றது. இவரின் தமிழ்ப்பணி தொடர நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியை வேண்டி, நாமும் வாழ்த்துகின்றோம்.

செல்வி. செல்வ
அம்பிகை நடராஜா,

விரிவுரையாளர்,

தமிழ்த்துறை,

யாழ்ப்பாண பல்கலைக்
கழகம்.

ஸ்ரீலங்கா.

# கல்வியாளரும் எழுத்தாளருமான

# கே.வி.குணசேகரம் ஒரு பார்வை

கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் அதிபராக விளங்கும் திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் ஓர் ஆசிரியர், கல்வியாளர், கல்விநிர்வாகி என்ற ஆளுமைக்கு அப்பால் தம்மை இனங் காட்டிக் கொண்டுள்ள ஒரு துறை படைப்பிலக்கியத் துறையாகும். கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் மற்றும் சிறுவர் கதை ஆகிய பல்துறைகளிலும் அவர் கால் பதித்தவர். குறிப்பாகச் சிறுகதை, நாவல் என்பவற்றில் பல்வேறு பரிசுகள் பெற்றதன் மூலம் அத்துறைசார் வாசகர்கள் மற்றும் படைப்பாளிகளது கவனத்தை ஈர்ந்தவர்.

படைப்பாக்கம் என்பது வாழ்க்கை பற்றிய விமர்சனமாகவும் சமூகத்தை "உசுப்பி" விழிப்புறச் செய்யும் கடப்பாடு உடையதாகவும் அமைவதாகும். இத்தன்மை கே.வி.குணசேகரத்தின் படைப்புக்களில் நிறையக் காணப்படுகின்றது. பிரச்சினைகளை இனம்காட்டி வாசகர்களின் மனச்சாட்சியை விழிப்புறச் செய்யும் ஒரு விமர்சன யதார்தப் படைப்பாளியாகவே கே.வி.குணசேகரம் எமக்குக் காட்சி தருகின்றார்.

கே.வி.குணசேகரம் என்ற படைபாளியின் படைப்பாற்றல் என்ற வகையிலே குறிப்பிட்டுக் கூற வேண்டிய அம்சம், அவர் சமூக மாந்தரை இரத்தமும் சதையுமாக எம்முன் நிறுத்தும் பாங்கு ஆகும். ஒவ்வொரு கதா பாத்திரத்தையும் அதன் உணர்வு நிலைகளை அடையாளம் காட்டக் கூடிய வகையில் பேச்சுவழக்கு, மொழிநடை மற்றும் உடல் சார்

வர்ணனைகளுடன் நமது நேரடிப் பார்வைக்கு இட்டு வருகின்றார். அவர்களது ஆசாபாசங்களுடன் எம்மை நெருங்க வைக்கின்றார். இவ்வாறான செயல் முறை காட்சிப்படுத்தும் பண்பு எனப்படும். இதனால் அவரது படைப்புக்கள் பலவும் வாசகனை உடனடியாகத் தம்முடன் ஒன்றவைத்து விடுகின்றன. முக்கியமாக இளம் தலை முறையினரின் உணர்வுகள் குறிப்பாக காதல்சார் மன அவலங்கள், பிரிவுத்துயர்கள், ஏக்கங்கள் சார்ந்தவற்றை அவர் எழுதும் போது நாடகம் மற்றும் திரைப்படக் காட்சிகளுக்குரிய சுவைஉணர்வு அவற்றில் வெளிப்படுகின்றது. ஒரு வகையில் குணசேகரம் அவர்கள் பலராலும் விரும்பி வாசிக்கப்படும் படைப்பாளியாகக் கவனத்தைப் பெற்று வருவதற்கு அவரது இவ்வாறான சித்தரிப்பு முறைமை ஒரு முக்கிய காரணமெனக் கொள்ளப்பட வேண்டியதாகும்.

அறமும் நீதியும் நிறைந்த மரபுகள் நமக்கு வளமாக இருந்தும் அவை பேணப்படாமல் அழிந்து கொண்டு போகின்றனவே என்ற ஒரு மனஆதங்கமே அவரது எழுத்துக்கள் பலவற்றிற்கும் உள்ளீடாக, உணர்வோட்டமாக அமைவதை உணர முடிகின்றது. ஆசிரியப் பணி புரிவோர் அதற்கான பண்பு நலன்களை பேணிக்கொள்ளாமை, குடும்ப உறவுகளில் பாசம் பற்று என்பன விலகி அவற்றின் இடத்தைப் பணம், அந்தஸ்து என்பன பற்றிக் கொண்டமை, பெண்ணைப் போகப் பொருளாகக் கருதும் ஆண் ஆதிக்கக் கொடுமைகள், காதல் என்ற புனித உணர்வு எதிர்கொள்ளும் அவலங்கள் முதலியவற்றை மையமிட்டே அவர் தம் கதைகளுக்கான உணர்வுக் கூறுகளைக் கட்டமைத்துக் கொள்கின்றார். சில ஆக்கங்களில் அவர் தாம் உணர்ந்து விரும்பிய தீர்வுகளை முன்வைக்க முற்படுகின்றார். ஆயினும் பொதுவாகப் பிரச்சினைகளை இனம் காட்டி வாசகனின் மனச்சாட்சியை விழிப்புறச் செய்யும் ஒரு விமர்சன யதார்த்தப் படைப்பாளியாக கே.வி.குணசேகரம் நமக்குக் காட்சி தருகின்றார்.

**பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணியன்**

முன்நாள் தமிழ்த்துறைத் தலைவர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

கே.வி.குணசேகரம் நாடறிந்த நல்ல எழுத்தாளர். நாவல், சிறுகதை, சிறுவர்கதை, கவிதை முதலானவற்றிலே ஆழமான தடத்தினைப் பதித்துள்ளார். எழுத்துத் துறையில் பல பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றவர். இவர் ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றும் அனுபவங்களில் வெளிபாடும் இக்கதைகளினூடு துள்ளியமாகத் தெரிகின்றது.

மாணவர்களின் மொழிவளத்தை, ஆக்கத்திறனை, சிந்தனை விருத்தியை, ஒழுக்க வாழ்வை மேம்படுத்தத் திருக்குறள் கதைகள் பெரிதும் உதவும் என நம்புகின்றேன். சில காலத்துக்கு முன்னர் இலங்கையிலும் தமிழகத்திலும் திருக்குறள் கதைகள் என்னும் நூல்கள் வெளி வந்தன. எல்லாக் குறள்களுக்கும் அல்லாமல் தெரிவு செய்யப்பட்ட சில குறள்களுக்கே கதைகள் எழுதப்பட்டன. ஆனால் கே.வி.குணசேகரம் எல்லாக் குறள்களுக்கும் கதை எழுதும் உற்சாகத்துடன் இருக்கிறார். ஏற்கனவே 290குறள்களுக்குக் கதைகள் வெளிவந்துள்ளன. தற்பொழுது 170குறள்களுக்கான கதைகள் வெளிவருகின்றது.

ஒவ்வொரு குறளுக்கும் அமைவாக பொருள் நயம் சிந்தாமல் சிதறாமல் கதை எழுதுவதென்பது இலகுவான காரியம் அல்ல. எழுத்தனுபவமும் சிந்தனை வீச்சும் உடைய கே.வி.குணசேகரம் இந்த வகையிலே பெரு வெற்றி பெற்றுள்ளார். கற்பனை வளமும் கருத்துச் செறிவும் மிக்க இவரது கதைகள் மாணவர் சமுதாயத்துக்கு நன்கு வழிகாட்டும் என உறுதியாக நம்பலாம். கே.வி.குணசேகரத்தின் பணிகள் தொடர வாழ்த்துவோமாக.

**பேராசிரியர்.கலாநிதி. எஸ்.சிவலிங்கராசா**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

இலங்கை

## அணிந்துரை

சமுதாயத்திற்குப் பயன்படுகின்ற விடயங்களை மிக இலகு தமிழில் கற்றவர்கள் மட்டுமல்ல, பாரமரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் தமிழறிஞர் திரு. கே.வி. குணசேகரம் அவர்கள் தான் கற்றறிந்த நூல்களாலும், பட்டறிவால் பெற்ற அனுபவங்கள் ஊடாகவும் சமூகத்திற்கு வழிகாட்டியுள்ளது மிகப் பெரிய சேவையாகும்.

வாழ்க்கைக்கு ஒரு குறிவேண்டும். அக்குறியை அடைவதற்கு ஒரு நெறிவேண்டும். குறி, நெறி இல்லாத வாழ்க்கை சிதைவடைவது தின்னம். இக்கருத்தினை வலியுறுத்தி வள்ளுவரின் குறள்கள் 1330 இற்கும் நன்நெறிக்கதைகள் மூலம் விளக்கமளித்த பெருமை அறிஞர், கல்வியியலாளர் ஆகிய திரு. கே. வி. குணசேகரம் அவர்களையே சாரும். படிக்கப் படிக்கக் கருத்துச் சுரக்கின்றது. அன்னசத்திரங்கள் ஆயிரம் அமைத்தலை விட ஏழை ஒருவனுக்கு எழுத்தறிவு பெறுவதற்குச் செய்கின்ற உதவியே பேருதவி, பெருமை மிக்கது என்று கூறிக்கல்விப் பணியில் பணியாற்றுபவர்களை ஊக்குவித்துப் போற்றியுள்ள அதே நேரம் மிகத்துணிச்சலுடன், கல்விப்பணியில் இடம்பெறும் ஊழல்களைப் பட்டவட்டனமாகத் தனது அன்பான வேண்டுகோள் என்ற நூலில் சாடுகிறார்.

கீதையை ஒருமுறை படித்தால் போதாது, மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டும் வகையில் வாழ்க்கையில் இறையுணர்வு பெறச் செய்கின்றது. ஆசிரியரின் எழுத்துருவாக்கம். மேலும் கையில் எடுத்தால் படித்து முடிக்கும் வரை கீழே வைக்க மனம் வராது. ஆன்மீகநெறி அருகி வருகிறதோ என்று அஞ்சக்கூடிய நிகழ்காலத்தில் திரு. கே. வி. குணசேகரம் அவர்கள் மிகவும் கடினமான சைவசித்தாந்த நூலாகிய திருவருட்பயனுக்கு எல்லோரும் இலகுவில் புரிந்துகொள்ளத்தக்க முறையில் கதைகளாக்கியது சைவமக்களுக்கு பெரும் கொடையாகும். “என்கடன்பணி செய்து கிடப்பதே” என்ற அப்பரின் தேவார வாக்கிற்கேற்ப திரு.கே.வி.குணசேகரம் அவர்களின் சமயப்பணி, இலக்கியப்பணி, சமூகப்பணி என்பன தொடர எல்லாம் வல்ல நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி அவர்கள் வரம் வழங்க வேண்டுமென்று நான் அவரைப் பிரார்த்திக்கின்றேன்.

வி. ஸ்ரீசக்திவேல் J.P

முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர்,

45, அம்பலவாணர் வீதி,

அத்தியடி,

யாழ்பபாணம்.

கல்வித்திட்டப்பணிப்பாளர்,

சைவவித்தியாவிருத்திச் சங்கம்,

திருநெல்வேலி.

**அணிந்துரை**

தங்கள் கைப்பட எழுதிய நூல்களைப் படிக்கும் போது தாங்கள் வடமொழி, தென்மொழி இரண்டிலும் மிகத்தேர்ச்சி பெற்றவராகத் தெரியவருகின்றது. வேதாகமங்களைஜயம் திரிபுரக் கற்றிருக்கிறீர்கள். இந்து நாகரிகத்தின் கலைத்திட்டத்தினை அறிந்திருக்கிறீர்கள். அத்துடன் வெள்ளைக்காரப் பாவாடைச் சுவாமிகள் எழுதிய Hinduism In Ceylon, Hinduism in India ஆகிய நூல்களையும் கற்றிருக்கிறீர்கள். அத்துடன் திருக்குறள் பகவத்கீதை, சிவஞானபோதம், திருவருட்பயன், திருமந்திரம். ஆகிய நூல்களையும் ஆராய்ந்து கடினமான தத்துவங்களையெல்லாம் மிகவும் எளிமைப்படுத்தி மாணவர்கள் கற்க வழிசெய்துள்ளீர்கள்.

உள்களது அலுவலகமும் இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ளது. எந்த விதமாகப் பார்த்தாலும் உங்களுக்கு இந்து சமயத்தில் பூரணமான அறிவிருக்கிறது. அதனால் நீங்கள் இந்துசமயத்தை உங்கள் சமயமாக ஏற்று அதன் பெருமையை உலகில் பரப்பும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறீர்கள். 'இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்' என்ற நூலில் உள்ள விடயங்களை இப்படி உங்களைத் தவிர வேறு எவரும் எழுதியிருக்க முடியாது. சேக்கிழார் எழுதிய பெரியபுராணத்தை விட நீங்கள் ஒரு மேலான சமயியாக, ஆழ்ந்த அறிவும் உணர்வும் கொண்டவராகக் காணப்படுகிறீர்கள். இன்னும் வயது முதிர நீங்கள் ஒரு ஞானியாக சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் அவர்களைப் போல ஒரு நாயன்மார் பட்டம் பெறுவதற்கு எற்ற மிகவுயர்ந்த பட்டமும் பெறுவீர்கள் போல. ஆனால் சில தமிழ் நூல்களை நீங்கள் தேடிப்படிக்க வேண்டும். திருவாசகம், திருக்கோவையார், திருக்களிற்றுப்படியார், திருமந்திரம் போன்ற நூல்கள் இன்னும் ஆய்வுக்குரியன. இந்நூல்களின் ஆசிரியர்கள் இன்பத்தை அள்ளித் தரும் இந்து மதம் பற்றிய பல கருத்துக்களைச் சொல்லியுள்ளனர். அவற்றைப் படித்து அதிலுள்ள தத்துவங்களையும் சிறுவர்களுக்குப் புரியும் படியாக எழுதுங்கள். சிறுவர்கள் தான் எதிர்கால மன்னர்களாகையால் அவர்கள் சிறுவயதிலேயே சமய உண்மைகளைப் புரிந்துகொள்ளல் வேண்டும் என்று நினைக்கும் உங்கள் சிந்தனை வெற்றிபெறச் சிவனருள் என்றும் இருக்கும்.

ஈ, குதிரையிடம் தனது பெயரைக் கேட்டது போல எதிர்காலச் சமுதாயம் உங்களிடமிருந்து தான் அனைத்தையும் கேட்கவுள்ளது. இந்து சமயத்தை அறுசமயம் என்றும் சொல்லலாம். எனவே அறுசமயத் தத்துவங்களையும் எளிமைப்படுத்துங்கள். சிவன் இந்து சமயத்திலே ஆறில் ஒரு பகுதியையுடையவர். நாங்கள் பிரமா, விஷ்ணுக்களோடு முப்பத்துமூன்று தேவர்களையும் பூசித்து வழிபடுகிறோம் என்ற உண்மை எதிர்காலச் சமுதாயத்திற்குத் தெரிதல் வேண்டும். சமயத் தத்துவங்களை இலகுபடுத்துவது தான் உங்கள் இன்பம் என அறிந்துகொண்டேன். அந்த இன்பம் தான் நமச்சிவாய.

வாழ்க சிவன் நாமம்.

கணபதி மகேசன்

ஓய்வு பெற்ற கல்வி நிர்வாகசேவை தரம் II

6, இராணி வீதி,

நல்லூர், யாழ்ப்பாணம்.

## அணிந்துரை

ஒரு நாடு செல்வச் சிறப்பில் சிறந்திருந்தாலும் இயற்கையழகில் இணையற்றிருப்பினும் நன்னாடு எனும் பெயரெடுக்க இவை மட்டும் போதுமானதல்ல. நல்ல பண்பாட்டறிஞர்களை தன்னகத்தே கொண்ட நாடே நன்னாடாகும். எங்கு அறிவுடைய நன்மக்கள் வாழ்கின்றார்களோ அங்கே அறிவு நூல்கள் போற்றப்படும் வாழ்வியல் காணப்படும்.

“எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி

நல்லை வாழிய நிலனே”

என்கிறது புறநானூறு. நாம் வாழும் ஈழநாடும் நல்லறிஞர் பெருமக்களைக் கொண்ட வளநாடே. உலகம் போற்றும் அறிஞர்கள் தோன்றி மறைந்தும், தோன்றிக் கொண்டும் இருக்கின்றனர். அந்த வகையிலே கோப்பாய் தந்த தவப்புதல்வன் மூதறிஞர் கே.வி. குணசேகரம் அவர்கள் தோன்றி தன் உயர்ந்த படைப்புக்களால் தாய் நாட்டின் தரத்தை தளராது உயர்த்திக்கொண்டே இருக்கிறார். எண்ணிறந்த

சிறுகதைகள், கவிதைகள், அறிவுசார் நூல்கள், விமர்சனங்கள் போன்ற இன்னோரன்ன படைப்புக்களைப் படைத்தும் பதிப்பித்துக் கொண்டுமிருக்கிறார்.

தமிழுக்கு வளம் சேர்த்த ஒரு நூல். தமிழர்க்கு வாழ்வியல் உண்மைகளை உள்ளபடி உணர்த்தும் ஒரு நூல். தன் தோற்றத்தால் தமிழுலகிற்கு மட்டுமல்ல முழு உலகத்திற்கே பெரும் புகழைப் பெற்றுத்தந்த ஒரு நூல். அது திருக்குறள் என்ற நூல் தான். இதைப் பற்றிப் பேசாத புலவர்களில்லை, எழுதாத எழுத்தாளர்களில்லை. இது எல்லாப் பருவத்தினருக்கும் எல்லா நாட்டவருக்கும் வேண்டிய விழுமியங்களடங்கிய நூல். திருக்குறளுக்கு பல உரைகள் உள்ளன. ஆனால் கதைகளில்லை. சிறுவர் முதல் பெரியோர் வரை பண்டிதர் முதல் பாமரர்வரை படித்து விளங்கிக்கொள்ளும் வகையில் திருக்குறள் பாக்கள் அத்தனைக்கும் கதைகள் எழுதிய பெருமை தமிழறிஞர் கே.வி.குணசேகரத்தையே சாரும். படிக்கப் படிக்க இனிப்பது, பேசப் பேசத் தித்திப்பது, அடுத்த கட்டம் எப்படி இருக்குமோ......? என நினைத்து நினைத்து ஏங்க வைத்து முழுவதையும் ஒரே மூச்சில் படிக்க வைக்கும் கதைப்பாங்கு, எழுத்துநடை பிரமாதம். வரவேற்கத்தக்கது.

இவரின் “திருக்குறள் கதைகள்” இல்லாத இல்லங்களே இருக்கக்கூடாது. இதனைப் படியாத தமிழனும் இருக்கக் கூடாது. இந்த எண்ணமே இவருக்கு இதனை எழுதத் தூண்டியது. கதைகள் தமிழிலக்கிய உலகில் ஒரு புதிய வழியையும், விழிப்பையும், புத்துணர்ச்சியையும் விளைவித்துள்ளன. பழமையின் ஊற்றிலிருந்து புதுமை பொங்கி எழும் காட்சிகளை ஆங்காங்கு கதைகளில் பார்க்கக் காணலாம். தமிழர் என்பவர் அனைவரிடத்தும் இந்நூற் பிரதியொன்று இருக்கும் நிலை ஏற்பட்டால் அதுவே அவரின் உழைப்புக்கு ஊக்கம் கொடுப்பதாக அமையும்.

தொடர்ந்து எழுத என் வாழ்த்துக்கள்.

அன்பன்

நயினை எஸ். சோமேஸ்வரபிள்ளை. J.P

ஓய்வு பெற்ற அதிபர்.

**அணிந்துரை**

“தொட்டதனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு” என்ற வள்ளுவர் குறளுக்கு இலக்கணமாய் வாழ்ந்துகாட்டி, மணிவிழாக் கண்ட நல்லூர் கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு. கே. வி.குணசேகரம் அவர்கள், கல்வித்துறையில் ஆற்றிய அரும்பணிகள் மகத்தானவை. கற்றோம், பட்டம் பெற்றோம், தொழிலொன்று பெற்றோமென்பதோடு அமையாது தாம் பெற்ற கல்வியைத் தனது அறிவுத் தேடலின் மூலம் அற்புதமான இலக்கியங்களைப் படைத்துத் தனது அடையாளத்தைக் கல்விச் சமூகத்தில் தனித்துவப்படுத்தியுள்ளார். சிறுவர் முதல் பெரியோர் வரை எந்தத் தரப்பினர்க்கும் ஏற்ற வகையில் ஆக்கங்களைத் தந்த இவர், தர்மத்தின் வழி வழுவாது நிற்கும் சமூகமொன்றை உருவாக்கும் நன்நோக்கில் ஔவையின் ஆத்திசூடியை, வள்ளுவனின் குறளை, கண்ணனின் கீதையை இலகுநடையில் கதைகளாக்கி எவர்க்கும் விளங்க வைத்த பாங்கு போற்றற்குரியது. நல்லாசானாய் சேவையை ஆரம்பித்து நன்மாணாக்கரை உருவாக்கிய கே. வி. குணசேகரம் அவர்கள் பின்நாளில் நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றும் போது கல்வித்துறையில் சமூகத்தின் நலன் சார்ந்த சாதனைகள் பல புரிந்து நாளைய சந்ததிக்கு நல்லதொரு வழிகாட்டியாய்த் திகழ்கிறார். அதுபோல தனது சமூகப்பணிகளை மேலும் தொடர மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

க. கணேஷ்

அரசாங்க அதிபர்,

மாவட்டச்செயலகம்,

யாழ்ப்பாணம்.

## அணிந்துரை

எதைச் சொல்வதென்பது அறிவு, எப்படிச் சொல்வதென்பது உத்தி. இந்த அறிவும் உத்தியும் சரிக்குச்சரி வாய்க்கப்பெற்ற அற்புதமான அர்த்தநாரீஸ்வரர். ஓரத்து அலைகளை உதாசீனம் செய்துவிட்டுச் சமுத்திரத்தில் குதிக்கும் சாமர்த்தியம். முள்ளில் நடந்து சென்று பூப்பறிக்கும் வைபவம் தான் வாழ்க்கை. ஆனால் மனிதர் முள்ளை மற,

பூவை நினை என்ற நம்பிக்கையின் குரல் இவரின் எழுத்துக்களில் உள்ளிருக்கும் நாதமாய் ஒலித்துக்கொண்டே இருக்கும். அவரோடு பேசிவிட்டு வந்தால் ஒரு நூலகத்திற்குள் நுழைந்து வந்தமாதிரி இருக்கும். ஆச்சரியமான செய்திகளை அணிவகுத்து நிறுத்துவார். இவரை நினைக்கும் போது, உறங்கும் போது கூட வாசிக்க ஏதாவது உத்தி வைத்திருக்கிறாரா என்று எண்ணத்தோண்றுகிறது. இராஜவீதிகளில் மட்டும் உலாவ முடியும் என்றிருந்த இலக்கியத்தேரை கிராமத்தில் சந்து முனைகளுக்கு இழுத்துச் செல்ல வேண்டுமென்று வடம் பிடித்தவர் வரிசையில் தடம்பதித்திருக்கிறார்.

நான் நேர்மையாக ஒப்புக்கொள்கிறேன் குணசேகரம் ஐயாவைப் பற்றி எந்தக் காலத்திலும் எனக்கு ஓர் உயர்ந்த மதிப்பு அடிமனதில் உண்டு. ஒருவர் உழைக்கும் விதம் தான் அவருடைய உண்மையான தகுதிகளைக் காலக்கிரமத்தில் நிர்ணயிக்கும் அளவுகோல். “இந்த மனிதனால் எப்படி இப்படிச் செயற்பட முடிகிறது” என விழிகள் அகல நான் வியப்பதுண்டு. அதன் மூலம் என்னை நெறிப்படுத்துவதுண்டு. மனிதன் பிறக்கிறான், இறக்கிறான். பிறப்பிற்கும் இறப்பிற்குமுள்ள இடைக்காலத்தில் வாழும் வாழ்க்கையே மனிதனை மறக்க முடியாத மாமனிதனாக மாற்றுகிறது. எழுத்தாளராக, இரசிகர் நெஞ்சில் தடம் பதித்த இவர் மனிதநேயம் மிக்க இலக்கியவர்த்தா.

இந்நாட்டு மக்களின் பிரச்சினைகளை, வாழ்க்கை முறைகளை, ஏக்கங்களை எதிர்பார்ப்புக்களை அந்த மக்களின் மொழியிலேயே கலாபூர்வமாகச் சித்தரித்துள்ளார். ஒவ்வொரு சொல்லும், சொற்றொடரும், வசனமும் அவருடைய சிந்தனையின் புதுமையையும் வாழ்க்கை அனுபவத்தையும் எழுத்தின் அழகையும் எடுத்தியம்பும். படித்து முடிந்ததும் அறிவிலும், உணர்வின் பக்குவத்திலும் ஒருபடி உயர்ந்ததை உணரலாம். ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், பரந்த கல்வியும், தெளிந்த உள்ளமும் அவரது படைப்புக்களில் கண்கூடு. இவர் சமூகத்தின் பொதுவான “முற்போக்குச் செல்நெறிக்கு ஆதரவு நல்கினார். இதன் காரணமாக இவர் முற்போக்குச் சக்திகளின் ஆதரவாளராகப் கருதப்பட்டார்”. இவர் பாரதி வழிவந்த புதிய இலக்கிய உத்வேகத்தையே தமது பிரதான தளமாகக் கொண்டார். அடுத்த சந்ததி எழுத்தாளருக்கு பிதாமகர். எல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயமானாலும் அதைச் சொல்லும் போது அதில் ஒரு புதிய சுவை இருக்கும். சொல்பவற்றைச் சுருக்கமாகவும், இறுக்கமாகவும், சுவையாகவும் சொல்லும் திறன் மெச்சத்தக்கது. பொருளுக்கேற்ற உருவம், உருவத்திற்கேற்ற பொருள் என்ற வகையிலே இவரது கதைகள் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இன்றுவரை அறுவடை செய்துகொண்டிருக்கும் ஓர் இலக்கிய வேளாண்மைக்காரர்.

**நயினை கி. கிருபானந்தா,**

செயலாளர்,

யாழ் இலக்கிய வட்டம்.

அணிந்துரை

**"மேதினிக்குச் செழுமை தரும் மெய்க்கலைஞன் வாழியவே"**

கட்டுரையும் கதைகளையும் கட்டுக்கட்டாய்
கற்பனையில் சுவைபடவே ஆக்கித்தந்தே
மட்டற்ற எழுச்சிதனை வாசகர்காய்
மாண்புறவே செய்தசீமான் கேவிகு
பட்டறிவும் வாசிப்பும் கிளர்ந்த சிந்தைப்
பக்குவத்தைச் சுவைபடவே ஊற்றும்பாங்கில்
கொட்டியதால் திருக்குற ளாத்திசூடி
வேதங்கள் ஆகமங்கள் பகவத்கீதை
மட்டில்லா வுபநிடதம் திருமந்திரத்தின்
உட்பொருளைக் கதையாக்கி உவக்கத்தந்தார்
தொட்டவையின் சுவைமணக்க மணிமேகலையும்
லங்கா அச்சகமும், குமரன் புத்தக வில்லமும் சேர்ந்து
கட்டில்லாக் கதைகளையே வாசகர்க்காய்
கனிந்துபல தேசமெங்கும் வைத்ததையா
நட்டுவிட்ட நாற்றின்மட்டம் பெருகுதல் போல்
நலம்தரவே தொடராக இவரின்கதைக்காய்
தட்டிநின்றார் பணி தொடர்ந்தார்

இன்பத்தை அள்ளிவைத்தா ரிந்துப் பாங்கில்

தத்துவத்தைக் கதையாக்கிச் சுவைத்துவாழ்வில்
தனித்துவத்தை நிலையாக்கும் மாண்பில்விஞ்சி
வித்துவத்தை விளைபொருளாய் விளக்கியிங்கே
விந்தைநிகர் விளக்கங்கள் பலவும் தந்தார்
நித்தமிவர் மொழிநடையில் எளிமையுண்டு
நீளிதிகாச புராணப் பொலிவு முண்டு
சித்தமுடன் நல்லவற்றை இயம்பும் பண்பு
சுத்தமுற மற்றவரின் மனதில்பதித்து
சுகம்பெறவே சுவைத்தொளிர ஈர்க்கும்பாங்கு
வித்தகன்தான் தமிழறிஞன் விதானம்பெற்றான்
விளைகல்விக் கோட்டத்தில் பணிப்பாளனாகி
முத்தமிட்டார் கல்விதனை முகிழ்க்கவென்றே
மும்மூரமாய்க் கலைவளர்க்கப் பணிகளாற்றி
அர்த்தமுடன் ஆதரவும் அன்புப்பிணைப்பும்
அகம்மலர முகப்பொலிவும் நரைமுடியும்
மொத்தமதில் செம்மையாளன் எழுத்தால்மக்கள்
நலிவுகளைக் கொய்துநலம் சிறக்கவைப்பார்.

தெய்வதரிசனங்கள் தோற்றங்கள் மறைபொருட்கள்
தேர்ந்துநோற்கும் நோன்புக்கள் பலாபலன்கள்
உய்யத்தம்வாழ்வின் நம்பிக்கை யொளிக்கீற்று
உறைமனித ஆரோக்கிய உன்னதத்தின் வழிமுறைகள்
கைமருந்து மனத்தூய்மை கணம் தோறுமதுதேவை.

கருத்தோடு தத்துவத்தின் தெளிபொருளினுள்ளே
மெய்யுணர்வு ஊட்டிடவே புறச்சமயவாதமிட்டு
மேதினிக்குச் செழுமைதரும் மெய்க்கலைஞன் வாழியவே.

நல்லூர்க்கோட்ட அதிபர்கள்

பாடலாக்கம்

வே. ஞானகாந்தன்

அதிபர்,

யா/ இந்து ஆரம்பபாடசாலை, யாழ்ப்பாணம்.

**அணிந்துரை**

தமிழும் சைவமும் புலமையும் திறமையும்
தகவும் இசையும் சால்புறு கலைகளும்
கமழும் கோவையூர் கலைக் கடலினுள்ளே
கதிரும் கதிரவனைப் போல் உதித்தனனே!

பணிதல் இன்சொல் பயத்தல் பண்பினைப்
பகிர்தல் கல்வி வளம் பெருக்கல் பயனுறத்
துணிந்து செயற்படல் பிறருக்குதவுதல் துன்பந்
துடைத்தல் துலக்குதல் இவர் தம் அணிகளாம்.

சொல்லும் பொருளும் சுவை சேர் வாக்கும்
சுடர்விடு அறிவும் தூய நல்லெழுத்தும்
வெல்லும் செயலும் விழிப்பும் ஆர்வமும்
குணசேகரனின் உள்ளொழுகும் விழுமியங்களே!

இந்த மனிதனின் எத்தனம் எத்தனை
எடுத்துச் சொல்லுதல் இயலுமா அத்தனை!
அந்த மாமணி தன்னையே “தமிழறிஞன்”
என்று ஏத்தினர் தமிழ் உலகோ!

பல்சுவையுறு நாவல்கள் தெவிட்டாத இலக்கியங்கள்
பயனுறு கதைகள் பாங்கான பாடல்கள்
வித்தைகள் புரி கதை கட்டுரைகள் விமர்சனங்கள்
வானொலி நாட்டிய நாடகங்கள் சமய நூல்கள்
அறநூலாம் திருக்குறள் பாக்கள் 1330இற்கும்
அகிலமே செய்யாத கதைகள் எழுதிய
பெருமைக்கும் போற்றுக்கும்
கே.வி.கு. வே உரித்தாளர்.

நலம் திகழ் கோப்பாய் நாவலர் பள்ளி
குடிகொண்ட வித்தியா மகா கணபதியை
நித்தம் வளம் வந்து பெற்றாய் ஏற்றம்

வகுத்தளித்தவன் அவனே அன்றோ

உலகுக்கவன் தான் உருத்திரன்

உத்தமன் அவனை நம்பு!

நலம் பெறும் நல்லிலக்கியம்

அளிப்பான் உனக்கு.

வி. தயாபரன், வெற்றி இலக்கு

தயா அச்சகம், யாழ்ப்பாணம்.

பாடலாக்கம்

நயினை எஸ். எஸ். பிள்ளை.

**அணிந்துரை**

நூல்கள் எதற்காக எழுதப்படுகின்றன? கற்றவர்களுக்காகவா? அல்லது கற்பதற்காகவா....? கற்பதற்காகவென்றால் தற்பொழுது சமயம், இலக்கியம், கல்வி சார்பாக எழுதப்படுகின்ற நூல்களில் பெரும்பாலனவற்றைப் பலமுறை வாசித்தும் புரிந்துகொள்ள முடியாத நிலையே உள்ளது. திருக்குறள், பகவத்கீதை, சிவஞானபோதம், திருவருட்பயன் போன்ற இந்து தத்துவ நூல்களைப் பற்றி பண்டிதர்கள் முதல் பேராசிரியர்கள் வரை எழுதிக்கொண்டே இருக்கிறார்கள். இவற்றிலுள்ள கடினமான தன்மை பாமர மக்களை அந்நூல்களின் பக்கம் செல்ல விடாது தடுத்துக் கொண்டே இருக்கிறது. மேற்குறிப்பிட்ட தன்மையிலிருந்து விலகி பத்துப் வயதுப் பாலகன் கூட விரும்பிப் படிக்கும்படி தத்துவங்களைக் கதைகளாக்கித் தந்திருக்கிறார் திரு.கே.வி.

குணசேகரம். அவரை வாழ்த்துவதில் 2006இன் பின் ஓய்வு பெற்ற நல்லூர்க்கோட்ட அதிபர்களாகிய நாம் மிக்கப் பெருமையடைகிறோம்.

ஒப்பரும் சேவை செய்து ஓங்கிய நல்லறிஞனாகி

இப்படி உயர்ச்சி பெற்ற இனியவனைக் கண்டோம்.

செப்பரும் ஒழுக்கம் நேர்மை செயற்கரிய கல்வி ஞானம்

தப்பில்லாத் தமிழில் ஆர்வம் தளர்வில்லா மனிதப் பண்பு

எப்போதும் சேவை செய்யும் அப்பெரும் அப்பனே!

வாழ்க வாழ்க வளமுடனே.

ஓய்வென்று அலுத்துடல் சோராமல்

மடமடவென்று எழுதி எம்மண்ணுக்களித்து

தடல்புடலாய் கல்விச் சேவைதனை

தமிழர் வாழ்வு சிறக்கச் செய்து

உலகெங்கும் பரந்து வாழும்

தமிழர் தம் வாழ்வு சிறக்க

தமிழ்த்தொண்டு செய்யும்

தமிழறிஞனே வளமுடன் வாழ்ந்து

வளம்பெறச் செய் தமிழை.

**2006ஆம் ஆண்டின் பின் ஓய்வு பெற்ற நல்லூர்க்கோட்ட அதிபர்கள்.**

திரு. இ.சிவபாதசேகரம்.

திரு. சி. சோமேஸ்வரபிள்ளை.

திரு. பொ. கமலநாதன்.

திரு. பொ. நடராசா.

திரு. தி. கிருஷ்ணகுமார்.

திரு. ஆ. இரத்தினசிங்கம்

திரு. பொ. பத்மநாதன்.

திரு. வா. ஜெயரட்ணம்.

திருமதி. சி. விஸ்வலிங்கம்.

திருமதி. மா. வேதநாதன்.

## அணிந்துரை

சில நாட்களுக்கு முன் நான் பிரியாவிடை நிகழ்வில் கலந்துகொண்டேன். அங்கே அவரை அதிபர்களும், ஆசிரியர்களும், பேராசிரியர்களும் அவரது பெருமைகளை கூறியவிதம் எனக்கு வியப்பை அளித்தது. அதனால் அவரது நூலுக்கு நானும் அணிந்துரை எழுதலாம் என்று நினைத்தேன்.

இவர் எழுதிய பல நூல்களைப் படித்துள்ளேன். அனைத்தும் மிகவும் எளிமையான தமிழில் உள்ளன. அதில் உள்ள தத்துவங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கதைகள் கூறப்பட்டுள்ள விதம் எனக்குப் பிரமிப்பைத் தந்தது. இங்கே வள்ளுவருடைய சிறப்புப் பற்றியும், புராண இதிகாச நாயகர்களுடைய சிறப்புப் பற்றியும் வர்ணிக்கப்பட்டுள்ளது. மனித வாழ்க்கையை எப்படியும் வாழலாம் என்ற கற்பனையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தான் பலர். இதனால் உலகில் வாழும் மனிதர் தமது மாண்பை மறந்து பல தீய செயல்கள் செய்துகொண்டிருக்கின்றனர். அதை விலக்கி நீதியான வழியில் வாழவேண்டும் என்ற கோட்பாட்டை ஆசிரியரின் ஒவ்வொரு நூலும் சொல்கின்றது.

விஞ்ஞானிகளின் கருத்துக்களைவிட மெய்ஞானிகளின் கருத்துக்களையே மக்கள் அதிகம் நம்புகின்றனர் என்பது ஆசிரியரின் நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தர்மமான முறையில் வாழ்பவன் எப்பொழுதும் இன்பமாக வாழ்வான் என்பது அவரது எழுத்துக்களின் அடிப்படையாகும்.

திரு.வ.தில்லைநடராசா

கிராம உத்தியோகத்தர் தரம் 1

மக்கள் காவலன், கடமைவீரன், தொல்புத்திரன்.

## அணிந்துரை

எனது அன்பிற்கும், பெரு மதிப்பிற்குமுரிய நல்லூர்கோட்ட முன்னைனாள் பணிப்பாளர் திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் அன்பும், அறிவும், ஆற்றலும் மிக்க அறிஞனாக விளங்குகின்றார். எல்லோரிடமும் மிக எளிமையாகப் பழகக்கூடிய இவர் தன்னலமற்ற அர்ப்பணிப்பான ஒரு சேவையாளன். எந்த வகையான பிரச்சினைகளாக இருந்தாலும் பொருத்தமான ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் தீர்வு கண்டுவிடுவார். இவரின் சேவைக்காலம் பொற்காலமாகவே கருதப்படுகிறது. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் நல்லூர்க் கல்விக் கோட்டத்தை அகில இலங்கை ரீதியாக முதலிடம் அடையச் செய்தவர். நூற்றுக் கணக்கான புத்தகங்களை எழுதி வெளியிட்ட இவர் பரபரப்பு எதுவுமின்றி மிக அமைதியாக வாழ்ந்து கொண்டிருப்பது இவரை ஒரு ஞானியாகக் காட்டுகின்றது. இவரது எழுத்துக்கள் தரம் ஒன்று மாணவர்களிலிருந்து வயது சென்ற முதியவர் வரை கவரக்கூடியன. பாடசாலையையும் ஆசிரியர்களையும், மாணவர்களையும், கல்வி நிர்வாகத்தையும் கருவாகக் கொண்டே இவரது கதைகள் யாவும் அமைந்துள்ளன. திருக்குறள், பகவத்கீதை, திருவருட்பயன் போன்ற இந்து தத்துவ நூல்களுக்கான கதைகள் கூட மேற்குறிப்பிடப்பட்ட பாத்திரங்களை அடிப்படையாக வைத்து நீதியைப் போதிப்பனவாகவே உள்ளன. இவரது எழுத்துப்பணி தொடரவேண்டும், நோய்நொடியின்றி பல்லாண்டு காலம் வாழவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. க. வடிவேல்

அதிபர் தரம் 1

யா / காசிப்பிள்ளை வித்தியாலயம்

யாழ்ப்பாணம்.

## **அணிந்துரை**

திரு. கே. வி. குணசேகரம் அவர்கள் எழுத்துத்துறையில் நீண்டதொரு வரலாற்றைக் கொண்டவர். இவர் வீரகேசரி, மித்திரன், பத்திரிகைகளில் எழுதத்தொடங்கி அன்பான வேண்டுகோள், வாழ்க்கை என்பது... வரை ஏறத்தாழ மூவாயிரத்திற்கும் அதிகமான கதைகளை எழுதிக் குடித்தவர். சமயநூல்களை ஆழ்ந்து ஆராய்ந்து அதன் மையக்கருத்துக்கள் கலையாது எளிய மொழிநடையில் சாதாரண மக்களைச் சென்றடையும் வகையில் கதைகளாக வடித்து வாசகர் இதயங்களைக் கவர்ந்தவர்.

“யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்” என்னும் கூற்றுக்கிணங்க, தன் அனுபவப்பாதையில் கண்ட, அனுபவித்த விடயங்களையெல்லாம் ஏனையோருக்கும் அவை படிப்பினையாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் எழுதிய கதைகளுக்கு மெருகூட்டும் வகையில் இடையிலே புகுத்தி நடைமுறை உண்மைகளை மக்கள் அறியவேண்டும் என்ற நோக்கில் வெளிப்படுத்தி வருவதை வாசகர் உள்ளங்கள் அறியும்.

இயல்பாகவே வசீகர முகமும் எல்லோரையும் கவர்ந்திழுக்கும் பேச்சு வண்மையும் கொண்டவர். அதிகார தோரணையில் அல்லாது வேண்டுகோள் பாணியிலேயே இவரது கட்டளைகள் அமைந்திருப்பதனால் நல்லூர்க் கல்விக்கோட்டச் சமூகம் மிக விருப்புடன் அவரது வேண்டுகோளுக்குச் செயலுருக் கொடுத்து வந்தது.

பெயருக்காகவோ, புகழுக்காகவோ, பரிசிற்காகவோ எழுதாது தான் பெற்ற அறிவை, அனுபவத்தை சமூதாயத்திற்கு வழங்கவேண்டும் என்ற உயரிய நோக்கில் கதைகளாக வடித்து வரும் திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் எழுத்துத்துறையில் ஒரு வரலாற்று நாயகனாகத் தடம் பதித்துள்ளார். அவரை அறியாமலே அவரது புகழ் உலகெங்கும் வியாபித்து வருகின்றது. இத்தகு கனவானின் எழுத்துலகச் சேவை மேலும்

மேலும் விருத்தியடைய சாயி பகவானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டுகின்றேன்.

முருகேசு முரளிதரன் TRD. B.A, PGDE , M.ED

அதிபர்

ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.

சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்.

## அணிந்துரை

திரு.கே. வி குணசேகரம் அவர்கள் எழுத்துலகில் பல்வேறு பரிநாமங்களிலும் தடம் பதித்துச் செல்வதைக் காணலாம். இவர் தனக்கென ஓரு சீரான பாதையில் தன் கருத்துக்களை ஆதாரபூர்வமாகவும், தர்க்கரீதியாகவும் வெளிப்படுத்துவதில் வல்லவர். “இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம்” என்ற நூற்தொகுதியில் பத்துப் பாகங்களைப் படைத்துள்ளார். இந்நூல்களைச் சிறுவர்கள், பெரியவர்கள், பாமரர்கள் யாவரும் கற்றுப் பயன்பெறும் வகையில் இலகு நடையில் தான் பெற்றுக்கொண்ட பட்டறிவினை ஒருங்கிணைத்து அமைத்துள்ளார் என்றால் அது மிகையாகாது.

ஆசிரியரின் நூல்கள் வாசகர்களை அந்நூலில் திளைக்கச் செய்யும் வகையில் வடிவமைத்துள்ளார். தான் கூற எடுத்துக்கொண்ட விடயத்தைச் சிருஷ்டிக்கப்பட்ட பாத்திரங்களை உள்ளடக்கிய கதைகளினூடாக வெளிப்படுத்திச் செல்லும் பாங்கு சிறப்பானதோர் அம்சமாகும்.

திரு.கே.வி. குணசேகரம் அவர்கள் எழுதிய கட்டுரைகள், சிறுவர் கதைகள், கவிதைகள், பகவத்கீதைக் கதைகள், நாடகங்கள் எனப்பலவாகும். இவை ஒவ்வொன்றும் வாசகனை வாசிக்கத்தூண்டும் வகையிலேயே எழுதப்பட்டதாகும். இவரது படைப்புக்கள் இளம் தலைமுறையினர்க்கும், சிறார்களுக்கும் பல அறிவியல் விடயங்களை இலகு நடையில் விளங்க வைக்கின்றன.

இந்து தத்துவங்களை இலகு தமிழில் ஆர்வத்தைத் தூண்டும் விதத்திலும் தேடலை ஊக்குவிக்கும் பாங்கிலும் தத்துவங்களாகவும், கட்டுரைகளாகவும் எழுதி வருகிறார். இந்த வகையில் மூவாயிரத்திற்கு அதிகமான கதைகளையும் ஐந்நூறுக்கு

மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதிப் பெரும் பணியாற்றி வருகின்றார். திருக்குறளில் உள்ள அனைத்துப் பாக்களுக்கும் அதன் கருத்துக்களை இலகுவில் யாவரும் மனதில் பதிக்கக்கூடிய வடிவில் கதைகளாகத் தந்துள்ளார். இதுவரை இதை யாரும் செய்யவில்லை. திருக்குறள் கதைகளுக்குத் தேவையான இடத்து இதிகாச புராண விடயங்களைப் புகுத்தி விளக்கியுள்ளார்.

இவரது எழுத்துப் பணி தொடரவேண்டும் என்பது பல்லாயிரம் வாசகர்களின் விருப்பமாகும். இப்பேரவாவை நிறைவு பெறச் செய்வதற்கு அவர் நீண்ட நாட்கள் ஆரோக்கியமாக இருக்க எல்லாம் வல்ல இறையோனை வேண்டுகிறேன்.

'மிதிலை' சோ. தி. கிருஸ்ணகுமார்

அரசடி லேன், ஓய்வு பெற்ற அதிபர்.

திருநெல்வேலி.

## அணிந்துரை

சைவசித்தாந்தம் உலகப்பொருட்கள் அனைத்தையும் பதி(இறை), பசு(உயிர்), பாசம்(தளை) எனும் மூன்று பொருள்களில் அமைத்துக் கொள்கின்றது. இவை யாவும் நித்தியமானவை. அவற்றில் பாசமானது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களைக் கொண்டது. இம்மும்மலங்களில் ஒன்றாகிய மாயை சைவசித்தாந்த தத்துவத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. "மாயை" என்ற சொல்லானது அதன் தொழிலை அடிப்படையாகக் கொண்டமைந்தது. அதாவது, மாய் - அழித்தல், ஐ – ஆக்குதல் என்பதாம். உலகம் தோன்றுவதும், அழிவதும் ஆகிய இரு நிலைகளும் மாயையின் காரணமாகவே நடைபெறுகிறது. எனவே, மாயையானது உலகத்தின் தோற்றம், இருப்பு, அழிவு ஆகிய மூன்று நிலைகளின் அடிப்படையாக விளங்குகின்றது. இவ்வாறு உலகமாகிய காரியத்திற்கு "மாயை" முதற்காரணமாக அமைவதுடன் மூலமாகிய ஆவணத்துடன் சேர்ந்தும், கன்ம மலத்தின் துணையோடும் செயலாற்றுகிறது என்கிறது சைவசித்தாந்தம்.

இத்தகைய சிறப்புக்கொண்ட மாயையைப் பற்றி எளிமையாகவும் அனைவரும் விளங்கிக்கொள்ளக் கூடியவகையிலும் "மாயை பற்றிய தத்துவக்கதைகள்" எனும் இந்நூலை திரு. கே.வி. குணசேகரம் அவர்கள் எழுதியுள்ளமை சிறப்பாகும். சைவசித்தாந்தமானது இலகுவில் எல்லோராலும் புரிந்து கொள்ளக்கூடியதன்று. ஆனால் ஆசிரியரவர்கள் இந்நூலில் கடினமான தத்துவக் கருத்துக்களையெல்லாம் கதை வடிவில் அமைந்துள்ளமையினால் பெரியோர் மட்டுமல்லாது சிறுவர்களும் புரிந்து கொள்ளக்கூடியதாக இந்நூல் விளங்குகின்றது. இத்தகைய சிறப்பான உத்தியைக் கையாண்ட நூலாசிரியர் திரு.கே.வி.குணசேகரம் அவர்களை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.

பெரியோர் மட்டுமன்றி மாணவர்களும், இளைஞர்களும் சைவசித்தாந்தத்தை, குறிப்பாக மாயை பற்றி எளிமையாக அறிந்து கொள்ளும் வகையில் அளவில் சிறியதாக இந்நூல் அமைக்கப்பெற்றுள்ளமை சிறப்பானதாகும். இவ் அரிய நூலை அனைவரும் படித்துப் பயனடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

இன்றைய காலத்தின் அவசியத் தேவையாக இருக்கின்ற சமய அறிவு பற்றிய அடிப்படையானதும், தெளிவானதுமான கருத்து ஞானத்தின் தொகுப்பாக வெளியிடப்படுகின்ற இந்நூல் சிறந்த ஓர் படைப்பாகும். இவ் அரிய பணியைச் செய்த ஆசிரியரைப் பாராட்டுகின்றேன். மேலும், இது போன்ற சிறந்த முயற்சிகளை அவர் மேற்கொள்ள வேண்டும் எனவும் மனமார வாழ்த்துகின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்.

பணிப்பாளர்,

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கொழும்பு – 04.

**அணிந்துரை**

திரு. கே.வி. குணசேகரம் அவர்களின் "திருவருட்பயன் கதைகள்" என்ற நூலை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. நான் கல்வி கற்றபோது பாடநூலாக இருந்த திருவருட்பயனை நான் மனனம் செய்து கேள்விக்கு ஏற்றபடி பதில் எழுதினேன். அதன் அர்த்தம் அப்போது எனக்குப் புரியவில்லை.

திரு. கே.வி. குணசேகரம் அவர்கள் இந்து தத்துவநூல்களைக் கதைகளாக்கி அவற்றிற்கு ஒரு புதிய இலக்கிய வடிவம் கொடுத்து வருகிறார். இந்த வகையில் அவர் ஆத்திசூடி, பகவத்கீதை, திருக்குறள் போன்றவற்றின் சூத்திரங்கள் அனைத்திற்கும் உரையும், விளக்கமும் கதையும் எழுதியுள்ளார். அவற்றையெல்லாம் முழுமையாக வாசிக்காவிட்டாலும் ஒரு சில பகுதிகளை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

திருவருட்பயன் என்ற கதை நூலில், திருவருட்பயனில் உள்ள நூறு குறள்களும் உள்ளன. அதற்கு உரையுள்ளது. நீண்ட விளக்கமும் உள்ளது. பொருத்தமான கதைகளும் உள்ளன. இக்கதைகளை தனித்தனியாகவும் வாசிக்கலாம். தொடர்கதையாகவும் வாசிக்கலாம். விறுவிறுப்பான சைவசித்தாந்தக் கருத்துக்களைக் கூறும் ஒரு நாவலாகவே இதை நான் கருதுகிறேன். ஒரு மனிதனின் ஆசாபாசங்கள், இன்பதுன்பங்கள், காதல் லீலைகள், போட்டி பொறாமை என்று சொல்லப்படுகின்ற அத்தகையும் மிகவும் சுவையாகச் சொல்லப்பட்டுள்ளது.

சைவசித்தாந்தம் என்றதும் கடவுளைப் பற்றிய தத்துவம் என்ற மாயையை நீக்கி அது வாழ்க்கைத் தத்துவம் என எடுத்துக் கூறப்பட்ட விதம் மிகமிகப் புதுமையானது. இது போலத்தான் இவரது திருக்குறள் கதைகளும், பகவத்கீதைக் கதைகளும் எழுதப்பட்டுள்ளன.

சைவசித்தாந்தத்தைப் படிக்க விரும்புவோருக்கும், அறிய விரும்புவோருக்கும் அது இலகு தமிழில் கூறப்பட்டுள்ளது. கதைகளை வாசிக்க விரும்புவோருக்கும் சுவைபடக் கூறப்பட்டுள்ளது. சைவமக்கள் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய அரிய நூல் இது. திரு. கே.வி குணசேகரம் அவர்கள் இந்து தத்துவ நூல்கள் அனைத்தையும் கதைகளாக்க வேண்டும். அவை கதைகளானால் எல்லோரும் இலகுவில் விளங்கிக் கொள்வார்கள்.


வீ. கணேசராசா

S.L.E.A.S III

அதிபர்

யாழ்பபாணம் இந்துக்கல்லூரி.


**அணிந்துரை**

திருக்குறளுக்கு உரை கதைமூலம் திரு.கே.வி. குணசேகரம் எழுதியுள்ளார். முன்பு திருக்குறள்ப்பாக்கள் 1330 இற்கும் தனித்தனிக் கதைகள் எழுதி 24 புத்தகங்களாக வெளியிட்டவர். அதன் பின் 100 இற்கு மேற்பட்ட திருக்குறள்ப் பாக்களுக்கு இலக்கியநயமும் அதற்குப் பொருத்தமான கதைகளும் எழுதியவர். அதை விட 50 குறள்களுக்குப் புதிய உரை எழுதியவர். அவர் திருக்குறளுக்கு உரையைக் கதையாக எழுதியது எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. ஏனென்றால் அவர் ஆத்திசூடி, பகவத்கீதை, திருக்குறள், திருவருட்பயன், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, இன்னிலை, திரிகடிகம், ஆசாரக்கோவை, பழமொழி 400, சிறுபஞ்சமூலம், ஏலாதி, முதுமொழிக்காஞ்சி போன்ற நூல்களில் உள்ள அனைத்துப் பாக்களுக்கும் கதை எழுதியவர். அத்துடன் திருமந்திரம் என்ற சைவசித்தாந்த நூலின் 200 பாக்களுக்குக் கதை எழுதியவர். மிகுதியான பாக்களுக்குக் கதை எழுதிக்கொண்டிருக்கிறார். இதைவிட வேதங்கள், உபநிடதங்களைக் கற்று எழுதவாசிக்கத் தெரிந்த அனைவருக்கும்

விளங்கக் கூடிய முறையில் இலகுவாக சமூகத்தில் நடைபெறும் சம்பவங்க;டாகக் கதை எழுதியவர். அவர் எழுதிய நூல்கள் பலவற்றை வாசித்து அவருடன் விமர்சிப்பேன். அந்த நட்பு இப்போ திருக்குறளினை கதை மூலமான உரைக்கு அணிந்துரை எழுத வைத்துள்ளது.

கதைகள் மிக மிகப் பொருத்தமானதாகவே இருக்கின்றன. அவர் ஒரு குறளுக்குக் கதை எழுதினால் தான் சொல்லும் கருத்தைக் கதையால் உறுதி செய்து விடுவார். அது அவரது எல்லாக் கதைகளிலும் காணப்படும் அரிய பண்பாகும். உதாரணமாக மிகவும் சிக்கலான ஒரு குறளுக்கு அவர் எழுதிய உரையும், கதையும் என்னை வியக்க வைத்தது.

**"தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்**

**மெய் வருத்தக் கூலி தரும்"**

இப்பாடலுக்கு அவரின் உரை பின்வருமாறு அமைகிறது. தெய்வத்தால் எதுவும் ஆகாது எனினும் முயற்சி செய்து உடலை வருத்தினானால் அவனது முயற்சிக்கேற்பக் கூலி கிடைக்கும். இதற்கு அவர் எழுதிய கதை. ஒருவன் சிவபெருமானை நினைத்துக் கடுந் தவம் செய்கிறான். அதனால் சிவபெருமான் அவரின் முன்தோன்றி என்ன வரம் வேண்டும் என்று கேட்கிறார். அவன் தான் பெரும் கோடீஸ்வரனாக வேண்டும் என்று கேட்கிறான். சிவபெருமான் மகிழ்ந்து வரமளிக்கிறார். அவன் மகிழ்வோடு வீட்டுக்கு வந்து செயற்படாமல் காத்திருக்கிறான். காலம் கடந்ததே தவிரப் பணம் கிடைக்கவில்லை. அதனால் அவன் மனம் வருந்தி மீண்டும் தவம் செய்கிறான். மீண்டும் சிவபெருமான் அவனுக்குக் காட்சி தருகிறார். அவன், "கடவுளே, நீங்கள் என்னைக் கோடீஸ்வரனாக்குவதாகக் கூறினீர்கள். இதுவரை நான் கோடீஸ்வரனாகவில்லை" என்று அழுதான். அப்போது சிவபெருமான் சொன்னார்' "மகனே, முயற்சி செய்தல் வேண்டும். நீ செயலற்றிருக்கிறாய். ஏதாவது முயற்சியிலீடுபடு. அதிஷ்ட இலாபச் சீட்டை எடு பரிசை உனக்குத் தருகிறேன். இல்லாவிட்டால் மரம் நடுவதற்கு ஒரு குழியை வெட்டு அதனுள்ப் புதையலை வைக்கிறேன்" என்று கூறிவிட்டு மறைந்தார். இது ஐந்து பக்கக் கதை இதைச் சுருக்கமாகச் சொல்லியுள்ளேன்.

இக்குறள் மூலம் சைவசித்தாந்தத்தின் கடவுள்க் கொள்கையை விரிவாகக் கூறுகிறார்.

திருமந்திரக் கதைகள் அருமையிலும் அருமை. சிவனது செயல்களையும் சைவசித்தாந்த தத்துவங்களையும் சிறுவர்கள் கூடப் புரிந்து கொள்ள வைக்கும் தன்மை பாராட்டுக்குரியது. திருக்குறளின் உரையை அவர் கதை மூலம் எழுதும் போது உரையின் சிறுபகுதி கூட விலகவில்லை. பாத்திரங்கள் உரையை வசனமாகப் பேசும் பாங்கு புதுமையானது: சுவையானது' உண்மையானது. தமிழுக்குப் பெருமை சேர்ப்பது. இது அவரது 100ஆவது நூல். ஏற்கனவே 67 நூல்களை வெளியிட்டுள்ளார். 30 இற்கும் மேற்பட்ட நூல்கள் அச்சேறக் காத்திருக்கின்றன. அதில் பழமொழி 400 என்ற நூலுக்கு எழுதிய பத்து நூல்கள் லங்கா பதிப்பகத்தினரால் தற்போது அச்சிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவர் திருவருட்பயனுக்கும், திருமந்திரத்திற்கும், பகவத்கீதைக்கும் கதை எழுத ஆரம்பித்த போது இந்நூல்களுக்கு எப்படிக் கதை எழுதுவது என்று பலரும் அதிசயப்பட்டனர். ஆனால் திருவருட்பயன் கதைகளை மிகவும் தரமான கதைகள் என்றும், சைவ சித்தாந்தக் கருத்துக்களுக்கு முழுமையான வடிவம் கொடுத்துள்ளதென்றும், கதைகளும் தத்துவங்களும் பொருந்தியுள்ளன என்றும், திருவாவடுதுறை ஆதீனம் சான்றிதழ் கொடுத்துள்ளது. அத்துடன் பகவத்கீதைக்கான கதைகள் அதிசயிக்கத்தக்க படி விற்பனை ஆகின. இவரது இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம் என்ற நூல் ஆறாவது பதிப்பாக வெளி வந்துள்ளது. இதை விட யாரும் எழுதாதவற்றையே ஆசிரியர் எழுதிவருகிறார். மாயை பற்றி எழுதிய கதைகள் மாயை பற்றிய தத்துவங்களை அருமையாக விளக்குகின்றது.

கே.வி. குணசேகரம் அவர்கள் ஆசிரியராகப் பணிபுரிந்து, அதிபராகப் பதவி வகித்து, கல்விப்பணிப்பாளரானவர். அதனால் சிறுவர்களின் மனநிலையை அறிந்து அவர்களின் வாசிப்பை மேம்படுத்தவே அவர் நூல்களை எழுதுகிறார். இவரது கல்விப் பணியும் அளப்பரியது. இவர் அதிபராகக் கடமை புரிந்த கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் கல்வியில் பல சாதனைகளை நிலை நாட்டியது. இவர் கல்விப் பணிப்பாளராக நல்லூர்க் கல்விக் கோட்டத்தில் 2005 முதல் 2009 வரை

கடமையாற்றும் போது யாழ்ப்பாணத்தில் பெரும் யுத்தம் நடைபெற்றது. நவீன யுத்தக் கப்பல்கள், ஆகாய விமானங்கள், பீரங்கிகள் என்பன பாவிக்கப்பட்டன. அவ்வேளையில் மின்சாரம் இல்லை, நூல்கள் இல்லை, வசதிகள் இல்லை. ஆனால் நல்லூர்க் கோட்டம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் முதற் கோட்டமாகத் தெரிவாகியது. இவர் கல்வியாளர் மட்டுமல்ல கல்வியூட்டும் தாயான சரஸ்டவதிக்கொப்பானவர். இவரது கல்விச்சேவை தனித்துவமானது. அதுபோல எழுத்தும் தனித்துவமானது. யாராலும் இதுவரை எழுதப்படாதது. பகவத்கீதை, மகாபாரத யுத்தத்தில் உபதேசிக்கப்பட்டுப் பல ஆயிரம் வருடங்கள் கழிந்து விட்டன. அத்தத்துவங்களுக்குப் பொருத்தமான கதைகளை யாரும் எழுதியதாக நான் அறியவில்லை. திரு.கே.வி. குணசேகரம் அவர்கள் உரை, விளக்கம், கதை என்று 700 சுலோகங்களுக்கும் எழுதியுள்ளார். உரை மிக மிக இலகுவானது. விளக்கம் அருமையானது. கதை பொருத்தமானது. இத்தகைய ஒரு மகான் எழுதிய நூலுக்கு அணிந்துரை வழங்க நான் முற்பிறப்பில் தவம் செய்திருத்தல் வேண்டும். திருக்குறள் என்ற நூல் உள்ளவரை கே.வி. குணசேகரம் அவர்களின் கதை மூலமான உரையும் நிலைத்து நிற்கும். திருக்குறளைப் போல இதுவும் பல்வேறு வகையான மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். திரு.கே.வி. குணசேகரம் அவர்கள் இன்னும் இன்னும் தமிழுக்கும் சமயத்திற்கும் கல்விக்கும் தொண்டாற்ற இறைவன் வழிவகை செய்தல் வேண்டும்.

மா. ஆறுமுகதாசன்,

(வாசகர்)

தமிழ் இலக்கியத்தில் பல்வகை இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை, சிறுவர் இலக்கியம், கட்டுரை இயல், ஆய்வு முதலான துறைகளில் முழு ஈடுபாட்டுடன் தன் பங்களிப்பினைச் செய்து ஈழத் தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்து வரும் கே.வி.குணசேகரத்தை எண்ணும் போதும், ஆக்கங்களைப் படிக்கும் போதும் பயனள்ள பணிகளைகளை ஆற்றும் படைப்பாளி என்ற உணர்வு ஏற்படுகின்றது.

கே.வி.குணசேகரம் தன்னையொரு சிறந்த எழுத்தாளராக இணங்காட்டியுள்ளார். முக்கியமாக இவர் சிறுவர் இலக்கியத்திற்கு ஆற்றி

வரும் பணி மிகவும் கணிக்கப்பட வேண்டியது. ஈழத்தில் அவசியம் வளர வேண்டிய இலக்கியத் துறையாகச் சிறுவர் இலக்கியம் விளங்குகின்றது. ஆசிரியராகச் சிறார்களுடன் பழகி பெற்ற சிறார்களின் மனநிலையைப் புரிந்து இயல்பாகவே கைவரப் பெற்ற இலகுவான உரை நடையில் இவரது எல்லாக் கதைகளும் உண்டு. இவ்வாறான பல்பாழமானங்களைப் பெறற் குணசேகரத்தின் ஆற்றல் இன்று திருக்குறள் ஆய்வில் திரும்பியுள்ளது. உலகப் பொதுமறை, வாழ்வியல் நூல், அரசியல் கைநூல், பொருளாதார வழிகாட்டி என்றெல்லாம் கூறப்படும் திருக்குறள் மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் நூலாகவும் விளங்குகின்றது. கால தேச வர்த்தக மானங்களைக் கடந்து எக்காலத்திற்கும் எத்தேசத்திற்கும் பொருத்தமான நெறிகளைப் போதிக்கின்றது. பாரம்பரிய செய்யுள் மரபை முதன் முதலாக மாற்றிய புதுக்கவிதை திருக்குறள் தான். திரு.கே.வி.குணசேகரம் திருக்குறளை மக்களிடையே எடுத்துச் சொல்வதற்குப் பின்வரும் முயற்சிகளை தன்னை அர்ப்பணித்துள்ளார்.

1. 1330 குறள்களின் அர்த்தங்களை தவறின்றிப் புரிந்து கொள்ள தற்போதய சமூக அமைப்பினூடாக நவீன கதைகளை எடுத்துரைத்தல்.
2. இன்றைய சமூகத்தின் வாழ்வியலுக்குப் பொருத்தமானவர்கள் இலகுவில் புரிந்து கொள்ளும் வகையில் திருக்குறள் பாக்களுக்கு உரை எழுதல். (யாழ்ப்பாண உரை என்பது அவையின் கூற்று.

திருக்குறள் கதைஞ்ஞர் கே.வி.குணசேகரத்தின் திருக்குறள் கதைகளை வாசிக்கும் போது பெறப்படும் உணர்வுகளும், முடிப்புக்களும் வருமாறு,

1. கே.வி.குணசேகரம் என்ற புனைகதைப் படைப்பாளி. 1330 குறள்களுக்கும் கதைகளை ஆக்குவதற்குப் பின்னனியில் நின்றுள்ளார்.
2. கே.வி.குணசெகரம் என்ற சிறுவர் நாவல் ஆசிரியரின் அனுபவம் மாணவர்களும், மற்றவர்களும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய பாசாங்கற்ற எளிதான உரை நடையில் எழுதப்பட்டமை.
3. அவரது திருக்குறள் கதைகளில் நல்லதொரு சமூகத்திற்கு அமைய வேண்டிய அறநெறி ஒழுக்கங்களை நவீன சமூகத்திற்கு ஏற்புடையதாக வற்புறுத்த வேண்டும் என்ற ஆவல் இருக்கின்றது.
4. அவரது ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள கதை ஒவ்வொன்றும் தனித்தனிக் கதையாக விளங்குவதோடு கூட்டுமொத்தமாக எல்லாக் கதைகளும் சேர்ந்து முழுமையான ஒரு நாவலை வாசித்த உணர்வைத் தருகின்றது.

5. பாசாங்கற்ற மொழிநடையில் மக்களின் பேச்சுவழக்குகளைக் கூடியவரை சரலமாகப் பெய்து கதைகளை ஆக்கியுள்ளமை சிறப்பாகவுள்ளது.
6. அவருக்குப் பரிச்சயமான ஆசிரிய உலகமாந்தர்களும், சமூகமாந்தர்களும் அவரது திருக்குறள் கதைகளில் பாத்திரங்களாக வருகின்றன. அதனால் பாத்திர வார்பு யதார்த்தப் பண்பினைக் கொண்டுள்ளது. சம்பவங்கள் நம்பகத் தன்மை வாய்ந்துள்ளன.

திருக்குறளின் ஓர் இரு குறட்பாக்களுக்குக் கதைகள் எழுதிவிடுவதென்பது சிரமமான பணியாகாது என்கிறது. அதனைப் பல எழுத்தாளர்கள் செய்துள்ளனர். ஆனால் திருக்குறளின் முழுப்பாக்களுக்கும் கதைகள் எழுதிய பெருமை குணசேகரத்திற்குரியதாகிறது. சில கதைகள் வலிந்து கட்டப்பட்டனவாகத் தெரிகின்ற போதும் பெரும்பாலான கதைகள் பொறுமையோடும் சமூகப் பொருப்போடும் படைக்கப்பட்டவை என்பதில் இரு வார்த்தைகள் இல்லை. திருக்குறள் கதைஞ்ஞர் கே.வி.குணசேகரத்தின் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

கலாநிதி. க. குணராசா

செங்கையாழியான்

75/10A, பிறவுண் வீதி,

நீராவியடி,

யாழ்ப்பாணம்.

கலியுகவரதனாகிய முருகப் பெருமானது பெருமைகளைக் காலத்திற்குனுக் காலம் அடியவர்கள் தமது உள்ள உணர்வுகளால் உணர்த்தி வந்துள்ளனர். முருகப் பெருமானும் மக்களிடத்திலே அறியாமையைப் போக்கி ஞான ஒளியேற்றுவதற்கு அவர்களைக் கருவியாகப் பயன்படுத்தி வந்ததை அனைவரும் அறிவர். முருகனின் திருவருள் பெற்றோர் உள்ளத்தால் உணர்ந்து கொள்வர்.

இவ்வகையில் யாழ்ப்பாணம் கோப்பாயைச் சேர்ந்த ஓய்வு பெற்ற நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் கல்வி பணியில் ஓய்வு பெற்ற போதும் ஆன்மீகப் பாதையில் உள்ளத்தை வழிப்படுத்திச் செல்வதனால் முருகனது பெருமைகளை உள்ளத்தில் உணர்ந்தது மட்டுமன்றி அவற்றை மற்றவர்களும் அனுபவிக்கும் வகையில் “பிரமமாய் நின்ற சோதி” என்ற நூலை எழுதி வெளியிடுவது அறிந்து முருகனின் திருவருளை வியந்தேன்.

முருகப் பெருமானின் திருவிளையாடல்கள் ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கேற்ப உணர்த்தப்படும். அவரவர் தத்தம் நிலைக்கேற்ப முருகனது பெருமைகளை உணர்ந்து அவனையே தஞ்சம் என அடைவர். வாழ்வில் அமைதியும் சாந்தியும் பெறுவார்.

இவ்வகையில் முருகனது சிறப்பினைப் ‘‘பிரமமாய் நின்ற சோதி’’ என்ற இந்நூலில் பல கோணங்களில் ஆசிரியர் உணர்த்தியிருக்கின்றார். வெளிப்படுத்தியிருக்கின்றார். முருகனது பெருமைகளை பல நூல்கள் மூலம் கற்றுத் தெளிந்து பொருத்தமான இடங்களில் அவற்றை ஆதாரப்படுத்தித் தனது மெய்யுணர்வை அடியவர்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதியும் வகையில் இலகுநடையில் அமைந்துள்ளது.

எனவே இந்நூல் முருகனது பெருமைகளைச் சிந்திக்கும் அடியவர்களுக்கு அருமருந்தாக அமைந்துள்ளது. எனவே இந்நூலைக் கற்று முருகனின் திருவருளைப் பெறவேண்டும் எனவும் நூலாசிரியர் முருகனின் பெருமைகளைத் தொடர்ந்து வெளியிட வேண்டும் என்றும் ஆற்றங்கரையமர்ந்து அருள்புரியும் செல்வச்சந்நிதியானை வேண்டி முருகன் திருவருள் பெறப்பிராத்திக்கின்றேன்.

சந்நிதியான் ஆச்சிரமம்,

தொண்டமனாறு.

04.02.2010.

திருக்குறள் கதைகள் இன்பத்துப்பால் -1161-1250

கே.வி.குணசேகரம்

அணிந்துரை

உலகளாவிய ரீதியில் காலம் காலமாகத் தமிழர் பண்பாட்டு வளர்ச்சிக்கு வழிகாட்டி வரும் இலக்கியங்களில் திருக்குறள் முதன்மை நிலையிலுள்ளது. இன்றைய நவீன நாகரீக வளர்ச்சியின் உச்சநிலை மாற்றங்களுக்கு ஏற்ப மனித இரசனை அனுபவங்களுக்கு ஏற்பச் சுவையான கதைகள் வழியாகத் திருக்குறளை உயிர்ப்பித்திருக்கின்றார் இந்நூலாசிரியர் திரு.கே.வி.குணசேகரம் அவர்கள். இங்கே நாகரீகம் என்பதை கடற்பயணத்திற்கு ஒப்பாகவும், பண்பாட்டை துறைமுகத்திற்கு நிகராகவும் இயம்பலாம். எவ்வளவோ நாகரிக அலைகள் புரண்டபின்னரும் தமிழர் தம் வாழ்வியற் பெருமையைக் குறிகாட்டி, தமிழர் பண்பாட்டுத் துறைமுகக் கலங்கரை விளக்காக நின்றுரைப்பது திருக்குறள ் என்ற பொக்கிச நூல். இதன் அறத்துப்பாலில் உள்ள குறள்களுக்கு அற்புதமான கதைகளை எழுதிய நூலாசிரியர். தற்பொழுது இன்பத்துப்பாலில் உள்ள பாக்களுக்கு(250) அகத்தினை நோக்கில் ஜனரஞ்சகமாகவும், ஆழமாகவும் கதைகளை ஆக்கியுள்ளார். அவருடைய பழுத்த எழுத்தாற்றல்

அனுபவங்கள் வெகுகச்சிதமாகக் கதைகளினூடாகப் பிரதிபலிக்கின்றன. உலகம் உய்திட, மக்கள் வாழ்வாங்கு வாழ, இல்லறம் இன்றியமையாததாகும். சந்ததிகள் பெருகவும், மனிதகுலம் தளைக்கவும், இல்வாழ்க்கை இனித்திடவும், குடும்பங்கள் சிதைவுறாமல் நல்வாழ்வு வாழவும் பல்வேறு வழிகாட்டல்களை ஆர்வத்துடன் படிக்கும் நோக்கில் ஒவ்வொரு குறளுக்கும் ஏற்பக் கதைகள் தொகுக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ள விதம், இலக்கியத் திறனாய்வுகளுக்கு அப்பால் இந்நூலாசிரியரின் தனித்தன்மைகளின் பிரகாசிப்புக்கள் இக்கதைகளில் தெரிகிறது. "மயங்கும் நெஞ்சம்" என்ற மகுடத்தில் ஆரம்பித்து உயிர்க்குடிக்கும் கண்கள், ஐம்புல இன்பம், மழை, உருகும்மனம், இணைந்த இன்பம், என்ற வகையில் பல பரிமானத் தலைப்புக்களின் கீழ் அன்பும் கவர்ச்சியும், அனுசரனையும், விட்டுக்கொடுத்தலும், புரிந்து கொள்ளலும், ஆண் பெண் ஊடலுக்கு அவசியமானவை, இவ்வூடல் அறமே இல்லறத்தை நல்லறமாக்கும் என்ற தொணியில் ஒவ்வொரு குறளுக்கும் கதைகள் எழுதப்பட்டுள்ளன. தமிழர்களுடைய அகத்திலே காதல் என்பது பிறவிதோறும் தொடர்வதாகவும், உள்ளம் இயைந்த உடலுறவும், உடன் இயைந்த உள்ள உறவும் வாழ்வின் பயனாக உள்ளமையையும் கதைகள் திருக்குறளை ஆதாரமாக வைத்து எடுத்துரைக்கின்றன. உள்ளத்திசைவுடைய காதலும், உடற்புணர்ப ்புடைய காமமும் முகிழ்த்த பின்னரான இல்லற வாழ்வின் எதிர்பார்க்கைகள் காமத்துப் பாலில் கருத்துரைகளாகின்றன. தலைவனும் தலைவியும் முதன் முதலில் கண்டு காதல் கொள்வதும், அதன் தொடர்ச்சியாக உள்ளத்தாலும் உடலாலும் இணைந்து இன்பம் துய்க்கும் நெறிமுறைகளைப் பாலியல் கல்வி சார்ந்த உளவியல் அடிப்படையில் கதைகளாக்கியுள்ள நூலாசிரியர் திரு.கே.வி.குணசேகரம் அவர்களின் துணிவான அறிவியல் முயற்சி பாராட்டப்பட வேண்டியதாகும். இம்முயற்சியை முதன் முதலாக மேற்கொண்ட சமூகவியலாளராகவும் இந்நூலாசிரியர் திகழ்கின்றார். திருக்குறளில் இன்பத்துப்பாலில் உலகக் காதல் இலக்கியங்களுக்கு ஒப்பாக ஊடியும், உரையாடியும், பழகியும், பார்த்தும், உள ்ளத்தால் அனுபவிக்கும் இன்பங்களை, ஒருவகையாகவும்; உதாரணமாக "உவந்து உறைவர் உள்ளத்துள் என்றும்; இகத்து உறைவர் எதிலர் என்னும் இவ்வூர்" என்ற திருக்குறளுக்கு "உள்ளத்தில் வாழ்பவர்" என்ற தலைப்பில் எழுதிய கதை வடிவம ் குறளுக்கே மெருகேற்றுகின்றது. மற்று மொரு வகையாக, தலைவன் தலைவியின் அழகையும ் தலைவி தலைவனின் அழகையும் கண்டு மயங்குதல்; குறிப்பறிந்து இருவரும் கூடி ஐம்புல இன்பம் துய்த்தல், கூடி மகிழ்ந்த தலைவனும் தலைவியும் அவரவர் அழகைப் பாராட்டுதல். இருவரும் நாணத்தை விட்டு வருந்துதல், முன்பு நிகழ்ந்த ஊடலின் இனிய அனுபவத்தைப் பரிமாறல் உதாரணமான. "உணவினும ் உண்டது அறல் இனிது; காமம் புணர்தலின் ஊடல் இனிது" 2 என்ற குறளுக்கு "மிகுதியான இன்பம்" என்ற கதை வடிவம் நூலாசிரியரின் எழுத்தாற்றலைப் பறை சாற்றுகின்றது. இந்நூல், ஒருநாவல் வடிவின்

குறள்கதைகளின் தொகுப்பாக, திருக்குறளை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டுள்ள விதம் மேலும் இலக்கியரசனையை ஏற்படுத்துகின்றது. சமூக இயக்கத்தில் மனிததத்துவ அக வாழ்வியலை ஒரு பருவத்தோடு நிறுத்தாமல் அப்பருவ மகிழ்வின் காதல், கூடல், பாலுணர்ச்சி, அன்பின் உயிர்ப்பாய், நேசமாய், பாசமாய், பரிவாய், அருளாய், பரவி விரியும் பண்பாட்டியலை அழகிய நூலாக எழுதி எமக்கெல்லாம் நல்வழிகாட்டும் இந்த நூலாசிரியர் பணியும், அற்பணிப்பும், அன்றேல் பதவுரை, பொழிப்புரை, கதைக்குறிப்பு, விளக்கம் முதலியவை சார்ந்த போதனையாகவோ மட்டும் இல்லாமல் வாழ்வியலோடு அமைந்த செயன்முறையாகவும் நோக்கப்படுகின்றன. இந்நோக ்கிற்கு இயைபான ஒரு புத்தகமாகவும் இந்நூல் படைக்கப்பட்டுள்ளது. திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் எனக்கு அணிந்துரை எழுதித் தருமாறு வினவி, ஒரு நவீன இலக்கியத்திரனாய்வு நோக்கில் அதை ஆக்க வேண்டும ் என விரும்பினார். அவ்வகையில் புது இலக்கியத்திரனாய்வானது இலக்கியப்படைப்பை முற்றிலும் தன்னிறைவான ஒரு மொழிசார் கட்டமைப்பாகக் கொண்டு; படைப்பாளியின் நோக்கம் மற்றும் வாழ்வியல் அனுபவங்கள் வாசகனிடத்தில் நிகழக்கூடிய உணர்வு நிலைத்தாக்கங்கள் ஆகிய சார்பு நிலைகளினூடான இலக்கியப்படைப்பு தரிசனங்களை மறுத்து; அடிப்படையாக வாசகன் தன்னளவில் தன்னியக்க முள்ளவகையில் இரசனையுடன் பயன்படுத்தும் ஆற்றலுக்கான வழிகளைக் கண்டறிதல் என்ற வகையில் விரித்து சொல்கின்றது. இவ்விரிவானது இன்றைய இலக்கியத்திரனாய்வில் பின் நவீனத்துவ வெகுசனகலாச்சார பரிமானங்களினூடாக நோக்கப்படுகின்றன. பின் நவீனத்துவம்(ீழளவ ஆழனநசளைஅ) கல்வி, கலை, இலக்கியம்,பண்பாடு என்ற சகல துறைகளிலும் சுதந்திரத்தின் எல்லைகளை சுயமாக விரிக்க வேண்டும். முழு உலகு தழுவிய கொள்கைகள் மரணித்துவிட்டன. பல்வேறு பகுதியாக (Frasmantation) செயற்படும் இயக்கங்கள் தம் உள்ளியல்பு துலங்கற் இயங்குவதற்கு வழி விடப்பட வேண்டும். இலக்கிய ஆக்கத்தின் ஒவ்வொரு உயிரையும், ஒவ்வொன்றின் ஆக்கங்களையும், ஒவ்வொரு பாத்திரத்தையும் அவற்றின் இயல்பு நிலையிலிருந்தே வளர்க்க வேண்டும் என்கிறது. அவை தம் இயல்பினூடாக முகிழ்க்க வேண்டும். மேலும் வித்தியாசங்கள் என்ற கருத்தியல் இங்கு முக்கியப்படுத்தப்படுகின்றது. இவ்வாறான பின் நவீனத்துவ சிந்தனைகளின் பல பிரதிபலிப்புக்களை நவீன கதை இலக்கிய வடிவில் நுட்பமான பாத்திரப்படைப்புக்கள் மூலம் வெகுசன ஜனரஞ்சக இலக்கிய ஆக்கமாக நூலாசிரியர் இந்நூலை எழுதியிருக்கின்றார். ஒரு வாசகன் என்ற நிலையிலிருந்து இந்நூலை நோக்குகின்ற போது; வாழ்வியலின் மகிழ்ச்சியான மாற்றத்தை உள் வாங்குதல் (Absorbing Change), ஒரே வகையான வாழ்வை தொடர்ந்து அனுபவிக்கும் வேளை ஏற்படும் சோர்வும், சலிப்பும் மாறுதலை நோக்கிய சிந்தனையை மனிதனிடம் ஏற்படுத்துகின்றது. எனவே வாழ்க்கையின் எல்லாப்பகுதிகளிலும் இந்த மாற்றத்தை ஒவ்வொரு மனிதனும் எதிர்பார்க்கின்றான். இவ் எதிர்பார்ப்புக்களுக்கு; நாளைக்கும் இன்றைக்கும் சேர்த்து நேற்றே சிந்தித்த திருக்குறளின் இன்பத்துப்பாலின் குறள்களுக்கு

மாற்றத்துடன் கூடிய புத்தாக்கச் சிந்தனைகள் கதையோட்டங்களினூடாக ஆசிரியரால் பின்னப்பட்ட விதம் புதிய அனுபவத்தை ஏற்படுத்துகின்றது. தமிழை உலகிற்கும், உலகைத் தமிழுக்கும் அர்ப்பணித்த மதம் கடந்த மானுட தர்மத்தை இயம்பி நிற்கின்ற திருக்குறளுக்கு கதை வடிவத்தை இயம்பி நிற்கும் நூலாசிரியர் பின் நவீனத்துவ உலகம் தழுவிய இலக்கிய விமர்சனப் பார்வையில் பண்பாட்டுத் தாக்கங்களையும் இவ் ஆக்கம் மூலம் எடுத்துக்காட்டுகின்றார். மேற்கு நாகரிக மனிதன் ஒழுக்கப்பரிமானத்தை ( Moral Evolution) வலியுறுத்தி புதுமையானதும் என்ற வகையில் நிரந்தர ஒழுக்க கோவைகள் என எதுவுமே கிடையாது என்பதான கருத்துத்தையும் இக்கதை வடிவத்தின் பல சம்பவங்கள் நிராகரிக்கின்றன. இயற்கையுடன் இணைந்த காதல் வாழ்வியலின் மானுடதர்மம் இங்கே வலியுறுத்தப்படுகின்றது. இவ்வகையில் பின்நவீனத்துவ கருத்தியல் தொடர்பான மற்றொருவகை விமர்சனப் பாங்கிற்கான ஆதாரங்களையும் நூலாசிரியர் கதைச் சம்பவங்களினூடாக எளிமையான வாசகனைக் கவரும் சொல்லாடல்கள் மூலம் எடுத்துக் காட்டுகின்றார். உயர் இரசணைத்தன்மையும் சிறந்த மனப்பாங்கு உள்ளவர்களே புத்தாக்கத்திறன் உடையவர்களாக மிளிர்வார்கள். தம்மிடமுள்ள எண்ணக்கருக்களைக் கொண்டு, தனது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட வாழ்க்கை அனுபவங்களை தான் அடைந்த 3 இரசனை அனுபவங்களை வாசகர்களின் உள்ளத்தில் தோற்றுவிக்க இந்நூலாசிரியர் பலவித ஊடகங்களையும், நுட்பங்களையும் பயன்படுத்தி எடுத்த பிரயத்தனங்கள் இக்கதையாக்கக் களங்களில் பிரதிபலிக்கின்றன. அனுபவம், இரசிப்பு, அவதானிப்பு, வாய்ப்புப்பார்த்தலும் பிரயோகமும் புத்தாற்க்கத்திறனின் அடிப்படைகளாகும். இது சமுதாயம் நோக்கிய அதன் மெய்மை குன்றாத வகையில் உண்மை, அழகு, நன்மை, அறம், உணர்ச்சி ஆகிய கூறுகளுடன் சமுதாயத்தை அதன் முழு நிலையில் தரிசிக்க வைப்பதாகவும் இலக்கியங்கள் அமைய வேண்டும். இப்பார்வையிலிருந்து இக்கதையாக்கத்தை நோக்குகின்ற போது பல விதமான ஆர்வங்கள் எழுகின்றன. ஒரு படைப்பை அதன் பயன்பாடு கருதி திறனாய்வு செய்யப்படுதலை பயன்வழிக் கொள்கையாகின்றது. இதில் அழகியற் கூறுகளை விட படைப ்பினால் வாசகன், கலைஞன் எய்தும் பயன் உளத்திருப்தி முதனிலைப்படுகின்றது. இந்நிலையிலிருந்து நோக்குகின்ற போது சமுதாயத்தை அதன் இயல்பு நிலையிலிருந்து நோக்கி ஆண், பெண் உறவு நிலைப் பிரதிபலிப்புக்கள், நடைமுறை வாழ்வியல் உண்மைகள், அறிவுசார் கற்பனைகளின் தளத்தில் இன்பியலை மையமாக வைத்து நூலாசிரியர் தொகுத்துள்ள கதைவடிவங்கள் சமூக அசைவியல் உணர்வோட்டங்களுக்கான தெளிவுகளை இயம்பி நிற்கின்றன. கதை நடைபெறுகின்ற களம், சூழல், பண்பாட்டு செயலாற்றுகைகள் வாசகனின் இரசனையையும் இரச்சித்தல் உணர்வையும் அதிகரிக்கச் செய்கின்றது. இங்கு இரசித்தல் என்பது ஒரு மானசீகமான செயற்பாடாகவே நோக்கப்படுகின்றது. அதனைச் சொற்களால் விளங்குவதென்பது கடினமாகவுள்ளது. கதையை வாசிக்கும் போது ஏற்படும் அனுபவமாக அது பரிணமிக்கும் மனிதன் யாதேனும் ஒரு

நிகழ்வுப் புலன்களை வருடுவதால், ஒருவருக்குள் மானசீகமாக ஏற்படும் திருப்தி இரசித்தல் என்ற வகையில் திருக்குறளில் காமத்துப்பால் குறள்களின் பிழிவை தனது கதையாக்கத்தினூடாக எடுத்தியம்பியிருக்கும் நூலாசிரியர் திரு.கே.வி.குணசேகரம் அவர்களின் ஆக்கத்திறன், பன்முகப்பாங்கான எழுத்தாற்றல் போற்றுதலுக்குரியது. மேலும் பல புத்தாக்கங்களைத் தமிழுக்குத் தரும் ஆற்றல்களையும், ஆளுமைகளையும் உடைய அவர் பணி தொடர இறையருள் துணைநிற்பதாக.


பாலசுப்பிரமணியம் தனபாலன்
BA(Cey), DipinEd, M.phil in Education,
உபபீடாதிபதி(கல்வியும் தரமேம்பாடும்),

தேசிய கல்வியல் கல்லூரி, கோப்பாய்,
யாழ்ப்பாணம்.


அணிந்துரை

தமிழின் சுவையிலும் தமிழர் நலத்திலும் தளராத பற்றுக் கொண்ட பாரதிதாசன் "துன்பநேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்கமாட்டாயா?" என்றுதான் பாடினான். பழந்தமிழரின் பண்பாட்டு விழுமியங்கள் வாழ்வியல் மரபுகள் சீரழிந்து செல்லும் இக்காலத்தில், இச்சீரழிவை நிவர்த்தி செய்யும் நோக்குடன் ஒரு தலைவனும் தலைவியும் எவ்வாறு இன்பம் சேர்க்க வேண்டும் என்று இன்பத்துப்பால் அதிகாரத்தில் வள்ளுவன் அன்று கூறினானோ? அதை தனது கதை மூலம் இன்று மீட்டெடுத்திருக்கின்றார் இந்நூலாசிரியர் கே.வீ.குணசேகரம். தமிழரது வாழ்க்கை முறைமைகள் மீட்டெடுக்கும் நோக்கில் வாசகர் அனைவர்க்கும் துன்பம் சேர்ந்துள்ள இந்நாட்களில் இன்பம் சேர்ந்திருக்கிறார் நூலாசிரியர். இவர் எழுதிய பல கதைகளில், நாவல்களில் சமூக சீரழிவைச் சாடி அவற்றை செப்பனிடும் நோக்கிலேயே அவரது அக்கதாபாத்திரங்களின் அசைவுகள் தென்பட்டன. ஆனால் இந்நூலில் இவரது பாத்திரங்களின் அசைவுகள் தென்பட்டன. ஆனால் இந்நூலில் இவரது கதை எழுதும் பாணி இன்பத்துப்பாலில் ஒவ்வொரு குறளிலிலுமுள்ள தேனை வாசகர்கள் ஒரு துளியும் சிந்தாமல் நுகரும்படி செய்ததன் மூலம் தலைவனும் தலைவியும் எவ்வரையறைக்குள் இன்பம் சேர்க்கலாம் என்பதையும் இக்கதை மூலம் கூறியிருக்கின்றார். இன்பத்துப்பால் வாழ்வியலுக்கு எத்துணை முக்கியமானது என்று வள்ளுவன் எதை நினைத்து இயற்றினானோ, அதை அப்படியே இங்கு வரைந்துள்ளமை இவர் வள்ளுவனின் மனோநிலையை முற்றாக உணர்ந்ததன் இலட்சினை ஆகும். தலைவனும் தலைவியும் சேரும் போது அவ்விருவர் மட்டுமே இன்பம் நுகர்கின்றனர். ஆனால் இந்நூலாசிரியர் தனது பேனா முனையால் ஒரே நேரத்தில் பல்லாயிரக் கணக்கான வாசகர்களை இன்பம் நுகரவைத்துள்ளார். ஒரு கதாசிரியரிர் தான் கதை

புனையும் நோக்கில் சுதந்திரமாகக் கதா பாத்திரங்களை நகர்த்திச் செல்லலாம். ஆனால் இந்நூலாசிரியரின் இந்நூல் தொடர்பான பங்குபணி கம்பி ஒன்றில் ஏறி நின்று சமநிலையில் நடக்கும் ஒருவரின் சபதம போன்றது. குறள் சொல்லும வரையறைக்குள் மட்டுமே கதாபாத்திரங்களை நகர்த்திச் செல்வது என்பது அவ்வகையான சிக்கல் நிறைந்ததே. வள்ளுவரது கருத்துக்களைச் சிதைவுறாமல் அகத்திணை மரபுகள் தனிமணம் கமழும் விதமாக அக்காலத்து நிகழ்வுகளை இக்காலத்தோடு பொருத்தித் திறம்பட கதையூடாக எடுத்தியம்பும் திறனை இங்கு காண்கிறேன். கவிஞன் சுதந்திரம் உள்ளவன் சுதந்திரமாகச் செயற்படுவானாகில், தான் கண்டதைத் தன் கருத்தில் அமைத்துப் பாடுவது அவனுக்கு எளிது. ஆனால் இங்கு குணசேகரம் அவர்கள் வள்ளுவரது கருத்துச் சிதைவுபடாமல் காலத்தின் தேவைக்கேற்ப மிகமிக நுணுக்கமாகவே செயற்பட வேண்டிய நிலையில் தான் இதனைச் செய்திருக்க வேண்டும் என்று நம்புகிறேன். காட்சி, ஐயம், தெளிவு, தேறல், பகற்குறி, இராக்குறி என்ற அகத்திணைப் பண்புகளையும் இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது. அவற்றை அடிப்படையாகக் கொண்டு கதையை அழகு தமிழில் நகர்த்தி இருக்கிறார். வள்ளுவன் இருந்தால் எப்படி இதற்குப் பாத்திர வடிவமைப்புக் கொடுப்பாரோ அதோ போன்று உயிர் துடிப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றது. தகையணங்கு உறுத்துவதற்கு வள்ளுவர் எப்படிக் கற்பனை கண்டாரோ அதனை அப்படியே கருத்துக் களிப்பாக அமையாமல் ஐம்புலனுர்க்கும் விருந்தான சொல்லோவியமாகத் தந்திருக்கிறார். ஒவ்வொரு குறளமுதத்துக்கும் ஏற்ற பாத்திர வடிவமைப்பைச் சிருஷ்டித்து தந்துள்ளார். சில இடங்களில் நாமே நேரில் சென்று அக்காட்சியை நம் இரு கண்களாலும் நுகர்ந்தது போன்ற பெருமையை அடைகிறோம். இப்படியான இலக்கிய கர்த்தாவான கே.வி.குணசேகரம் அவர்களை நான் சிறுவயதில் இருந்தே அறிவேன். அவர் இலக்கிய ஆர்வம் கொண்டவர். பல பத்திரிகைகளிலும் அவரது கதைகள் வெளி வந்து பாராட்டைப் பெற்றன. நான் அவரது படைப்புக்களைப் படிப்பதில் தனி பொருட்பால் ஆகிய இரண்டுக்கும் தக்க வகையில் கதை ஆக்கினார். அதனை யாவரும் படித்து இன்புற்றனர். பலரது பாராட்டுக்களையும் பெற்ற குணசேகரத்தைக் காமத்துப்பாலைக் கதையாக எழுத வேண்டும் என நான் உட்பட பல நண்பர்கள் வேண்டியதற்கு அமைய இதனை அவர் ஆக்கினார். காமத்துப்பாலில் அகத்திணை மரபுகள் செப்பப்படுகின்றன. அகத்திணை மரபானது தலைவனும், தலைவியும் தம்முள் கூடிய கூட்டத்தினை பிறருக்கு உரைக்க முடியாமல் தம்முள் தாமே மயங்கி இன்புறுவது ஆகும். இதனை வாசகர்கள் படித்து இன்புறும் வகையில் உணர்வுகளை வெளிக்காட்டியுள்ளார் குணசேகரம் அவர்கள். இது அவரது படைப்பாற்றலையே பறைசாற்றுகிறது. ஓர் இலக்கியம் எக்காலத்தில் எழுந்ததோ அக்காலத்தின் தன்மைகளைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகவே அது அமையும். இவரது படைப்புக்கள் அக்காலத்தை இக்காலத்துக்கு செந்தமிழில் தருவனவாகவே அமைகின்றன என்பதில்

ஐயம் இல்லை. இவரது பணி மேன் மேலும் தொடர வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

எஸ். மகேஸ்வரதாசன்,

முதல்வர், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்,

ஸ்ரீலங்கா.

அணிந்துரை

**"மேதினிக்குச் செழுமை தரும் மெய்க்கலைஞன் வாழியவே"**

கட்டுரையும் கதைகளையும் கட்டுக்கட்டாய்

கற்பனையில் சுவைபடவே ஆக்கித்தந்தே

மட்டற்ற எழுச்சிதனை வாசகர்காய்

மாண்புறவே செய்தசீமான் கேவிகு

பட்டறிவும் வாசிப்பும் கிளர்ந்த சிந்தைப்

பக்குவத்தைச் சுவைபடவே ஊற்றும்பாங்கில்

கொட்டியதால் திருக்குற ளாத்திசூடி

வேதங்கள் ஆகமங்கள் பகவத்கீதை

மட்டில்லா வுபநிடதம் திருமந்திரத்தின்

உட்பொருளைக் கதையாக்கி உவக்கத்தந்தார்

தொட்டவையின் சுவைமணக்க மணிமேகலையும்

லங்கா அச்சகமும், குமரன் புத்தக வில்லமும் சேர்ந்து

கட்டில்லாக் கதைகளையே வாசகர்க்காய்

கனிந்துபல தேசமெங்கும் வைத்ததையா

நட்டுவிட்ட நாற்றின்மட்டம் பெருகுதல் போல்

நலம்தரவே தொடராக இவரின்கதைக்காய்

தட்டிநின்றார் பணி தொடர்ந்தார்

இன்பத்தை அள்ளிவைத்தா ரிந்துப் பாங்கில்

தத்துவத்தைக் கதையாக்கிச் சுவைத்துவாழ்வில்

தனித்துவத்தை நிலையாக்கும் மாண்பில்விஞ்சி

வித்துவத்தை விளைபொருளாய் விளக்கியிங்கே

விந்தைநிகர் விளக்கங்கள் பலவும் தந்தார்

நித்தமிவர் மொழிநடையில் எளிமையுண்டு

நீளிதிகாச புராணப் பொலிவு முண்டு

சித்தமுடன் நல்லவற்றை இயம்பும் பண்பு

சுத்தமுற மற்றவரின் மனதில்பதித்து

சுகம்பெறவே சுவைத்தொளிர ஈர்க்கும்பாங்கு

வித்தகன்தான் தமிழறிஞன் விதானம்பெற்றான்

விளைகல்விக் கோட்டத்தில் பணிப்பாளனாகி

முத்தமிட்டார் கல்விதனை முகிழ்க்கவென்றே

மும்மூரமாய்க் கலைவளர்க்கப் பணிகளாற்றி

அர்த்தமுடன் ஆதரவும் அன்புப்பிணைப்பும்

அகம்மலர முகப்பொலிவும் நரைமுடியும்

மொத்தமதில் செம்மையாளன் எழுத்தால்மக்கள்

நலிவுகளைக் கொய்துநலம் சிறக்கவைப்பார்.

தெய்வதரிசனங்கள் தோற்றங்கள் மறைபொருட்கள்

தேர்ந்துநோற்கும் நோன்புக்கள் பலாபலன்கள்

உய்யத்தம்வாழ்வின் நம்பிக்கை யொளிக்கீற்று

உறைமனித ஆரோக்கிய உன்னதத்தின் வழிமுறைகள்

கைமருந்து மனத்தூய்மை கணம் தோறுமதுதேவை.

கருத்தோடு தத்துவத்தின் தெளிபொருளினுள்ளே

மெய்யுணர்வு ஊட்டிடவே புறச்சமயவாதமிட்டு

மேதினிக்குச் செழுமைதரும் மெய்க்கலைஞன் வாழியவே.

வே. ஞானகாந்தன்,

அதிபர்,

யா.∴ இந்து ஆரம்பபாடசாலை,

யாழ்ப்பாணம்.

பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வித்துறைப் பேராசிரியரும்,

தேசிய கல்வி நிறுவக ஆலோசகருமாகிய

பேராசிரியர், கலாநிதி, இராமநாதன் சாந்தன் தூீ

டீ.யு (ர்ழளெ)இ டீ.நுன (ர்ழளெ)இ ஆ.யுஇ ஆீாடைஇ ீா.னு(நுன)இ ீா.னு ( ீ.யுனு)

அவர்கள் வழங்கிய,

"இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்" என்ற நூல்களுக்கான விமர்சன உரை.

நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.வி. குணசேகரம் அவர்கள் எழுதிய “இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்” நூலாக வெளிவருவது மட்டற்ற மகிழச்சியைத் தருகிறது.

இறைவனுடைய அருளால் மதங்கள் தோன்றின என்பது பொதுவான நம்பிக்கை. இறைவன், மெய்ஞானம் பெற்ற அருளாளர்களுக்குத் தரிசனம் தந்து அவர்களுக்குத் தந்த உபதேசங்கள் மதங்களாக அமைந்தன என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

இவ்வாறு தோன்றிய எல்லா மதங்களின் குறிக்கோள்களும் ஒரே இலக்கை நோக்கிச் சென்றாலும், அதன் அடிப்படையான அமைப்பு முறையில் பல மாற்றங்கள் உண்டு. இந்து மதக்கொள்கைப்படி மனிதன் தர்மத்திற்குக் கட்டுப்பட்டவன். அவன் தன் தேவைக்கேற்ப உலகில் உள்ள பொருட்கள் எல்லாவற்றையும் உபயோகித்துக் கொள்ளலாம். ஆனால் அவற்றைத் தன்நலம் கொண்டு அழிக்கச் சுதந்திரம் இல்லை. தர்மம் அவனைக் கட்டுப்படுத்துகின்றது; வழிநடத்துகின்றது. இந்து மதத்தின் நல்லியல்புகள், நல்லொழுக்கங்கள் இவை மனிதனுடைய தினசரி வாழ்வின் அடிப்படையாக இரண்டறக் கலந்ததாகப் பிரிக்க முடியாத படி சேர்த்துத் தரப்படுகிறது. அதனால் தான் இந்து மதம் ஒரு வாழ்க்கை முறை, ஓர் உன்னத நிலை என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது.

இவ்வாறு இறைவனருள் வாய்கப்பெற்ற திரு. கே.வி. குணசேரகம் அவர்கள் யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பெரும் சிந்தனையோடு இந்து மதத்தின் மகிமையைத் தக்க உதாரணங்களோடு எடுத்துக்காட்டி இந்நூலைகளை எழுதியிருக்கிறார்.

சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உளப்பாங்கின் வெளிப்பாட்டையே “பண்பாடு” என்று கூறலாம். இந்து தத்துவம், இந்து சமயம், இந்துக்கலைகள் ஆகிய இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகள் உணர்வுபூர்வமாகவும், அறிவு பூர்வமாகவும், பரப்புரை செய்யப்படுமானால் இந்து மக்களிடம் காணப்படும் பல்வேறு குழப்பங்கள் தீரும். மனம் தெளிவடையும். இந்துப் பண்பாடானது புறக்கோலத்தில் அழகையும் அமைதியையும் காணும் அதே நேரத்தில் அது ஓர் அகநிலை ஆன்மீக அமைதியையும் காட்சிப்படுத்துவதாக விளங்கும் சிறப்புடையது.

இந்நூலை ஆசிரியர் பத்துப் பாகங்களாக வகுத்துப் பமரமக்களும் விளங்கும் வண்ணம் மிகவும் எளிமையான மொழிநடையினை கையாண்டுள்ளமை சிறப்பான விடயமாகும். மக்கள் இந்து தத்துவங்களைப் புரிந்துகொள்ளாமையால் தான் அவற்றை மூடக்கொள்கைகளாக நினைக்கிறார்கள் என்றும், வாழ்க்கைத் தத்துவங்களைக் கேள்விக்குரியவைகளாக நினைக்கின்றார்கள் என்றும், புரிந்து கொண்ட இந்நூல் ஆசிரியர் மனிதனுக்கு இன்பத்தை அள்ளிக் கொடுக்கின்ற இந்து தத்துவங்களைக் கதையாக கூறுவதன் மூலம் அதிகபயன் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு சில தத்துவங்களை இந்நூலில் கதைகளாகக் கூறியுள்ளனர்.

ஒவ்வொருவரும் அனுபவித்துக் கொண்டிருக்கும் துன்பம் அவர்களது மத நம்பிக்கையீனத்தாலேயே வந்தது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும் என்பதனையும், தனக்கேற்பட்ட துன்பத்தைத் தானே நீக்க வேண்டும் என்று நினைப்பவன் தான் உண்மையான சமயவாழ்வு வாழ்பவன் என்றும் மிகவும் சிறப்பாக இந்நூல் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். சங்ககாலத்தில் சொல்லப்பட்டவை செய்யுள் வடிவில் காணப்பட்டமையினால் கற்றவர்களே அதை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு அதிகமாக இருந்தது. அதனை உணர்ந்த நூலாசிரியர் காலத்தின் தேவையை அறிந்து அதற்கேற்பத் தக்ககருத்துக்களோடு ஆக்கியுள்ளார்.

மேலும் இந்நூலில் பகவத்கீதை, திருக்குறள், வேதங்கள், உபநிடதங்கள், திருமந்திரம், இராமாயணம், ஆத்திசூடி, திருப்புகழ் போன்ற இன்னோரன்ன நூல்களைக் கற்று இந்து மதத்தின் மகிமையினை அருமையான பாடல்களையும் பொருத்தமாக மேற்கோள் காட்டி எழுதியுள்ள தோடு ஒவ்வொரு அத்தியாயங்களிலும் நிறைவாக ஒவ்வொன்றுக்கு மேற்பட்ட உதாரணங்களை முழுமையாகத் தந்துள்ளமை அறிவுக்காக இந்நூல் படிப்பது மட்டுமன்றி இன்பத்தை அள்ளித்தருவனவாகவும் இந்நூல் அமைகின்றது எனலாம். ஆராட்சியிலீடுபடுவோருக்கு ஓர் அறிவுப் பொக்கிச -மாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நூல்களின் தத்துவங்களை நன்கு ஆழமாகப் புரிந்து அதன் மூலம் அவர் தனது மனதில் கிளர்ந்தெழுந்த சிந்தனைகளையும்,

தத்துவங்களையும் இந்நூலினூடாக எடுத்துப்பேசி கற்றோர்க்கு மட்டுமன்றி கற்றுக்கொண்டிருப்பவர் களுக்கும் நன்கு பயன்படுத்தும் நூலாகவும் ஆக்கியுள்ளார்.

நான் அவரால் எழுதப்பட்டு வெளிவர இருக்கும் "இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்" என்னும் நூல்களை வாசித்துப் பார்த்தேன். அதில் இருக்கும் தத்துவ சிந்தனைகள் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. இந்நூல் சைவமக்களுக்கு மட்டுமல்லாமல், ஏனைய மதத்தினருக்கும் பயன்பாடுள்ள நூலாக அமையும் என்பது திண்ணம். அவருக்கு இந்நூல் மூலம் பெரும் புகழ் கிடைக்கும் என்பது எனது நம்பிக்கை.

இந்துமத மகத்துவத்தைச் சீரும் சிறப்பும் பொலிந்த நூல்வடிவாக அமைத்துச் சைவப் பெருமக்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு முதலியவற்றை வெளிப்படுத்தும் நோக்காக இந்நூல் வெளியிடப்படுவதனையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இவரிடம் சைவப்பண்பு, ஒழுக்கம், சைவசமய அறிவு, இறைபக்தி நிரம்பி இருப்பதை நான் கண்டுள்ளேன்.

இவர் மென்மேலும் சைவசமயத்துக்காக உழைத்துப் பல நூல்களை எழுதி மக்களுக்கு பயன்படக் கூடிய முறையில் இலகு தமிழ் எழுதி வெளியிட வேண்டும். அத்துடன் இவர் பல விருதுகளைப் பெற்று குடும்பத்தினருடன் சுகதேகியாக பல ஆண்டு காலம் வாழவேண்டுமென்று இறைவனை வேண்டி வாழ்த்துவதோடு, இந்நூலை எழுதி எம்சமுதாயம் நல்வழிப்பட உதவிய இவருக்கு வார்த்தைகளால் நன்றி சொல்லல் போதாது. ஒவ்வொருவரும் நூலைப் பெற்றுப் படித்து அதன் பயனைப் பெறுவதே நாம் செய்யும் கைமாறு எனக்கூறி இம்முயற்சி மேன்மேலும் வளர வேண்டும் என வாழ்த்தி அமைகின்றேன்.

சுபம்.

பேராசிரியர், கலாநிதி. இரா. சாந்தன் J.P

கல்வித்துறை,

பேராதனைப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

## அணிந்துரை

திரு. கே.வி குணசேகரம் அவர்களின் எழுத்துக்கள் பல்வேறு பரிமாணங்களிலும் தடம் பதித்துச் செல்வதைக் காணலாம். இவரது எழுத்துக்களில் உச்சமாகக் கொள்ளக் கூடியது திருக்குறள் கதைகள் தான் என்றால் அதுமிகையல்ல. இலக்கியத்தில் முதன்முதலாகக் குறள்களைக் கதைகளாக்கி அவற்றைச் சகல தரப்பினரும் விரும்பி வாசிக்கும் படி சுவைபடத் தந்தமை செயற்கரியதொரு செயலாகும். இதோடு வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை, திருமந்திரம், கந்தபுராணம், பெரியபுராணம், திருக்குறள் போன்ற நூல்களில் காணப்படும் அரிய கருத்துக்களை ஒப்பிட்டு ஒத்திசைவு கண்டு, அவற்றை வாசகர் பால் கொண்டுசென்று, அவர்களை மென்மேலும் சிந்திக்க வைக்கும் வகையில் எடுத்துக் கூறுவதைக் குறிப்பிட வேண்டும். மேற்கண்ட நூல்கலெல்லாம் கற்றுத் தேர்ந்த அறிவியலாளர்களால் மட்டுமே விளங்கிக் கொள்ள முடியும் என்ற மாயத்திரையை விலக்கி வாசிக்கும் எல்லோருக்கும் விளங்கவைப்பதில் வெற்றிகண்ட ஓர் எழுத்தாளர் இவர் என்பதில் ஐயம் எதுவும் இல்லை.

இந்த வகையில் இவர் ஆக்கித்தந்துள்ள "இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம்" என்ற பத்துப் பாகங்கள் என்னும் நூற்தொகுதி மிகுந்த பயனுடைய பொக்கிசமாகும். சிறுவர், பெரியோர், கற்றோர், கல்வியலாளர், மற்றும் தேடல் ஆர்வம் நிறைந்த எல்லாத் தரப்பினர்களையும் தன்பால் இழுக்கும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறப்பாக வித்துவத் தன்மை மிக்க கடுமையான மொழிநடையில் அல்லாமல் எல்லோரையும் சென்றடையும் நோக்கில் இலகு தமிழில் எளிய உதாரணங்களுடன் தன் உண்மை அனுபவங்களையும் ஒன்று சேர்த்து மிக அழகாக அமைந்துள்ளமையே இவரது வெற்றியாகும். ஒரு நூலின் வெற்றி என்பது எவ்வளவு தூரம் பரந்து விரிந்து வாசகர்களிடம் அந்நூலின் கருத்துக்கள் சென்றடைகிறது என்பது தான். அதனை இயல்பாகவே எழுத்தாளரின் திறமை வெளிப்படுத்தி நிற்கிறது.

அந்நூல்கள் மட்டுமன்றி புனைகதைத்துறையிலும் முத்திரை பதித்தவர் கே.வி குணசேகரம் அவர்கள். கையில் எடுத்தால் மீண்டும் வைக்கமுடியாத அளவுக்குத் துடிப்பாகவும் வேகமாகவும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கதை சொல்லும் பாங்கு வியக்கத்தக்கது. பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்த மனதில், உலவும் நிலவு, அவிழாத முடிச்சுக்கள், கண்களுக்குச் சொந்தமில்லை, போர்க்களம் முதலான நாவல்கள் இவற்றுள் சில உதாரணங்கள்.

பல்துறை விற்பனராக விளங்கும் எழுத்தாளர் நுனிப்புல் மேயும் பலர் மத்தியில் தான் தொடும் விடயங்களில் ஆழமான புலமையைப் பெற்று, அதன் பின்னர் அவற்றை எழுத்துருவாக்கம் செய்வது அவரது நூல்களைப் படிக்கும் போது தெளிவாகத் தெரிகின்றது. இவரது பேனாவின் நுகம் என்றும் ஓயாது என்று மட்டும் உறுதியாகக் கூறும் அதேவேளை இன்னும் இன்னும் பல்துறைகளில் எழுத வேண்டும் என்பது பல்லாயிரம் வாசகர்களின் விருப்பமாகும். அதனை அவர் நிறைவேற்றுவார் என்று நிட்சயம் நம்பலாம்.

நன்றி.

91, மானிப்பாய் வீதி, வா. ஜெயரட்ணம்

ஆணைக்கோட்டை. (ஓய்வு பெற்ற அதிபர்)

# tpkh;rd ciu

ஒருவர் தனது வாழ்க்கையில் பல்லாயிரக்கணக்கான மனிதர்களைச் சந்திப்பதுண்டு. இவர்களுள் மிகவும் அபூர்வமானவர்களை விதி வசத்தாலோ அன்றி அதிஷ்டம் காரணமாகவோ சந்திப்பதுண்டு. இவ்வகையில் நான் சந்தித்த மிகவும் அபூர்வமான ஓர் அறிஞர் தான் திரு. கே.வி. குணசேகரம்.

அவர் எழுதிய நாவல்கள் சிறுகதைகள், நாடகங்கள், திருக்குறள் கதைகள், பகவத்கீதைக்கதைகள், சிறுவர் கதைகள், கவிதைகள், இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம் என்ற கட்டுரை நூல்கள் பத்து ஆகியவற்றை எழுத்துப் பிழைகளை நீக்குவதற்காகப் படித்தேன்.

காதல், ஒழுக்கம், பண்பு, எல்லோரையும் சமமாக மதிக்கும் தன்மை, தவறு செய்தவர்களையும் மன்னிக்கும் பக்குவம், கருணை, இரக்கம் போன்ற பல நற்பண்புகளை உருவாக்கும் தன்மை இவரது படைப்புகளில் உண்டு. இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம், திருக்குறள் கதைகள், பகவத்கீதைக்கதைகள் என்பன இந்து தத்துவங்களுக்கு எளிமையான விளக்கங்களையும், சுவையான கதைகளையும் எமக்குத் தருகின்றன. வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ள சகல நிகழ்ச்சிகளுக்கும் அருமையான தமிழில் விளக்கம் தந்துள்ளார். இப்படியான விளக்கங்களை இதுவரை யாரும் தந்ததில்லை. காலத்திற்குக் காலம் பெரும் பெரும் ஞானிகள் தோன்றி இந்து சமயங்களை வளப்படுத்தினர். தற்போது கே.வி.குணசேகரம் அவர்கள் தற்போதுள்ளவர்களுக்கு விளங்கும் வகையில் இந்து தத்துவங்களைக் கதைகளாகவும், கட்டுரைக ளாகவும் எழுதி வருகிறார். இந்த வகையில் மூவாயிரத்திற்கும் அதிகமான கதைகளையும், ஐந்நூறுக்கு மேற்பட்ட கட்டுரை களையும் எழுதி இந்து தத்துவத்தை வளம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார். இந்துக்கள் அனைவரும் இதைக் கற்றுப் பயன் பெறல்

வேண்டும். மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் இந்து தத்துவங்களின் பிழிசாறாக வெளி வந்துள்ள இவரது நூல்களைக் கற்றுப் பயன்பெறவேண்டும்.

தமிழ் மக்களின் கலை, கலாச்சாரம், பண்பாடுகள் யாவும் மிகச் சிறப்பாகவும், அர்த்தம் பொதிந்தவையாகவும் இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதத்தில் உள்ளன. இந்துமதத் தத்துவங்களுக்குரிய அர்த்தங்களை இந்து தத்துவ நூல்களாகிய வேதம், உபநிடதம், திருமந்திரம், பகவத்கீதை, திருக்குறள், கந்தபுராணம், பெரியபுராணம், பதிணெண் புராணங்கள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி போன்ற பல நூறு நூல்களில் இருந்து அவர் பெற்றுள்ளார். இவற்றைப் படிப்பதன் மூலம் இந்து தத்துவங்கள் முழுவதையும் கற்ற உணர்வு உண்டாகிறது. பொதுவாக இந்து தத்துவ நூல்களைக் கற்றாலும் விளங்குவதில்லை. ஆனால் கே.வி. குணசேகரத்தின் நூல்களைப் படித்த பின் இந்து தத்துவங்கள் யாவும் மிகவும் இலகுவாக விளங்குகின்றன. பகவத்கீதையின் உரை, விளக்கம், கதை என்பன அதை வாசிக்கும் அனைவருக்கும் புரியும். இந்துதத்துவத்தை இந்துக்கள் சரியாகப் புரிந்து கொள்ள உதவும் இவரது பணிதொடர அவரது குல தெய்வமான நாவலர் ஸ்ரீவித்தியா மஹா கணபதி தொடர்ந்தும் தனது அங்குஷத்தால் எழுத வேண்டும் என்று அவரை நான் பிரார்த்திக்கின்றேன்.

செல்வி. ப. இறைமகள்.

ஆசிரியை,

யா/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்.

## அணிந்துரை

ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளரான திரு.கே.வி.குணசேகரம் அவர்களின் சேவை அளப்பரியது. இவர் தன் கல்வி பயிலும் காலம் தொட்டே பல நூல்களை வெளியிட்டதுடன் பல ஆக்கங்களைச் சஞ்சிகையினூடு பிரசரிக்கப்பட்டு பாராட்டுக்கள் பெற்றமை மிகவும் வரவேற்கத்தக்கது. அத்துடன் நின்று விடாமல் தனது ஆற்றல்கள் முழுவதையும் பயன்படுத்தி ஓய்வு நிலையிலும் கூட தமிழினை வளர்க்க வேண்டும் என நினைக்கின்ற தன்மை மிகவும் பாராட்டுக்குரியது.

மாணவர்களுக்கும் பயன் தரும் வகையில் தன்னுடைய தேடல்களை விரிவுபடுத்திக் கொண்டும் தமிழ்த்துறை ஆய்வாளர்களின் கருத்துக்களைக் கேட்டு அறிந்து கொண்டும் தன்னை வளம் மிக்க எழுத்தாளராக ஆக்கிக் கொண்டவர். மாணவர்களுக்காக உபநிடதங்கள், திருவருட்பயன், பகவத் கீதை, பிரமமாய் நின்ற சோதி, மாயை பற்றிய தத்துவக் கதைகள் போன்ற சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் நூல்களை எழுதி வெளியிட்டவர்.

இவற்றை விட சமூகமாந்தரின் விருப்பு வெறுப்புக்களைக் கதைகளாக்கி வெளியிட்டவர். கண்களுக்குச் சொந்தமில்லை, போர்க்களம், மனதில் உலவும் நிலவு, அவிழாத முடிச்சுக்கள் என்பன சமூசீர்திருத்த நாவல்களாகும். "கண்களுக்குச் சொந்தமில்லை" என்ற நாவல் மித்திரன் பத்திரிகையில் வெளி வந்து இலட்சக் கணக்கான வாசகர்களது மனதைக் கவர்ந்தது. காதல் கதையான இந் நாவல் மர்ம நாவல் போன்று முடியும் வரை முடிவை யாரும் நினைக்காதவாறு கொண்டு சென்றமை ஆசிரியரின் திறமையைக் காட்டுகின்றது. விறுவிறுப்பான இக்கதை அவரின் வல்லமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மேலும் இவரின் ஆக்கங்கள் இன்னும் தொடர வேண்டும் என்றும் இனிவரும் சந்ததியினரும் பயன் பெறும் வகையில் அமைய வேண்டும் என்றும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டிக் கொள்கின்றேன்.

நன்றி.

ப.யாழினி(வாசகர்)